LB
N17
118496

690 ... 1-1918

உ

பரமபதி துணை.

## அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

சகல கலைக்ஞான மென்று வழங்குகிற

# அமுத கலைக்ஞானம்

## ஆயிரத்திருநூறு.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மு. குழந்தைவேலுப்பிள்ளை அவர்கள்

ஓலையேட்டுப்பிரதியின்படி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1917.

இதன்விலை] — [ரூ. 1-4-0

118496

27. அப்பிரமணியம்
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மே மாதம் 1983 வருடம்
செப்பனிட்டு முடித்த
ஜூன் மாதம் 1983 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்

உ

குமரகுருபரன்றுணை.

அகஸ்தியமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

சகல கலைக்ஞானமென்று வழங்குகிற

# அமுதகலைக்ஞானம் 1200.

## காப்பு.

ஆதிபரா பரத்தினுட கிருபைகூர்ந்து - அப்பனே மனோன்மணியைத்
தொழுதுபோற்றிச், சோதியெனுங் கமலமல ரமுதங்கொண்டு - சுத்தாம்
போல் வாதத்தி லட்சங்காப்பு, நீதிபெற வைத்தியத்தி லிரண்டிலக்ஷம் -
நிலைத்ததொரு சூத்திரத்திற் கோடாகோடி, வாதியென வந்தோர்க்கும்
பெரியோருக்கும் - மனமகிழ்ந்து கருக்குருவாய் வசனித்தேனே. 1

## நூல்வகை.

வசனித்தேன் காவியந்தா னாயிரத்திருநூறுக்குள் - வண்மையுள்ள
சகலகலைக் ஞானமெல்லாம், நிசனித்தே னாயிரத்தி யிருநூறுக்குள் - நிச
சயமாய்க் கருக்களெல்லா மிதிலேசொன்னேன், நிசனித்த மந்திரங்கள்
சக்கரங்கள் - தீட்சையொடு சரக்குவைப்புச் செந்தூரங்கள், பசனித்த
பற்பவகை மெழுகுஜெயநீர் - பாங்கான தாம்பிரமும் சிமிட்டுப்போக்கே.

போக்கான யந்திரமா மயேந்திரசாலம் - புதுமையுள்ள அஞ்சனமும்
மையப்போக்கும், நீக்கான மறைப்போடு திலதப்போக்கும் - நேரான
மோடியிலே யனந்தப்போக்கும், வாக்கான பலிதமுள்ள கருவின்போக்
கும் - வஞ்சனைகள் பில்லியுட மார்க்கப்போக்கும், தாக்கான சரியை
யோடு கிரியைப்போக்கும் - தன்மையுள்ள யோகமுடன் ஞானமாமே. 3

ஞானமுடன் தேகசித்திக் கற்பக்கூறு - நல்மான தீட்சைமுதல் தியா
னப்போக்கும், ஊனான காயாதி கற்பப்போக்கும் - உண்மையுள்ள முப்
பூவின் கருவின்போக்கும், தேனான மதியமுதஞ் சமாதிகற்பஞ் - சித்
தமன தொன்றான அஷ்டபந்தங், கோனான குருவினுட கருணைபெற்
றுக் - கூறினேன் பன்னிரண்டு நூறுந்தானே. 4

தானென்ற பன்னிரண்டு நூறுக்குள்ளே - சகலகலைக் ஞானமெல்
லா மடக்கிப்பாடித், தேனென்ற மொழிபேரே யிந்தநூலைச் - சித்தெ
னவே சமாதிதனில் வைத்தேனப்பா, நானென்ற ஆணைவந்தால் சித்தர்
கூடி - நலமாக வந்தார்க ளொடுக்கந்தன்னில், கோனென்ற என்குரு
வே பூரணமேஐயா - கும்பமுனி சரணமென்று கூறினாரே. 5

கூறினேசொல் லேவிக்னேனே யென்றுரைநாளும் - குணமாக வந்தோர்க்கு ஆசனங்கள்போட்டு, மீறினது விதனைவே கேட்டேனப்போ - விளம்பினது ஆயிரத்தி யிருநூறுக்குள், தேறினது சொல்லும்தோர்கள் கண்டாராகும் - சிவசிவா கைலாசமிட மெகொள்ளாது, கோறினது என்னவையா வென்றுகேட்டார் - குணமான சித்தருக்கு மென்றுசொன்னேன்.

சொன்னவுடனடிபணிந்து சித்தரெல்லாம் - சன்மார்க்க குலகத்தோர் கண்டாராகும், என்னவையா வுலகமெலாங் சித்தாய்ப்போகும் - இதற்குச் சாபமது கவையிவாய், உண்மையுள்ள இந்தநூல் சித்தர்க்கேயாம் - உலகிலுள்ளோர்க் கிந்நூலைச் சித்தரிந்தால், நன்மைபெற வுதறிறுல் செந்திப்பற்றி - நமக்குடனவன்சிரசு தெறித்துப்போமே. 7

போமென்று சொன்னவுடன் சித்தரெல்லாம் - புகழான இந்நூலைப் பதனம்பண்ணி, [illegible] ஆசைவந்த [illegible] - நலமான இந்நூலைக் குகைக்குள் வைத்து, தேனென்ற அமுதம்போ லெடுத்துப் பார்த்து - சிவசிவா மறுபடியுங் குகைக்குள்வைத்தார், கோவென்ற குருவைப்போ லிந்நூலைத் - குருதால்போ லெவர்கள் பணிந்திட்டாரே. 8

சாபப்பதமம் சேர்ப்பு

பணிந்திட்ட இந்நூலைப் புலத்தியனேகேள் - பார்தனிலே யொருவருக்கும் பகாலேண்டாம், கணிந்திட்ட நூல்மைம்போ லிந்நூல்மைந்தா - கருவான பொருளென்னவே கருத்தினுள்வைத்து, அணிந்திட்ட மனம்போலே குருவைக்காரு - சொல்லாத பூரணத்தில் சொக்கியேது, அணிந்திட்ட வாசியிறு லறிவைப்பற்றி - அகார பூரணத்தி லருள்ஞானமாமே. 9

அருள்ஞான குருபதத்தை யமுத்திப்பாரு - அமுத்திமுனை பார்க்கையிலே யருள்தான்காணும், இருளான மாயைதனை யறுத்தாயியும் - இன்பமுள்ள பூரணத்தை யியல்பாய்க்கொண்டு, மருளான புத்திதனை யறுத்துத்தன்று - மதியான சந்திரனைக் கருத்திற்சேரு, உருவான பூரணத்தி லுரிமைவைத்து - உண்மையுடன் பூரணத்தி லுன்னிப்பாரே. 10

பூரணமகிமை.

உன்னுவது எவ்விடமென் றாய்ந்துகேளு - உண்மையுடன் சொல்லுகிறே னுனக்காயமைந்தா, கண்ணுவது அகாரமடா ஐயாஐயா - நலமான அகாரமொடு உகாரம் ரண்டும், சொன்னபொரு ளிவையுமொன்றாய்க் கூடும்போது - திருவுமுள்ள ஓங்காரம் மேதுக்கு, இன்னமொன்று சொல்லுகிறேன் புலத்தியாகேள் - இரவிமதி யற்றவிடம் தானுச்சே. 11

நீயென்ற சொல்லதுதா னுமொன்றுக்காகும் - நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் புலத்தியாகேள், கோவென்ற குருவாகுந் திருவுமாகும் - குரு விருக்கு மாயிரத்தெட் டிதழுமாகும், [illegible] மயிர்தாசப் பூரணமேயாகும் - சிதம்பரத்தின் குகாதி குருமாகும். [illegible] காதமுடன் விந்துவாகும் - உண்மையென்ற பொருளாகும் [illegible] 12



ஊமையென்ற பொருளேது ஐயாஐயா - உண்மையுட னெந்தனுக்கு வுரைக்கவேணும், ஆமையென்ற அகாரமடா உகாரம்ரண்டும் - அருள் பெருகிக் கூடினது மவுனமாகும், சீமையெங்குந் திரிந்ததனுல் மவுனமோ - சிவாயகுரு தேசிகனைக் கண்டாற்காணும், ஊமையென்ற சொல் லதினுல் ரோஷம்பெற்ற - துரோகியிடஞ் சொல்லாதே நூலைப்பாரே. 13

நூல்பார்த்தால் பூரணநூல் தன்னைப்பாரு - நுண்மையுள்ள தீட்சையதி னுணுக்கம்பாரு, கால்பார்த்து வறுதற்குக் கருவைப்பாரு - கருத்துவைத்து இந்நூலைக் கருவாய்ப்பாரு, சேல்பார்த்துக் கொள்வதற்கு ஆயுத்தைப்பாரு - சிவசிவா எந்தனுட பட்சணியைப்பாரு, கள்பார்த்துக் கொள்வதற்கு ஜோஸ்யம்பாரு - நன்மைபெற வேணுமென்றுற் குருவைக்காரே. 14

குருவான பதியறிந்து குருவைக்காரு - குருவறிந்து பூரணத்தைக் குணமாய்க் கொள்ளு, திருவிருந்து பூரணத்தைத் திலமுகமெகொண்டால் சிவசிவா கயிலாசதேசமாகும், மருவிருந்த ஆயிரத்தெண் மலருக்குள்ளே - மகத்தான அமுதமது சின்துகாணும், கருவான அமுதமதைக் கொண்டால்மைந்தா - காயசித்தி யோகமுடன் வாதமாமே. 15

வாதத்திற்குக் கருவுரைத்தல்.

வாதமப்பா பலப்பதற்குக் கருவைக்கேளு - மகத்தான பூரணத்தை மருவிப்பாரு, சேதமப்பா வொருநாளு மில்லையில்லை - சிவஞ்சக்தி இரண்டையுமே தினமுநோக்கி, பேதமப்பா ஒருநாளும் நினைக்கவேண்டாம் பலத்தபுத்தி அறிவதனுல் பேணிப்பாரு, காதமப்பா மின்றநிலை தன்னைப்பாரு - சுயமாக இந்நூலைக் காருகாரே. 16

இந்நூல்தா னயிரத்தி யிருநூறுக்குள் - இன்பமுடன் பமிரண்டையுரைசெறு திவைத்தேன், சொன்னதொரு நூல்களுக்கு இந்நூல்தானுஞ் சத்தமுள்ள குருநூலாய்த் தொழுதுபோற்று, நன்னயமா யிந்நூலை யார்க்கிந்தாலும் - நான்சொன்ன சாபமது பலிக்குமப்பா, தன்மையுள்ள புலத்தியனே யோகவானே - தகையிறு லிந்நூலைப் பதனம்பண்ணே. 17

பண்ணப்பா அடிமூல மேலாதாரம் - பாங்கான குண்டலியி லங்கேன் திட்டு, விண்ணப்பா மேல்மூல மாறுதாரம் - மெய்யான மவுனத்தை மேவியேபட்டு, கண்ணப்பா சுழிமுனையில் கடுகவுண்ணு - கற்பூர தீபமதைக் கருத்தாற்சேவி, உன்னப்பா அமுதமதை யுண்ணுவுண்ணு - உன்தேகம் விளக்கொளிபோற் சித்தியாமே. 18

சித்தியப்பா அடிமூல மேலாதாரஞ் - சென்றங்கே சதாசிவத்தின் திட்சைகூடிப், பத்தியுடன் ரேசகபூரகமுமபண்ணிப் - பதியான கும்பகத்தில் நின்றுயானுல், எத்திசையி லுள்ள அதி சயங்களெல்லாம் - ஏகாந்த மாகநீ யறிந்துகொள்வாய், புத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு - போதமென்ன பூரணமே சத்தியமாமே.

சத்தியமே தவறாமல் நினைக்கவேணுந் - தன்மையுண்டாய்த் தருமத்திற் பிரியவேணும், பத்தியுடன் பெரியோரைப் பணியவேணும் - பதறாமற் காயசித்தி பண்ணவேணும், புத்தியுடன் பூரணத்தைச் சரணவேணும் - பூரணமே செல்வமென்று புகலவேணும், சித்தியுள்ள சிதம்பரமே அம்மையமாய்த்தோன்றுஞ் சிவசிவா என்னசொல்வேன் பூரணத்தின்செயலே. 20

### சிதம்பரசிதா மகிமை.

செயலான சிதம்பரத்தின் மகிமைகேளு - சிறக்கவே ஆறுவரை நேரேறி, மயமான ஆறுவரை குறுக்கேறி - மைந்தனே யிருபத்தைத் தலையுமாச்சு, தயவான நமசிவய வென்றுபோட்டுத் - தன்மையுடனடுவிலே யைப் பிடித்துமாறு, சுயமான சிதம்பரத்தி னடனங்காணுஞ், சொல்லுவார் நடனசபை யென்றுபாரே. 21

பாரப்பா சிவாயநம வென்றுபோட்டுப் - பாங்காக நடுவிலேயைப் பிடித்துமாறு, கேளப்பா சின்மயமி லாசத்தன்னில் - நிச்சயமாய்க் கனகசபை நேரேதோற்றும், காரப்பா அதில்மனதை வைத்துக்காரு - கனகமது உனக்குநிக ருண்டோபின்னாய், கூரப்பா யநமசிவ வென்றுபோட்டுக் - குணமாக நடுவிலேயைப் பிடித்துமாறே. 22

மாறப்பா யான்சொன்ன படியேபார்த்து - மகத்தான புலத்தியனே சொல்லக்கேளு, ஆரப்பா வுனக்கிடு தில்லைராஜர் - அன்புடனே யெதிராக நிற்பார்பாரு, காரப்பா அவர்பதத்திற் றெண்டெண்ணிக் - கனிவாகத் தியானித்தா லப்பாகேளு, கூறப்பா. வுன்மனதில் நினைத்ததெல்லாம் - கூர்மையுட னீந்திடுவார் குருவைப்போற்றே. 23

### பஞ்சாட்சரமாறு.

போற்றப்பா நமசிவய வென்றுபோட்டுப் புகழாக நடுவிலேயைப் பிடித்துமாறு, நீற்றமுள்ள சிதம்பரமே நீயேயாவாய் - நீண்மையுடன் மந்திரங்க ளெல்லாஞ்சித்தி, வாய்த்திரிவு இல்லையடா மனமேசெம்மைவசியமுத லஷ்டசித்து மகிழ்ந்தாடும், பூத்தமலர் வாசனைபோல் பிரகாசிக்கும்-பூரணத்தைப் பிறவாதே புனிதமாமே. 24

புனிதமாய் வயநமசி யென்றுபோட்டுப்-பூரணத்தில் பற்றிமன தறிவில் நின்றால், இனிதமுள்ள காயசித்தி யாருமாரும் - இன்புதுன்ப மிரண்டினுட இயல்புகாணும், அனிதமுள்ள பீடையெல்லாம் விலகிப்போகும் - ஆறுருஞ் சிவனுமையு மன்பாகிவார், மனிதனென்ற பேர்போச்சு மகாத்மாவாச்சு-மாநிலத்தில் நீயுமொரு முனியாவாயே. 25

முனிவான அஞ்செழுத்தும் நமசிவயமாகும் - முதன்மையுள்ள அஞ்செழுத்துக் குயிரைகேளு, தனிவான சிதம்பரமே அல்லாதுண்டோ - தானவரும் நின்றதொரு பூரணமேயாகும், கனிவான பூரணத்தைக் கண்டால்முத்தி - கற்பமெனக் கொண்டாக்கால் காயசித்தி, மனியான மைந்தன் மணியாம் நமசிவயமென்று மைந்தனே மாறினதால் சித்தியாமே.



ஆமப்பா சிவத்தினுட கூறுசொன்னேன் - அப்பனே சத்தியுடனார்க்கக்கேளு, நாமப்பா சொல்லுகிறே முக்கோணவட்டம் - நன்மையுடன் நாற்பத்து மூன்றுமாச்சு, தாமப்பா நாலுபத்து மூன்றுக்குந்தான் - சக்கரையுடன் சிதம்பரத்தை நன்றாய்நாட்டி, காமப்பால் தானற்பாவிரண்டுங்கொண்டு - கருவேற வுருவேறக் கருத்திலானே. 27

ஊணப்பா சத்தியுட பூசையாச்சு - நுகோகோ சிவத்தினுட பூசையாச்சு, பூணப்பா சிவசத்தி இரண்டுங்கண்டு - புனிதமுடன் மனதறிவால் நின்றுகொண்டு, காணப்பா காலைசிவ மாலைசத்திக் - கருணையுடனிருவரையும் பூசித்தாக்கால், நானப்பா சொல்லுகிறேன் சித்திமுத்தி - நன்றான யோகமுதல் வாதமாமே. 28

ஆமப்பா அகமறியார் சண்டிமாண்பர் - அறுசுவையின் விவரமதை யறியாமூடர், நாமப்பா வென்றுஅகம் புகுதர்மாண்பர் - நன்மையுள்ள பூரணத்தை யறியாமாண்பர், . காமப்பால் கானற்பால் காணுமாண்பர் - கன்மவினை தீராத கழுதைமாண்பர், வாமப்பால் வகையறியா மடையர்மெத்த - வஞ்சருடன் சொல்லாதே மனத்தைப்பாரே. 29

### பூரணதரிசனமகிமை.

மனமான பூரணத்தை யார்தான்காண்பார் - மகத்தான குருசொல்ல அறியவேணும், இனமான வாசியைத்தா னார்தான்காண்பார் - இயல்பான யோகிசொல்ல அறியவேணும், குணமான குண்டலியைக் கண்டால்மைந்தா - குருவான பதிதலத்திற் கூடலாகும், கனமான கண்டமதி லங்கென்றேட்டுக் - கருத்தறவே குறியையுமெள்ளக் கருதிப்பாரே. 30

பார்க்கவென்ன தீபவொளி பளிச்சென்றேதான் - பண்பாகக் காணுமப்போ கண்தான்கூசும், மார்க்கமுடன் கண்கடுத்துக் கூசிற்றானால் - மருட்டுமெள்ள வுருட்டியே குறியிலேறு, ஏற்கையுட னிப்படியே பழக்கமானால் - என்னசொல்வே னந்திப்பிர காசமப்பா, சேர்க்கையுடன் அகாரமுகாரம்ரெண்டுந் - தினந்தோறுஞ் செபித்தவனே சித்தனாமே.

### காலவளவுகூறல்.

சித்தனா யிருப்பதற்கு அகாரதீட்சை - செபித்திடுவா யாண்டொன்றிற் றவாரமற்றான், முற்றுதலாய்த் தினந்தோறும் பழக்கமானால் - மூலத்தி லக்கினிதான் மூபன்றுகாணும், பற்றுதல்வி டாதபடி நின்றாயானால் - பாலனே மூலவன்னி அகன்றுபோகும், அற்றுதடா அசதியெல்லா மகன்றுபோகும் - அறுசுவையின் வீரெல்லா மகன்றுபோமே. 32

போனபின்பு உகாரத்தை மருவியேறு - புத்தியுட னண்டொன்றி லதின்மேல்தானும், ஆனபின்பு நீர்கடுத்து வெட்டைமீறும் - ஆக்கைதனில் வாய்வுநின்று பித்தமீறும், ஊன்சுவையில் மனம்வெறுத்து திகைத்துக்காட்டும் - உத்தமனே யிப்படிநீ யிருக்குதென்று, கோனருளைப் புலத்தியனே விட்டிடாதே - கொண்டுமென்ன வெற்றிவிடு வினைநில்லாதே. 33

வினையான பீடையது விலக்குதாரும் - வேணபடி கற்பமதை விரும்பியூட்டு, சுனையான சுனையெல்லா மோடிப்போருந் - சுந்தரம்போ லுன்தேசந் துலங்கும்பாரு; முனையான சுழிமுனைமேல் வாசியேற்று - முவுலகுங் காணுதற்கு முனைமேல்நில்லு, அணையான சற்குருவைத் தொழுதுபோற்று - தொழுகைவிட்டுத் தொழுதாக்கால் மனமேயாமே. 34

பேய்பிடித்துச் சாத்திரத்தை யுலகத்தோர்கள் - பேணியே படித்திடுவார் குருவைக்காணார், வாய்பழுத்த நாய்போலே யுலகத்துள்ளே - வகைக்கெறி யறியாமல் மாண்டுபோனார், நோய்பிடித்த சித்தர்கள்தா னனந்தமுண்டு-நோக்கியே யவர்களிடம் பேசவேண்டாம், தாயறியாப் பிள்ளையிடஞ் சேரவேண்டாந்-தன்மையுடன் பூரணத்தைப் போக்குவாயே. 35

### சடாட்சரமகிமை.

தன்மையுடன் சடாட்சரத்தின் மகிமைகேளு - தயவாக அறுகோணமிட்டுநின்றாய், உண்மையுடன் ஓம்நமசி வாயவென்று - உறுதியுள்ள கோணமதி லுகந்துபோடு, நன்மையுடன் சரவணபவவென்றேதான் - நாட்டடா கோணமதின் சுற்றில்தானே, உண்மையுடன் வட்டமிட்டுச் சூலமிட்டு - உள்ளிந்து தானெழுதி யோகம்பேறே. 36

போட்டவுடன் ரேசகபூ ரகும்பகண்ணிப் - புனிதமுடன் கும்பகத்தில் நின்றுகொண்டு, நாட்டமுடன் மனதுரைத்துச் செபித்தாயானால் - நலமான முருகனுமே பிரகாசிப்பான், தேட்டமுட னவர்பதமே பணிந்துபோற்றிச் - சிவாயகுரு தேசிகமே சிவமேஐயா, பூட்டுமுனைத் திறவுகோல் திறக்கவென்று - புனிதமுடன் தாவெனவே தருவார்பாரே. 37

### விநாயக சக்கரம்.

பாரப்பா கணபதியின் திறத்தைக்கேளு - பாங்கான முக்கோணமிட்டுக்கொண்டு, நேரப்பா அதினடுவே ஓங்காரம்போட்டு - நினைவாக அதினடுவே யோகம்போட்டுக், காரப்பா சதாசிவத்தைக் கருத்திலூணிக் - கருணையுள்ள கணபதியே நமவென்றேதான், கூரப்பா குருபதத்தில் நின்றுகொண்டு - கூர்மையுடன் செய்திடவே வருவார்பாரே. 38

பாரான கணபதிதான் பிரகாசித்தால் - பாங்காக அவர்பதத்தைப் பணிந்துபோற்றி, சோராக நின்றநிலை தன்னைக்கண்டு - நினைவுடனே கேட்டதெல்லா மீவார்பாரு; கூரான குண்டலிதான் பிரகாசித்தால் - குணமான அஷ்டசித்தும் கைக்குள்ளாகும், வீரான புத்திகளுஞ் செம்மையாகும் - வேண்டுவதுக் கிவர்திறந்தான் வேறும்பாரே. 39

### மானத பூசை.

பாரப்பா மானதமாம் பூசைகேளு - பருவமுடன் கால்முகங்கள் சுத்திபண்ணிச், சேரப்பா விபூதியைத்தான் உத்தளமாய்ப்பூசிச் - சித்தமனதொன்றாக அறிவிற்பூண்டு, சேரப்பா நின்றநிலை தவராமற்றான் - ரேசகமாய்ப் பூரணத்தைநினைவாயோட்டிக், காரப்பா கும்பத்தில் நின்றாயானால் - கருணையுள்ள சிவபூசை கோடியாமே. 40



கோடியென்று செத்திலேயோ கோடிகாணுவ - கூர்மையுள்ள மானதமாம் பூசைநேர்மை, பேடிகளாய்த் திரிந்திடில் வருவதேது - பெண்மயக்கங் கொண்டிடிற் காண்பதேது, நாடினதாய் நன்றாக நாட்டவேணும் - நாட்டிலுள்ள தபோதனரை வணங்கவேணும், வாடிமனந் திரிந்ததனா லொன்றுங்காணாப் - வஞ்சரிடம் சொல்லாதே மவுனம்பாரே.

மவுனமென்ற பொருளதிலே மனத்தையூனு - மனதாகப் பூரணத்தை வணங்கில்லு, தெவுனமுடன் பூரணத்தில் நின்றாயானால் - தேவட்ட அஷ்டசித்தும் கைக்குள்ளாகும், பவனமென்ற குண்டலியின் நன்மையாலே - பராபரத்தின் திருவையிறைற் பரிவாய்க்காணும், அவமான புத்திதனை நினைத்தாயானால் - அடிமுடியும் அப்பரத்தை அகன்றுபோமே. 42

### இரவி மண்டலம்.

அகலாத சூரியன்றன் மண்டலத்தைக்கேளு - அகாரமுடன் உகாரமதை யுன்னத்துக்கொண்டு, பகலான வுதயமதில் மகாரந்தன்னைப் - பருவமுடன் கும்பகத்தைப் பணிந்தாயானால், ஜெகமுழுது மாடிவருஞ் சூரியன்றான் - சிவசிவா பிரகாசஞ் சோதிக்கொப்பாம், இகலான மனக்கந்தா சித்தியாகும் - இருளகன்று வெளியாகும் மனதைப்பாரே. 43

மனதாகச் சந்திரன்றான் சூரியனிற்சென்று - வருவதுவும் போவதுவு மப்போகாணும், இனமான சந்திரன்றான் சூரியனேயாகும் - இன்பமுள்ள சூரியனே சந்திரனேயாகும், கனமாக நிலைத்ததுதான் சூரியனேயப்பா - கண்டதொரு சந்திரனே யெங்கேயென்றால், தனதாகச் சந்திடமிருந்தவையா - தானவனாய் நின்றதுதான் ரவியுமாச்சே. 44

### பஞ்சபூதாதிவகை யுரைத்தல்.

ஆச்சப்பா பிருதிவிதா னப்பைக்கொல்லும் - அப்பதுதான் தீயவே நெருப்பைக் கொல்லும், பேச்சப்பா நெருப்பதுதான் வாய்வைக்கொல்லும் - பேரான வாயுவுதா னெங்கேயென்றால், போச்சப்பா ஆகாசந் தன்னில்நின்று - புகழான விந்துவென வளர்ந்ததையா, நீசப்பா விந்துவது நாதமாச்சு - நிலைத்ததடா நாதமென்ற பெயருந்தானாச்சே.

பாங்கான நாதமதில் விந்துசேர்ந்து - பரப்பிரம ரூபமெனப் பாரின்மீதே, தீங்கான மாயையொடு வளர்ந்ததப்பா - நிலைத்தொரு பருத்தீவி லினைவிறைலே, நீங்கான மாயையெல்லா மறுத்துத்தள்ளி - தெட்சணை யேறுதற்குக் குருவைத்தேடி, ஓங்காரக் கம்பமதில் மனத்தைத்தைத்து - ஒருமித்தேன் குருபதத்தி லொருமித்தேனே. 46

### முப்பூவிவரம்.

ஒருமித்த முப்பூவின் விபரங்கேளு - உண்மையுடன் பூமிபடை நாதம்பாக்கித், தருமித்த சிறுநீரும் பாண்டத்திட்டுத் - தயவான வுவர்ப்பூனையதிலேபோட்டு, கருவுற்ற பாண்டமதைப் பதனமாக - கருவாக ஆவியுமுன் வைத்திடப்பா, மருவுற்ற வுவர்ப்பூவைக் கரைத்துநீயும் - வாகாக மதுபாண்டந் தன்னிற்றூவே. 47

தானேதான் பத்துமுறை யிந்தவிதம் - சமர்த்தாக முடிந்தபின்
சொல்லக்கேளு, வீணேதான் திரியாதே யிந்தவுப்பில் - விபரமுட
னிலைக்கிடைதான் வீரம்பூரம், தேனேதான் முப்பூவுமொன்றாய்க்கூட்
டிச் - செம்மையுடன் கறுநீரால் கல்வத்தாட்டி, கோனருளா லுருட்டி
யதை கட்டிப்பண்ணி - கொடுமையுள்ள ரவிமுகத்தில் வைத்திடாயே. 48

வைத்திடுவாய் ரவிமுகத்தில் நீறுமட்டும் - மைந்தனே பத்தெருவிற்
புடத்தைப்போடு, பெய்த்திட்ட சுண்ணமா மென்னசொல்வேன் - மெய்
யான சுண்ணமதைப் பதனம்பண்ணிக், கைத்திட்ட மாதவே சவுக்காரத்
தைக் - கருவாக விடுத்துவாங்கு கலசத்திட்டு, மைத்திட்ட மானமிது
நீரைவிட்டு - மைந்தனே ரவிமுகத்தில் வைத்துப்போற்றே. 49

போற்றியே ரவிமுகத்தில் வைத்தபின்பு - பூரணத்தை யுடன்சேர்
த்துப் பூரம்போட்டு, கூட்டியே கரைத்துநல்ல அடுப்பிலேற்றிக் - குமற
வே வைத்தெரிப்பாய் வற்றுமட்டும், சாத்தியமாய்த் திரியாமலெடுத்து
ப்பாரு - தன்மையுள்ள சவுக்காரஞ் சுண்ணமாகும், நாற்றிசையு மெய்க்
குமிக்கச் சவுக்காரத்தை - நன்மையுடன் பதனமாய் வைத்திடாயே. 50

வைத்தபின்பு சிறுநீரைப் பாண்டத்திட்டு - மைந்தனே ரவிநீசங்
கூடச்சேர்த்து, கைத்தபின்பு அடுப்பேற்றித் தீயைமூட்டி - நன்மையு
டன் நீர்வற்றி உப்பாய்நிற்கும், கைத்தவொரு நீருப்பைப் பதனம்பண்ணு -
கசடருட வீசருவைச் சுருதவேண்டாம், புத்தியுடன் பெரியோரைத்
தொண்டுபண்ணிப் - பூரணத்தைப் பற்றிமன தறிவிலிலே. 51

நில்லப்பா சுழிமுனையில் வழ்கென்றேறி - நிலையான மூலமதில் நிச்
சென்றேறி, செல்லப்பா கண்டமதில் அங்கன்றேதான் - திறமான ச
ராறு மடங்கும்வீட்டில், அல்லப்பா சொல்லுகிறேன் வீராறுந்தான் - அம
ர்ந்திருக்கும் குருபதத்தி லருளைப்போற்றி, வில்லப்பா நாணேற்றிச்
சரந்தொடுத்தாற்போல் - விசையான் சுழிமுனையில் மேவிப்பாரே. 52

பாரப்பா இரவிமதி சுடர்மூன் றப்பில் - பண்பாக வகைக்குஒரு
பலத்தைவாங்கிச், சேரப்பா கலவத்தி லிட்டுமைந்தா - சீக்கிரமாய் மூன்
றுமொன்றாய்ப் பொடித்துக்கொண்டு, வாரப்பா செயநீரை விட்டுமைந்
தா - வார்த்தநீர் வற்றுமட்டுங் கல்வத்தாட்டு, காரப்பா யீரறு சாமமட்
டுங் - கனமெழும்ப நன்றாக ஆட்டித்தீரே. 53

ஆட்டியதோர் முப்பூவை வட்டுப்பண்ணி - ஆதித்தன் முன்பாக உல
ரப்போட்டு, வாட்டுறவு இல்லாம லெடுக்கவேண்டாம் - வரிசையுள வட்
டதுவுங் காசிரீட்டாக்கால், நாட்டிகமாய் வட்டதுவைப் பதனம்பண்ண -
சமரசமாய்க் காற்றிலா விடத்திற்றுறைவும், மூட்டடா நாற்றெருவிற் புடத்
தான்போட்டு - மெய்ம்முனை உப்பதுவுஞ் சுண்ணமாச்சே. 54



### பூநீற்றுக்கட்டு.

ஆச்சப்பா யின்னமொரு விபரங்கேளு - அருளான பூநீறு அன்பாய்
வாங்கி, பேச்சப்பா வொன்றுமில்லை சுத்தசலந்தன்னிற் - பேணியே
கரைத்திறுத்து ரவிமுகத்தில்வைத்து, காய்ச்சப்பா இப்படியே பத்துமுறை
மட்டுங் - கருவான பூநீறு கட்டிப்போகும், போச்சப்பா ஆரலது போச்சப்
போச்சு - புதுமையுள்ள பூநீறைப் பதனம்பண்ணே. 55

பதமான காரமுடன் சாரம்வெண்டும் - பக்குவமா யொன்றாக்கி ரவி
யிற்போட்டு, சதமாகக் காய்ந்தபின்பு சாரஞ்சேரு - சாதகமாய் ரவிமுகத்
தில் பின்னும்வைத்து, இதமாக யிப்படியே பத்துமுறையப்பா - நிச்சயமா
ய்ச் செய்தாயிடு நினைவாய்த்தானும், விதமாகக் கட்டியது உப்பாய்ப்போ
கும் - விருதுபெற்ற வப்பதுதான் சொல்லக்கேளே. 56

கேளப்பா கட்டியதோர் பூநீறொன்று - கிருபையுள்ள களிச்சுண்ண
மிடையேசேர்த்து, கேளப்பா வீரமொடு பூரங்கூட்டிக் - கெடியாகக் கல
வத்திலிட்டுக்கொண்டு, நீளப்பா செயநீரால் விட்டாட்டி - நிச்சயமாய்
சாறு சாமமாட்டி, தேளப்பா கொட்டியது போலேவேகும் - சிவசிவா
என்னசொல்வேன் வட்டுப்பண்ணே. 57

பண்ணப்பா வட்டதுவும் நன்றாய்ப்பண்ணி - பரிதிமுக முன்பாகப்
பதியவைத்து, நண்ணப்பா சூரியனைப் பணிந்துபோற்றி - நன்றாகக்
காய்ந்தபின்பு ஓட்டில்வைத்து, மண்ணப்பா மேலோடு பொதியமூடி
மக்களே மண்சீலை வழுஞ்செய்து, உண்ணப்பா பத்தெருவிற் புடத்தைப்
போடு - ஓகோகோ சவுக்காரஞ் சுண்ணமாச்சே. 58

### சவுக்காரக் கட்டு.

ஆச்சப்பா இன்னமொரு விபரங்கேளு - அருளான சவுக்காரக் கட்டி
வாங்கி, மூச்சப்பா விடாமல் கலசத்திட்டு - முக்கியமுள்ள காரமுடன்
சாரஞ்சேர்த்து, காய்ச்சப்பா அடுப்பேற்றி நன்றாய்க்காய்ச்சு - கருணையுள்ள
சவுக்காரந் தெண்ணெய்போகும், பேச்சப்பா வொன்றுமில்லை சவுக்காரந்
தான் - பிலமாகக் கட்டியது செத்துப்போச்சே. 59

### கற்பூரக் கட்டு.

போச்சப்பா கற்பூரக் கட்டிவாங்கிப் - புதுமையுள்ள செயநீரில் தோய்த்
துத்தோய்த்து, காய்ச்சப்பா ரவிமுகத்தில் நன்றாய்க்காய்ச்சு - கருவாக இப்
படியே பத்துமுறை காய்ச்சு, மூச்சப்பா ஒடுங்கியது ஒடுங்கிப்போகும் - முக்
கியமுள்ள விளக்கொளியில் பிடித்தாயானால், ஆச்சப்பா தீபமது அணு
லொட்டாது - அன்பாகக் கட்டியது முழுக்கட்டாமே. 60

### துரிசுக்கட்டு.

கட்டான துரிசியொரு கட்டிவாங்கிக் - கருவான பாரையும்மை யதி
ன்மேற்பூசி, மட்டாகச் செயநீரால் தோய்த்துத்தோய்த்து - மைந்தனே
யக்கினியில் வாட்டிவாட்டு, இட்டமுட னிப்படியே பத்துமுறைவாட்டில்
இறுகியது துரிசதுவும் வெளுத்துக்கட்டும், சட்டமுட னித்துரிசைப்
பதனம்பண்ணு - சண்டாளர்க் கிந்தமுறை சாற்றவேண்டாம். 61

முங்கட்டுச் சுன்னம்.

சாற்றக்கேள் சவுக்காரங் கர்ப்பூரந்தான் - தயவான துரிசதுவு மூன்
றுங்கேளு, பார்த்தல்லோ மூன்றுமோ ரிடையாய்ச்சேர்த்துப் - பக்குவ
மாய்க் கல்வத்தி லிட்டுமைந்தா, வார்த்தரைக்க அறுவகையுந் தன்று
லாட்டு - மைந்தனே முப்பத்தி ரெண்டுசாமம், சாற்றுமே தானரைத்து
வட்டுப்பண்ணி - தளரவே ரவிமுகத்தி லுலர்த்திடாயே. 62

உலர்ந்தபில்லை ஓட்டில்வைத்து தமூடி - உத்தமனே மண்சீலை யே
ழுஞ்செய்து, அலர்ந்ததொரு எருவடுக்கிப் புடத்தைப்போடு - அப்பனே
நொருமித்துச் சுன்னமாகும், வளர்ந்ததொரு தீயாறி யெடுத்துப்பாரு - வடு
கனுக்கும் கணபதிக்கும் பூசைபண்ணி, மலர்ந்தபூச் சுன்னமப்பா சொ
டியவேகம் - மாசற்ற சுன்னமதைப் பதனம்பண்ணே. 63

பண்ணப்பா வெடியுப்புச் சீனக்காரம் - பாங்கான கல்லுப்பு மூன்று
மொன்றாய், கண்ணப்பா கல்வத்தி லிட்டுக்கொண்டு - கருவான வெடி
யுப்பு நீராலாட்டி, தண்ணப்பா ஈராறு சாமமாட்டு - சமர்த்தாகக் கன
லெழும்ப நன்றாயாட்டி, விண்ணப்பா ரவிதனிலே காயவைக்க - வித
மாக உருட்டியதை வட்டுப்பண்ணே. 64

பண்ணியதோர் வட்டதனை யோட்டில்வைத்துப் - பக்குவமாய்க் காய
வைப்பாய் பருதிதன்னில், புண்ணியனே வட்டதுவுங் கணீவிட்டாக்
கால்-புதுமையுடன் ஓட்டில்வைத்துச் சீலைசெய்து, நண்ணவே அஞ்சு
பத்து எருவிற்றாலும் - நாட்டியே புடம்போடு வெளுத்துநீறும், தன்மை
யுள்ள சுன்னமதாய் நீறிப்போகும் - தயவான சுன்னமதைப் பதனம்
பண்ணே. 65

கருவங்கச் சுன்னம்

பதமான இன்னமொரு சுன்னப்போக்கு - பக்குவமாய்ச் சொல்லு
கிறேன் புலத்தியாகேள், இதமான கருவங்கம் ரசமுஞ்சேர்த்து - இன்
பமுள்ள விந்துவுட னாதங்கூட்டி, சதமான வீரமுடன் பூரஞ்சேர்த்துச்-
சாதகமாய்க் கல்வத்தி லிட்டுக்கொண்டு, விதமாக அறுவகைநீர் தன்று
லாட்டு - விசையுடனே யீராறு சாமமாட்டே. 66

ஆட்டியதோர் வட்டதனை வட்டுப்பண்ணி - அப்பனே ரவிமுகத்தில்
நன்றாய்வைத்து, நாட்டியே காய்ந்ததொரு வட்டுத்தானும் - நன்மையு
டன் காய்ந்துகணீ விட்டால்மைந்தா, தாட்டிகமா யோட்டில்வைத்துச்
சீலைசெய்து-தன்மையுடன் நூறெருவிற் புடத்தைப்போடு. பாட்டிதகுஞ்
சொல்லவில்லை அப்பாகேளு - பண்பாக நீறியது சுன்னமாச்சே. 67

கற்பூரச் சுன்னம்.

ஆச்சப்பா இன்னமொரு விபரங்கேளு - அன்பான கர்ப்பூரக் கட்டி
வாங்கி, பாச்சப்பா ரவிமதியுங் கூடச்சேர்த்துப்-பரிசுடைய வீரமுடன்
பூரங்கூட்டி, காய்ச்சப்பா கல்வத்தி லிட்டுக்கொண்டு-கனலெழும்ப யீராறு
சாமமாட்டி, மாக்கலது செய்யாமல் வட்டுப்பண்ணி - மைந்தனே ரவிமு
கத்தி லுலர்த்திடாயே. 68



உலர்ந்தபில்லை தனையெடுத்து ஓட்டில்வைத்து - உத்தமனே மேலோ
டு பதியமூடி, தளர்ந்ததுவும் போகாமல் மண்ணேழுஞ்செய்து - தரணித
னில் ஒருமுழத்திற் குழிதான்வெட்டி, உலர்ந்ததொரு எருவடுக்கிப் புட
த்தைப்போட்டு - உத்தமனே புடமாறி யெடுத்துப்பாரு, மலர்ந்ததொரு
பூப்போலே சுன்னமாகும்-மாசற்ற சுன்னமதை வைத்துப்போற்றே. 69

கெந்தகச் சுன்னம்.

போற்றவே யின்னமொரு புதுமைகேளு - பொல்லாத கெந்தகந்
தான் பலமும்வாங்கி, காட்டியதோர் விந்துவுட னாதங்கூட்டிக்- கரு
வான வீரமுடன் பூரஞ்சேர்த்து, வாட்டமிலாக் கல்வத்தி லிட்டுமைந்தா-
வகையாக அறுவகைநீர் தன்றுலாட்டித், தாட்டிகமாய் வளித்துவைத்து 70
பில்லைதட்டித்-தன்மையுடன் ரவிமுகத்தி லுலர்த்திடாயே.

உலர்ந்தபத மென்னவென்றால் கணீவிட்டாக்கால் - உத்தமனே ஓட்
டில்வைத்துச் சீலைசெய்து, அலர்ந்தமலர்க் குருபதத்தைத் தொழு
பண்ணி - அளவுடனே புடம்போடச் சுன்னமாகும், மலர்ந்தசுன்னந்
தனையெடுத்துப் பதனம்பண்ணி - வாசமுள்ள சுன்னமடா மைந்தாகேளு,
சலந்துமிக வாடாதே பதனம்பண்ணு - சதாசித்தஞ் சதாசிவத்தைப் பணி 71
ந்துபோற்றே.

போற்றுவது யாரையென்றால் பூரணத்தை மைந்தா - புதுமையுள்ள
பூரணமே தெய்வத்தெய்வம், காட்டுவது சுழிமுனையில் வாசியைத்தான்-
நன்மையுடன் பூரகமே செய்யவேணும், தேட்டமுடன் சுழிமுனையில்
சேர்த்தால்மைந்தா - சிவசிவா சிவயோகி சீவன்முத்தன், தாட்டிகமா யடி 72
மூல மூலாதாரம் - தன்மையுடன் சார்ந்தவனே தவசியாமே.

பூமிநாதம்.

ஆமப்பா யின்னமொரு விபரங்கேளு - அன்பான பூமியுட நாதம்
வாங்கி, நாமப்பா சொல்லுகிறோம் விந்துநீரால் - நன்றாகக் கரைத்தி
றுத்து ரவியில்போடு, காமப்பா நன்றாகக் காய்ந்துதானால் - கருவாகப்
பத்துமுறை யிப்படியே காய்ச்சு, வாமப்பா தன்றாலே கட்டிப்போகும்- 73
மகத்தான பூவப்பா சிவமதாச்சே.

செயநீர்.

ஆச்சப்பா சத்தியென்ற பூரணந்தான் - அருளான பீங்கானில் வாங்
கிமைந்தா, பாய்ச்சப்பா சிவந்தனிலே யெட்டிலொன்று - பக்குவமாயீச்ச
வுடன் பருவம்பாரு, பேச்சப்பா வொன்றுமிலை சலமாய்ப்போகும்-
பெலமான செயநீரால் வீரம்பூரம், தேச்சப்பா செயநீரில் பொடியைத் 74
தூவி - சிவசிவா ரவிமுகத்தில வைத்திடாயே.

வைத்ததொரு செயநீரில் காரமேறி - மகத்தான கொடிதாக நீறதா
கும், வைத்ததொரு செயநீரைப் பதனம்பண்ணிக்-கருவான காசியென்ற
குப்பிதன்னில், புத்தியுடன் குருபதத்தைப் பூசைபண்ணிப்-புதுமையு
ள்ள வடுகனுக்கு வடமாலைசாத்தி, பத்தியுடன் பூசைபண்ணி செயநீர் 75
தன்னில்-பக்குவமாய்ச் செய்தொழிலைப் பகர்க்கேளே.

கேளப்பா இச்சலத்தில் அரிசுலிங்கம் - செவுரிசிலே தாரவெள்ளை பூரம்வீரம், நாவப்பா அவைத்தரவி முகத்தில்மைந்தா - நாளாறு தினத் திலது கட்டிப்போகும், மாளப்பா இச்சலத்தி லெச்சரக்குமாகு - மைந் தனே இந்நீரி லின்னஞ்சேரு, கோளப்பா ஒன்றுமில்லை செயநீர்தன்னைக் -குணமாகப் பீங்கானில் வார்த்துக்கொள்ளே. 76

கொள்ளப்பா நாகமொடு வங்கமீயம் - குருவான ரசமுடனே காந் தந்துத்தம், மெள்ளப்பா வோட்டில்வைத்துச் சுருக்குத்தாக்க - வேக மது தானடங்கிக் கட்டிப்போகும், வில்லப்பா தனக்குநா னேற்றிறுப் போல் - வெருவேவதைச் சனவேவதை கலிதமாகும், அல்லப்பா சொல் லுகிறேன் மனதடங்கிதில்லு - அன்பாகக் குருபத்தி லருள்தானேச்சே.

நோக்குவது பூரணத்தால் நோக்கவேணும் - துண்மையுடன் மன தடங்கி நிலைக்கவேணும், வாக்குமனே தொன்றுவி நிறுகவேணும் - வஞ் சமனக் கசடகற்றி மனதுபூண்டு, ஆக்கைகிலே தலையறிந்து குருவைக் காரு - ஆனந்த மதியமுதம் மன்பாய்க்கொள்ளு, நாக்குநுனி பதிவுபிக நன்றாய்ப்பாரு - நாதாந்தப் பேரொளியைக் காருகாரே 78

போகமுறை கூறுதல்

காரப்பா மயேந்திரமாய் கிரியிற்சென்று - கருணையுள்ள பூரணத்தில் கருத்தைவைத்து, பாரப்பா சக்கரத்தில் நின்றுகொண்டு - பாலகனே நந்திகண்டால் வாதங்காணும், வீரப்பா சொல்லுகிற வார்த்தையிது வென்ன - விருதாவிற் சுடுகாட்டுப் பிணமாய்ப்போவார், சேரப்பா மூல நுனி காணுமட்டுஞ் - சேர்ந்துநீ சுழிமுனையில் சிறக்கவில்லே. 79

நின்றதினுல் மனதொடுங்குங் காற்றுடாது - நேரறிந்து குருபதத்தை நினைவாய்க்காரு, பலவிதவினை காணகளும் பயமேயில்லை - பார்க்கை யிலே ஆதாரந் தோணுந்தோணுந், சென்றுநீ யவ்விடத்திற் சென்று கொண்டு - சிவசிவா சித்தியெல்லாந் திறமாயாடு, நன்றான மனதைவிட் டுக் காத்தாயாகுல் - கல்மில்லாச் சுழுத்தியுள்ளே யழுந்துந்தானே. 80

தானென்ற வாசியினுல் உருவைக்காரு - தன்மைவிட்டு இருந்தி ருவொன்றுமில்லை, வாறுன வாறறிந்து வுணரவேணும் - உண்மை யுள்ள சத்திசிவங் காணவேணும், தேறுன அமுதமது கொள்ளவேணும்- தெளிந்தங்கே யோகமுட னிருக்கவேணும், கோறுன குருஞானம் யத னிந்துமைந்தா - கூர்மையுடன் சுழிமுனையைக் கூர்ந்துபாரே. 81

பாரானா மண்ணாசை தள்ளிறுலும் - பண்பான தினியுடனாசையா லும், பேரான பெண்ணாசை தள்ளிறுலும் - பிலத்தகொரு திரோதா யின் கூற்றினுலும், கூறுன மண்ணாசைக் கொடுமையாலும் - கூற்றான காமத்தின் கொடுமையாலும், தேறுமலிந்தாசைக் கொண்டபேர்கள் - சிவசிவா சிவகலைத் திறங்காணுரே. 82



சிவகலை தனையறிந்தால் பாடிவிக்குஞ் - சிவசிவா வரிசையுட னுபன் னபண்ணும், சிவகலை தானறிந்தா லெட்டுநாலுஞ் - சிவசிவா புறப்பட்டு நாலும்பாழாய், சிவகலை மதிபோலே சிரனித்துச் - செகத்திலே மானி டர்கள் மாண்டாரய்யா, சிவகலை யானதுவே மூலமூலஞ் - செம்மை யுள்ள கதிரான வன்னிதானே. 83

தாவென்ற பரத்திறுட அடிதானென்பார் - தன்மையுடன் அகார முதல் சோடசமாயிருக்கும், வாவென்ற நாதமது கண்டத்திற்காணும்- மகத்தான வாயுவுக்கு வுகந்தவீடு, ஊவென்ற பஞ்சகர்த்தா விருக்கும் வீடு - உற்பனமாஞ் சத்திசிவ மொடுங்கும்வீடு, தேவென்ற மதியமுதஞ் சொலிக்கும்வீடு - சிவசிவா சிவகலை யிருந்தவீடே. 84

கோவிறும் பொருள்.

வீடறிந்து மந்திரத்தை நிறுத்தவேணும் - வீட்டிலுள்ள பேர்களையும் விரும்பவேணும், நாடறிந்து நல்லபதங் காணவேணும் - நன்மையுள்ள சத்திசிவ பூசைவேணும், கூடறிந்து குருபாதங் காணவேணுங் - குரு டரைப்போ லிருந்தாக்கால் குணமோமைந்தா, தேடறிந்தால் சற்குரு வைத் தேடவேணுஞ் - செகசால மாயையெல்லாந் தள்ளுதள்ளே. 85

தள்ளும் பொருள்.

தள்ளுவது யாரையென்றால் குணமில்லாரைச்-சற்குருவை யறியாத சமயத்தோரை. கள்ளுஅபின் சாரயங் கொண்டபேரைக் - கஞ்சாவுமீனி றைச்சி கலந்தபேரை, உள்ளுணர்வு பாராத வுலுத்தமானபர் - உத்த மரைத் தாநிந்தித்த வருட்டுமாண்பர். நல்லுணர்வு இல்லாத அசடர் மெத்த - நாட்டிலே யவர்களைநீ யறிந்துதள்ளே 86

ஆகார ஜெயநிருப்பு.

அறிந்துகொண்டு இக்காலே ரவியைக்கட்டு - அந்தரவி பூரணத்தி லணுவாய்ப்போகும், மூறிந்தாவி பூரணத்திற் பட்டபோதே - மூக்கிய முள்ள ஜலமாகி ஜெயநீராகி, செறிந்ததொரு செயநீரைப் பீங்கான் றன் னிற் - சிராக விட்டுரவி முகத்தில்வைத்தால், பொறிந்தவொரு பொறி போலே யுப்பாயிருக்கும் - புதுமையுள்ள உப்பதனைப் பதனமபண்ணே.

பதமான வுப்பெடுத்துக் கொண்டால்மைந்தா-பக்குவமா யதுகளை யுங்கழன்றுபோகும், சதமான பூரணத்தை யப்பால்பாரு-தருவான கற்பகம்போல் கப்பமாகும், அதமான வியாதியெல்லா மதமாய்ப்போகு ம் - ஆனந்த மயமான அருபமாகும், மதியான மாயையெல்லா மற்றுப் போகும்-மந்திரபஞ் சாட்சரத்தை மருவிப்பாரே. 83

பஞ்சாட்சரமகிமை.

மருவிநின்ற ஜனங்களுக்கு மஞ்சபூதம்-வாகான தேவதைக்கு மஞ்ச பூதம், தருவான யோனியெல்லா மஞ்சபூதந்-தாக்கான அண்டமெல்லா மைந்துபூதம், குருவான சதாசிவத்துக் கைந்துபூதம்-கூறான அஞ்செழு த்தா லெல்லாமாச்சு, துருவமுடன் வேடமிட்டு நீறுசாற்றித்-துன்பவினை தீராமல் துடிகொண்டாரே. 20

## முப்பூவின்பெயர்.

அடிகொண்ட முப்பூவின் பெயரைக்கேளு - சோதியப்பு முப்பூவின் [illegible] சொல்லக்கேளு. முடிகொண்ட வழலையென்றுங் கல்லுப்பென்றும்-முடியான கழிநீரென்றும், வன்னியென்றும், படியான படிகமென்றுங் குதிருடாரைப்-பங்கயத்தின் பூவென்றும் பாருப்பென்றும், வடிவான ஆகாசபுரவியென்றும்-மகத்தான மவுனமென்றும் வயங்கும்பேரே. 90

பேர்கொண்ட வடிவான விந்துவென்றும் - பிலத்தநீருப்பென்றும் வரிதிராவென்றும், கார்கொண்ட மேகமென்றுங் கன்னியென்றும்-கருவான சூதநீருப்பதென்றும், சீர்கொண்ட வெண்சாரை சாரமென்றுஞ்-சிவமென்றுங் கருவேம்பின் சாரமென்றும், ஊர்கொண்ட சவுக்காரமென்றுஞ் செயநீரென்றும்-உத்தமனே இராவகத்தி னுண்மைதானே.

உண்மையுள்ள அடியென்றுஞ் சத்தியென்றும்-உவரான வுவரென்றுஞ் சரகமென்றும், தன்மையுள்ள பூமியுடனாதமென்றுஞ்-சங்கையுள்ள பிருதிவியின் காரமென்றும், புன்மையுள்ள பூரமென்றும் புழுகென்றும்-பொல்லாத விஷமென்றும் போதமென்றும், பண்புள்ள சிவமென்றுங் களிப்பென்றும்-பாலகனே பூரணத்தி னுப்பின்பேரே. 92

## முப்புமகிமை.

உப்பான முப்பூவின் பெயருஞ்சொன்னேன் - உகமையில்லா முப்பூவு மூன்றுமுப்பூ, அப்பாகேள் முப்பூவும் பிரமாவிஷ்ணு-அகார ருத்திரனுமாகின்றார். தப்பாத முப்பூவை யாவர்காண்பார் - தன்மையுள்ள பெரியோர்கள் அறிவார்பாரு, மூப்பான முப்பூவும் மாதியிலே குருவாய்-முடிந்திருக்குதென்றறியார் மூடர்தானே. 93

தானென்ற மூடர்கள்தானப்பெருக்கவென்று-தயவான முப்பூவைப் பேதகமேசெய்வார், வானென்ற முப்பூவை யறியார்மூடர்-வாசிதீர் தனித்தழைத்து ரவியில்வைப்பார், தேனென்ற பூரணந்தான் மயங்கிப்பாரு-சிவசிவா காரமெல்லாஞ் செத்தேபோகும், மானென்ற பூப்பார்த்தால் மயங்கிப்போவான்-மனமடங்கும் பூவையார் முடிப்பார்சொல்லே. 94

சொல்லான முப்பூவை யுலகத்தோர்கள்-தொழுதுமே யதின்பெயரைத் தெளியமாட்டார், அல்லலதைச் செய்துவைத்து அலைந்துபோவார் - அமுதமென்ற பக்குவத்தை யார்தான் காண்பார், கல்லலதைச் செய்யும்பாவி தனித்தனியே வெவ்வேறாய்க் கலந்தெடுக்க வேணுமென்று கழுதைகளைப்பார், குலைசெய்து குழம்பிக்கெட்டே போனார்-குலமான வுப்பினுட செயலைக்காணாரே.

செயலதிபரப் பாவிகளைச் சேர்க்கவேண்டாஞ்-செப்பினேன் [illegible] கழுதையாமெனப்பர், மயலானதைத் தனைப்பிடித்து வாதமார்க்கம்-மகத்தான [illegible] யல்லல்செய்வான், தயவான கல்லுப்பை நொருக்கிச்சொன்ன [illegible] தானறாத்துப் புடம்போட்டுத் தயங்கிப்போவான், தயவான தயவான [illegible] மெத்தவுண்டு-சொல்லுவது விந்நாலைக் தலைக்கிடிட்டு. [illegible]



## நூற்பெருமை.

இந்நூல்தா னாயிரத்து இருநூறுக்குள்-ஏகசிற மயமான கருவைச் சொன்னேன், தன்மையுட னிந்நூலைப் பதனம்பண்ணு-சாயுச்சிய பதவியடா இந்நூல்தான், உண்மையுடன் நூலெடுத்து ஒடுக்கந்தன்னில்-உண்மையுடன் மவுனந்தா னுகந்துபாரு, நன்மையுடன் மனதுகந்து பார்த்தாயானால்-நல்லபத முண்டாகும் நாடிப்பாரே. 97

நாட்டமில்லா மூடரிடஞ் சொல்லவேண்டாம் - நல்லகுண மில்லாரை நாடவேண்டாம், கூட்டமிட்டுக் கல்லலிடுங் குறும்பர்மெத்தக்-கூத்தாடிச் சிலம்பதுபோற் குறும்புசெய்வார், வாட்டமிலாக் கருணைபெருந் தேவிவாலை-மகத்தான பூரணத்தின் மகிமைதன்னை, தேட்டமில்லா வம்பரிடஞ் சேரவேண்டாஞ் - சேர்ந்தாக்கால் பூரணத்தின் செயல்காணாதே.

காணாத பூரணத்தின் கருவினாலே-கருணையுள்ள கைலாச மேருதன்னைக், கோணாதே நின்றநிலை குறித்துக்கொண்டு-குணமாக ரேசகபூ ரகமும்பண்ணி, வாறான கும்பகத்தில் மனதுபூண்டால்-மகத்தான சிவயோகமாகுமாகும், தேனான மதியமுதச் செயல்தன்னாலே-சிவசிவா சிவயோகத் திறந்தான்பாரே. 99

## பஞ்சபூதமெழுகு.

பாரான பிருதிவியு மப்புங்கூட்டிப் - பங்கயத்தின் மேலேறிப் பதிவுமாகித், தேறாகத் தேய்வுடனே வாய்வுமிரண்டுஞ் - சேர்ந்தாக்கா லைந்துருவு மொன்றாய்ப்போச்சு, கூறாத ஐந்துருவு மொன்றாய் நின்றால்-குருவான போதமடா யார்தான் காண்பார், மாறாத மனமுடைய சித்தர்க்செல்வரம் - வகையாக ஐந்துருவும் வணங்கும்பாரே. 100

வணக்கமுள்ள ஐந்துருவு மைமந்தேயப்பு - வரிசையுட னிதையறிந்து கல்வத்திட்டு, இணக்கமுட னரைக்கையிலே மெழுகாய்ப்போகும்-என்னசொல்வே னிம்மெழுகி னியல்புதன்னை, மணக்கமுடன் மெழுகெடுத்துப் பதனம்பண்ணி - மார்க்கமுட னிம்மெழுகை வைத்துப் போற்றித், தனக்குமிது கிடைத்தபெருகு வென்றுநீயுஞ் - சதாகாலம் அம்மெழுகைப் பூசைபண்ணே. 101

பூசையது செய்ததினாற் பலிக்குஞ்சித்தி - பூரணத்தை மறந்ததினாலொன்றுமில்லை, நேசமுடன் பூரணமே தெய்வமென்று - நிலைத்துமனதுறுதியிலே நிறுத்தவேணும், ஆசையென்ன பூரணத்தி னாசையாசை-அதைவிட்டால் வேறுமொரு ஆசையுண்டு, பாசமதைத் தானகற்றி யறிவிற்சேர்ந்து - பரவெளியில் நினைந்ததினாற் பாலனாமே. 102

பாலனாய்ப் பதினாறு பிராயமாவாய் - பராபரைத்தாய் பூரணத்தாற் பலிக்குஞ்சித்தி, காலனென்ற காலனவ னோடிப்போவான் - காலனென்று சொன்னதுதான் பாசம்பாசம், ஆலமுண்ட சிவனாரும் விஷத்தையுண்டார் - அவ்விஷந்தான் பராபரத்தி னருளேயாகும், சிவமுடனாவ மென்ற விஷத்தான்போதஞ்-சிவசிவா பூரணத்தின் செயலைப்பாரே. 103

### கெந்தகமெழுகு.

பாரப்பா முப்பூவு மொன்றாய்ச் சேர்த்துப் - பரையென்ற நாதகெந்தி ரசமும்வீரம், சேரப்பா கல்வத்தி லாட்டினுக்கால்-சிவசிவா மெழுகது போற் சேர்ந்துநிற்கும், ஆரப்பா அறிவார்கள் கெந்திப்போக்கு-அறிந்தவர்கள் சதாசிவத்தை யறிவாரப்பா, நேரப்பா மின்றிலே தவராமற்றான்-நேசமுட னிம்மெழுகைப் பதனம்பண்ணே. 104

பண்ணப்பா பூசையினாற் பலிக்குஞ்சித்தி-பாசமதைத் தானறுத்து நேசம்வைத்து, உண்ணப்பா பராபரமே செயல்தா னென்று-உற்றுமெள்ள ஆறுதல மூரேசென்று, விண்ணப்பா தீண்டாதே சுடரைப்போற்று-வேதாந்த பூரணத்தில் விரும்பிநில்லு, கண்ணப்பா சுழிமுனையில் கருத்தாறு-கருவான பன்னிரெண்டு மடங்குந்தானே. 105

### தாளகமெழுகு.

தானென்ற சற்குருவா முப்பூவோடே - தன்மையென்ற தாளகமும் வீரம்பூரம், தேனென்ற ரசமுடனே கல்வத்திட்டுத்-திறமாக சாரா சாமமாட்டு, கோனென்ற மெழுகாகு மப்பாகேளு-குருவான மெழுகதுவைப் பதனம்பண்ணு, நானென்ற ஆணவத்தைப் போக்கிக்கொண்டு-நன்மையுட னிம்மெழுகைப் பூசைபண்ணே. 106

பூசையப்பா தினந்தோறும் பூசைபண்ணு - புலத்தியனே உனக்காக இந்நூலை, நேசமுட னுரைத்து விருநூறுக-நிலைத்தடா கருவெல்லாம் இதிலேயப்பா, பாசமதைத் தானறுத்துப் பதிவிருளைப்-பாய்ச்சடா மெழுகையுந் நவலோகத்தில், மாசியது தானறுத்துப் பழுப்பாயேறி-மகத்தான சிவகூத்தாய் மகிழ்ந்துகாணும். 107

மகிழ்ந்ததொரு சிவகலையைக் கண்டுநீயும்-மகிழாதே புலத்தியனே மனம்வேறாகும், நெகிழ்ந்தமன மிருக்குமடா வெகுநாட் செல்லும்-நேரான பூரணத்தை நெஞ்சிற்றுக்கு, பகுத்ததொரு சிவயோகப்பண்பில்நில்லு-பராபரமே கெதியெனவே பணிந்துபோற்று, தகுந்தமன முறுதியுடன் வலுத்துப்போகும்-தன்மையுள்ள பராபரத்தைத் தாக்கிப்பாரே. 108

### லிங்காசமெழுகு.

பாரப்பா முப்பூவும் லிங்கஞ்சேர்த்துப்-பஞ்சடைய வீரமுடன் புழுகு பூரம், சேரப்பா கல்வத்தி லொன்றாய்ச்சேர்த்துத்-திறமாக அரைக்கையிலே மெழுகாய்ப் போகும், வீரப்பா செய்யாமல் மெழுகுதன்னில்-விதமில்லா ரசமதிலே காலிலொன்று, காரப்பா கல்வத்தி லிட்டொன்றாய்-கருவிட்டு அரைக்கையிலே சேர்ந்துபோமே. 109

சேர்ந்ததொரு லிங்காச மெழுகுதன்னைத்-திறமான சிமிழ்தனிலே யடக்கம்பண்ணு, கூர்ந்துமெள்ளக் குருபதத்தைத் தொண்டுபண்ணிக்-கூர்மையுள்ள மெழுகதிலே குன்றிவாங்கி, நேர்ந்துகொண்டு இம்மெழுகைக் கொண்டாயானால்-நிலைத்ததடா சடலமென்ற கூடுதானும், தேர்ந்துநித்த மெழுகதிலே மண்டலமே கொண்டால்-சிவசிவா கவுனமென்ற சித்துந்தானே. 110



### ஆனைக்கல்சத்துமெழுகு.

சித்தான சித்திலொரு விபரஞ் சொல்வேன் - திறமான ஆனைக்கல் சத்துவாங்கி, முத்தான பூரணத்தை யதிலேசேர்த்து-மூர்க்கமுள்ள ரசமுடனே பூரங்கெந்தி, கர்த்தாவைத் தான்தொழுது ரவியில்வைக்கக்-கருணையுட னுலமது வொன்றாய்ச் சேர்ந்து, வற்றாத மெழுகதுபோ லிருக்கும்பாரு-வாகாக இம்மெழுகைப் பதனம்பண்ணே. 111

பதனமுட னிம்மெழுகிற் குன்றியுண்ணு-பதறாமல் மூலமதில் நின்றாயானால், விதனமெல்லா மோடிவிடும் பலக்குங்காயம்-மேன்மையுள்ள கற்போலே விளங்குந்தேகம், மதனன்போல் வடிவாகும் பிலமுண்டாகும்-மகத்தான அஷ்டசித்துங் கைக்குள்ளாகும், அதமான கருவிகள்தான் மெத்தவுண்டு-அசடரிடஞ் சொல்லாதே யறிவைப்பாரே. 112

அறிவான பூரணமே தெய்வந்தெய்வம் - அருமையுள்ள பூரணத்தை யார்தான் காண்பார், குறியான குறியறிந்த பெரியோர் காண்பார்-குண்டலியைச் சத்தியென்றுங் கூறுங்கூறும், நெறியான சிவயோக மார்க்கமெல்லாம்-நேர்மையுட னறிவிக்கும் பூரணத்தின்கூறு, பேரியான தேசியடா அகாரபீடம் - பரதேசி தனையறிந்து பணிகுவாயே. 113

### அபக்குவர்களிவரெனல்.

வாய்திறந்து பேசாத மண்டயர்மெத்த - வாயறிந்து சேராத குருடர்மெத்த, தாயறிந்து இணங்காத கழுதைமாண்பர் - தலைவனையு மறியாத சண்டிமாண்பர், காயறிந்து கனியறிந்து கொள்ளாமாண்பர்-காசினியில் மெத்தவுண்டு கருத்தில்லார்கள், தீயறிந்து அனல்மூட்டத் தெரியாமாண்பர்-சிவவேடந் தனையறியார் திருடர்தானே. 114

தானென்ற தத்துவத்தை யறியாமூடர்-தன்மையென்ற மனமொடுக்கும் நிலையுங்காணார், கோனென்ற குருபதத்தின் குறியுங்காணார்-குருடரவர் காயாசங் குறைமிட்டு, நானென்ற ஆணவத்தை மெத்தப்பேசி-நலமில்லா அஞ்செழுத்தை யுபதேசித்து, வீணென்ற வீண்மதங்கள் மெத்தப்பேசும்-வெள்ளாட்டுப் பயல்களுடன் சேராதையா. 115

சேராத கருவறிந்து கள்ளமாண்பர் - செத்தபிணம் போற்றிரிவார் சிவனேயென்று, கூறாத பொருளையெல்லாங் கூடுமென்பார்-கூறறிந்து நேராத குருடர்மட்டை, ஆறாறு தத்துவத்தின் செயலைக்காணார்-அகண்டபரி பூரணத்தி னறிவைக்கண்டு, தேறாத சித்தர்கள்தான் கோடியுண்டு-சிவசிவா தேறினபேர் கோடிக்கொன்றே. 116

ஒன்றான முப்பூவிற் காரஞ்சேர்க்க-ஒருமையுள்ள சாரநீரதுதானப்பா, பன்றான சேதியிது காரசாரம் - பருவமறிந் துலகமதிற் பகாமாட்டார், நன்றான புலத்தியனே யுனக்குச் சொன்னேன்-நலமறிந்தக் காரமதைச் சாரமென்பார், உண்டான சோதியடா ஆதியந்தம்-உரிமையுள்ள பூரணமென் றுகந்துநில்லே. 117

நில்லென்று முன்சொன்ன சாரநீரில் - நிசமான வீரமுடன் பூரஞ் சேரு, கொல்லென்று பொங்கியது அமரும்பாரு - கொடிதான நீரப்பா கூறப்போமோ, சொல்லென்ற அந்நீரைக் குப்பிதன்னில் - சுருக்காக அடைத்துநீ பணம்பண்ணி, வல்லமைகள் பேசாமல் மனதடங்கி-மகத்தான செயநீரைத் தொழிலைப்பாரே 118

லிங்கக்களங்கு.

பாரப்பா லிங்கமொரு கட்டிவாங்கிப்-பருவமுடன் செயநீரைச் சுருக்கித்தாக்கு, வீரப்பா கட்டியது அடங்கிப்போகும்-விசையான முப்பூவிற் செயநீர்விட்டு, காரப்பா கல்வத்தி லாட்டினூக்கால்- கருணையுள்ள மெழுகாகும் லிங்கத்தப்பி, சீரப்பா மண்சீலை யேழுஞ்செய்து-சிவசிவா காடைதனில் மணிபோலாமே. 119

ஆமப்பா லிங்கமணி தனையெடுத்து - ஆதியென்ற தங்கமதில் காலுக்கொன்று, நாமப்பா சொல்லுகிறோம் கொடுத்தா யானால்-நன்மையுள்ள லிங்கதங்க மொன்றாய்ச்சேர்ந்து, தாமப்பா லிங்கமென்ற களங்கதாகுந்-தயவான களங்கமதை யுடைத்துக்கொண்டு, வாமப்பா தனையறிந்து கொண்டுமைந்தா-மகத்தான மதிதனிலே பத்துக்கொன்றே. 120

ஒன்றான களங்கமதை வெள்ளிக்கீந்தால்-உத்தமனே வயதுபதி னாறதாகும், நன்றான வெள்ளிசெம்பி லீந்தாயானால் - நன்மையுட னைம்பதனை தப்பாதையா, கன்றான ருடவனிலே யீந்தாயானால் - கருவான வழியையுங் காணுங்காணும், அண்டர்பிரான் தொண்டரென அருளைப் பெற்று-அரகரா சிவயோக அருளைப்பாரே. 121

நாகக்கட்டு

பாரப்பா முன்சொன்ன சாரநீரிற்-பக்குவமாய் நாகமதை யுருக்கிச் சாய்த்தால், காரப்பா ஐந்துமுறை சாய்த்தாயானாற்-கன்மமுள்ள குடிலமெலாங் கழன்றுபோகும், சீரப்பா அடங்கியது மணிபோலாகுஞ்-சிவசிவா நாகமணி யென்னசொல்வேன். ஆரப்பா அறிவார்கள் நாகப்போக்கு-ஆதியந்தப் பொருளதிலு லடங்கிப்போச்சே. 122

அடங்கினதோர் நாகமதை யெடுத்துக்கொண்டு- அப்பனே தங்கமதி லிடைக்கிடைதான் சேர்த்து, தடங்கலில்லா மணியெடுத்து வுடைத்துமைந்தா-தயவாக வெள்ளிசெம்பி லீந்தாயானால், முடங்கலில்லா ஆறேழு வயதேயாகும்-மூடருக்கும் இக்கருவைச் சொல்லாதையா, திடங்களித்த அமுதமுண்டு குருவைக்காரு-தேசதிட்டை பதிதனிலே சேர்ந்துநில்லே.

நில்லென்று சொல்வதுதா னெங்கேயென்றால்-நிருமலமாங் குருபதத்தே நேர்ந்துநில்லு, தள்ளென்ற சொல்லதுதா னுரையென்றால்-தன்மையில்லா வண்டரைநீ தள்ளுதள்ளு, சொல்லென்று சொல்வதுதா னுரையென்றற்-குருவைவிட்டோர் துருகாத குறும்பர்தன்மேல், செல்லென்று மன்மதனைக் கொல்லவென்றற் சிவசிவா குருவருளைத் தினமும் போற்றே.



துரிசுசுன்னம்.

போற்றுவது பூரணத்தைப் போற்றிக்கொண்டு-புதுமையுள்ள துரிசுதனை சுன்னஞ் சொல்வேன், மாற்றுவது வழலையுட னிணங்கக்கூட்டி-மாறும லிடைக்கிடைதான் துரிசுகூட்டி, தாட்டிகமாய் கல்வத்தி லிட்டுக் கொண்டு- சாரசமாய் முன்னீரை விட்டுஆட்டி, வாட்டிவொரு வில்லை தனை ரவிமுகத்தில்-மைந்தனே நன்றாக வுலரப்போடே. 125

உலர்ந்தபின்னே தனக்குமேல் சீலைசெய்து-உண்மையுடன் காயவைத்துக் குருவைப்போற்றி, அலர்ந்தளரு தனை யெடுத்துப் புடத்தைப்போடு-அரகரா புடமாறி யெடுத்துப்பாரு, மலர்ந்ததொரு பூப்போலே நீறிற்கும்-மகத்தான சுன்னமடா என்னசொல்வேன், தளர்ந்ததொரு ரசந்தனைப் பழியாய்க்கொல்லும்-தன்மையுள்ள சுன்னமதைப் பதனம்பண்ணே.

ரசமணி.

பண்ணியதோர் சுன்னத்தின் மார்க்கங்கேளு-பாலகனே ரசமதனைச் சுத்திபண்ணி, இன்னமியென்ற தாம்பூரக் கிண்ணிதன்னிற்-கிருபையுள்ள ரசமதனை அதனில்வார்த்து, நன்னயமாய் ரவிதனிலே ரசத்தைவைத்து - நன்றான சுன்னமதை மேலேதூவி, சுன்னிமேயெல் வரிதனக்குப் பூசைபண்ணிக்-கையாலே மத்திக்கத் திரளுந்தானே. 127

திரளான ரசமதனை யெடுத்துமைந்தா-சிவசிவா வுண்டைபோல் திரட்டிக்கொண்டு, உறமான முப்பூவின் முன்னீர்விட்டு-உத்தமனே குப்பிமணி தனக்குப்பூசி, நிறமான ரவிமுகத்தி லுலர்த்திமைந்தா-நிச்சயமாய் விளக்கொளியில் வாட்டினூக்கால், பரமான பரமகுரு அருளினாலே-பக்குவமா யிறுகியது மணிபோலாமே. 128

ஆமப்பா யிம்மணிக்குச் சாரணைகள்தீர்ந்து-அருள்பெருகுஞ் சிமிழ்தனிலே யடக்கம்பண்ணி, காமப்பா சொல்லுகிறோம் நாவிலிட்டு-நன்மையுள்ள அமுதமது கொண்டாயானால், தாமப்பா வுனதுருவம் நிர்மலமாய்க்காணுஞ்-சச்சிதா னந்தவெளி தானேதோன்றும், காமப்பா தொண்டொரு திறத்தால்மைந்தா-கயிலாச மேருதன்னைக் காணலாமே. 129

வழலைநாதமுப்பூச்சுன்னம்.

காணப்பா இன்னமொரு முப்பூச்சொல்வேன்-கருவான வழலையுட நாதங்கூட்டி, பேணப்பா இந்நிடைக்குப் பூரஞ்சேர்த்துப்-பெருமையுள்ள கல்வத்தி லிட்டுமைந்தா, தேனப்பா முன்சொன்ன செயநீர்விட்டுத்-திறமாக அரைக்கையிலே காரமேறி, கோணப்பா தன்னருளால் சுன்னமாகிக்-கொண்டமையுள்ள சுன்னமதாய் நிற்குந்தானே. 130

அரிதாரக்கட்டு.

தாரமென்ற சுன்னமதை யெடுத்துக்கொண்டு-தாரமென்ற அரிதாரக் கட்டிக்கப்பா, வானென்ற செயநீரா லரைத்துமைந்தா-மகத்தான தாரத்துக் கங்கிபூட்டி, பானென்ற ரவிமுகத்தி லுலர்த்திமைந்தா-பக்குவமாய் மண்சீலை யேழுஞ்செய்து, தேனென்ற பூரணத்தை மனதில்வைத்து-சிவசிவா காடையென்ற புடத்தைப்போடே. 131

போட்டபுடந் தனையெடுத்துப் பார்த்தாயானால்-புதுமையுள்ள தார
மது கட்டிப்போகும், தாட்டிகமாய்க் கட்டியதோர் தாரந்தன்னைத்-தயவா
ன செம்புவெள்ளிக் கீந்தாயானால், ஈட்டமுட னீராறு வயதுபெண்தா
ன்-நாயகிபோ லுனதுமுன்னே காடிநிற்பாள், தேட்டமுட னவள்பதத்
தைப் பூசைபண்ணு-தெவிட்டாதே பூரணத்தைத் தினமும்நோக்கே. 132

நோக்குவது பூரணத்தை நோக்கவேணும்-நன்மையுள்ள லட்சணத்
தைப் பார்க்கவேணும், தாக்குவது ஒருநிலைக்கு ளிருளையெல்லாந்-தட்
டழித்து போகவே தாக்கவேணும், மார்க்கமுட னிம்முறைகள் பார்க்க
வேணும்-மந்திரமுஞ் சாட்சரத்தில் நிற்கவேணும், ஆர்க்குமிந்த முறைக
ளை நீ சொன்னாயானால்-அப்பனே யுனதுசிரம் வெடித்துப்போமே. 133

போமப்பா சகலசித்தும் பொய்த்துப்போகும்-பொல்லாத சண்டாளர்க்
கீந்தாயானால், நாமப்பா சொல்லுகிறோ மிந்தச்சாபம்-நம்மாலே தீர்ப்பத
ற்கு முடியாதையா, ஆமப்பா சொல்லிவிட்டோ மிந்தநூலை - அடக்கமப்
பா வெகுபதன மடக்கம்பண்ணு, தாமப்பா அடக்கம்விட்டு வெகுளியா
னால்-தன்னுடலைக் காணாமற் றயங்குவாயே. 134

நாகரசக்கட்டு.

தயங்காம லின்னமொரு விபரங்கேளு; தயவான நாகரசஞ் சரியாய்
ச்சேர்த்து, மயங்காம லடிமுடியுந் தாரிசிபூரம்-மகத்தான வீரமுடன் சேர
க்கூட்டி, தியங்காமற் கல்வத்தி லாட்டிமைந்தா - தேவியென்னு மால்
தேவிச் சிந்திபூட்டி, மயங்காது மென்றுநீ மண்சீலைசெய்து - நன்றாக
ரவிமுகத்திற் காயவையே. 135

வையப்பா ரவிமுகத்தில் நன்றாய்க் காய்ந்தால் - மயங்காமல் புடம்
போட மைந்தாகேளு, மெய்யப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு-
மேன்மையுள்ள ரவிபோலே கட்டிநிற்கும், கையப்பா வுதவுவது போலே
மத்தான்-கனமான ரவிமதியி லீய்ந்தாயானால், பொய்யப்பா சொல்லவி
ல்லை பத்துமாற்று-பொன்போலே யிருக்குமடா புகழ்ந்துகாணே. 136

காணப்பா உப்புடனே புளிபுஞ்சேர்த்துக்-களிப்பான குடவனைத்தான்
தகடாய்த்தட்டி, வீணப்பா சொல்லவில்லை தகடுதன்னில் - விசையான
அரைமருந்தை வினவிக்கொண்டு, பேணப்பா புடம்போடச் செம்பாய்ப்
போகும் - பிலத்ததொரு செம்புதனை உருக்கிக்கொண்டு, மாணப்பா
கட்டினதோர் தாரந்தன்னை-உகந்துடு கொடுக்கின்ற வரிசைகேளே. 137

கேளப்பா வுருகினதோர் குடவன்தன்னிற்- கிருபையுடன் வெள்ளி
யதி லீந்துகொண்டு, கோளப்பா வாரமதி ரண்டுஞ்சேர்த்துக்-குள்ளென்
று வுருக்கையிலே மைந்தாகேளு, வாளப்பா கட்டினதோர் தாரந்தன்னை-
வரிசையுடன் சொடுக்கையிலே வாங்கிக்கொள்ளும், தேளப்பா கொட்
டினதோர் விஷந்தான் சென்று-சிவசிவா பழுப்பேறித் தங்கமாச்சே. 138



சீனமாதிமுப்பூச்சுன்னம்.

ஆச்சப்பா இன்னமொரு முப்பூசொல்வேன் - ஆரகாரா ஆடுஉப்புக்
கிடைதான்கேளு, காய்ச்சப்பா காய்ச்சினதோர் கம்பிஉப்புங்-கருவான சீன
முடன் மூன்றுங்கேளு, பேச்சப்பா ஒன்றுமில்லை யிடைசரியாய்க்கொ
ண்டு-பெருமையுள்ள சாரநீர் விட்டேஆட்டி, மாச்சலென்று நினையாமல் 139
கல்வத்தாட்டி-மக்களே யுருட்டியதை வட்டுப்பண்ணே.

பண்ணியதோர் வட்டத்தை ரவியில்மைந்தா - பாங்காகக் | காய்ந்
திடவே காய்ந்துதானால், புண்ணியனே மண்சீலை செய்துகொண்டு - புட
தியுடன் புடம்போடு சுன்னமாகும், கன்னிமயேஸ் வரிதனக்குப் பூசை
செய்து-கருவான சுன்னமதிற் கவஞ்சிவாங்கி, தன்மையாய்த் தாரத்துக் 140
கக்கிபூட்டித்-தயவான சாரநீர் தன்னாற்றானே.

தானென்ற கவசமதை நன்றாய்ச்செய்து - தன்மையுடன் மண்சீலை
யேழுஞ்செய்து, கோனென்ற குருபத்தைத் தொண்டுபண்ணிக்- குண
மாக ரெண்டெருவிற் புடத்தைப்போடு, மானென்ற அரிதாரங் கட்டிந
ல்ல - மகத்தான தன்னிறமா யிருகிநிற்கும், தானென்ற ஆணவத்தைப் 141
போக்கிமைந்தா-தயவான தாரமதை யெடுத்துக்கொள்ளே.

கொள்ளப்பா கட்டினதோர் தாரந்தன்னைக்-கூசாமல் ரவிமதியி லீந்
தாயானால், விள்ளக்கே ளாறேழு மாற்றுக்காணும்-விசையான தாய்சேர்க்க
வெட்டுமாற்று, சொல்லக்கேள் புலத்தியனே தகடாய்த்தட்டிச்-சொல்லட
ங்காப் புடந்தனிலே யிறங்குந்தங்கம், சொல்லப்பா சிவயோக மார்க்கந் 142
தன்னிற்-சிவசிவா மனதறிவாற் றினமும்நோக்கே.

நோக்குவது பூரணத்தை நோக்கவேணும்-நன்மையுள்ள குருபதத்
தைப் பணியவேணும், நாக்குரிசை தனையகற்றிக் கனியேதின்று-நன்றா
ன கங்கைதனை நலமாய்க் கொள்ளு, வாக்குமன தொன்றாகி மனத்தை
க்காரு-மகத்தான ரேசபூரகமும் பண்ணு, தாக்குவது கும்பகத்தி லறி 143
வைமூட்டுத்-தன்மையுடன் யோகமதைத் தாக்கிப்பாரே.

பாரப்பா மூலமதைப் பூசித்தாக்கால் - பராபரத்தின் செயலதனைக்
காணலாகும், நேரப்பா பிறப்பிறப்பு ரெண்டுங்காணும் -நிலைதனில் மகத்து
வரே தெய்வமென்பார், ஆரப்பா சொன்னாலு மூலமேயாம்-அருளான
பூரணத்தை யறியாருடர், கூறப்பா உலகமெல்லாஞ் செனித்தவாறுங்- 144
கூர்மையுள்ள காதலித்து ரெண்டுந்தானே.

ரெண்டான பொருளறிந்து பூசித்தோர்கள்-நிலைத்தார்கள் கோடான
கோடிமட்டும், வண்டான ததுசென்று மதுவுண்டாப்போல்-மகத்தான
பூரணத்தை மருவிப்பாரு, அண்டர்கோ னருள்பெருகி உலகமீதில் -
அஷ்டமா சித்துகளு மாடிநிற்பான், பண்டான பரப்பிரம மாகியேதான்- 145
பாருலகிற் குருவாகித் திலங்குவானே.

நாகசரமுப்புக்கன்னம்.

அலக்கமதா யின்னமொரு முப்பூச்சொல்வேன்-சோதியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு. வலக்கமதாய்நாகமுடன் ரசத்தைச்சேரு-மகத்தான அடிமுடியுங் கூடச்சேரு, பழக்கமதாய் வீரமுடன் புழுகுசேரு-பங்கயமாங் கல்வத்தி லிட்டுக்கொண்டு, மலர்க்கமல நீராலே யரைத்தாயாறுல்-மைத்தனை மெழுகாகும் வட்டிப்பண்ணே. 146

பண்ணியதோர் வட்டகுவைக் காயப்போட்டுப்-பக்குவமாய் மண்சீலை செய்துக்கொண்டு, உன்னியதோர் முழமளவு புடத்தைப்போடு-உத்தமனே புடமாறி யெடுத்துப்பாரு, வெண்மையுள்ள சுண்ணமதாய் நீறிநிற்கும்-வேதாந்த ஆதிமுதல் குருவாயிற்கும், புண்ணியனே யிந்தநீ றதிசச்சுண்ணம்-பூரணத்தின் செயலதிலுந் சுண்ணமாச்சே. 147

ஆச்சப்பா இச்சுண்ணந் தாளகத்திலப்பி-அடைவாக மண்சீலை யேழுஞ்செய்து, காய்ச்சப்பா ரவிமுகத்தில் நன்றாய்க்காய்த்தால்-கருகாமல் பத்தெருவிற் புடத்தைப்போடு, மூச்சப்பா நடாமலுருகிநிற்கும்-மூவுலகு மெச்சுமடா இந்தத்தாரம், தாட்சிபொன்று மில்லைபடா ரவிமதியிற்றூக்கித்-தயவான பதினாறு மாற்றுப்பொன்னே. 148

பொன்னாகுஞ் செம்புதனிற் பத்துக்கொன்று-பூட்டினால் வயதேட்டாய்ப் புகழ்க்காரனும், உன்றனை மதிதனிலே பத்துக்கொன்று-வட்டினால் பத்தரைதான் அப்பாதையா, கன்றனை குடவனிலே பத்துக்கொன்றுகாட்டினால் எழமைக்கு அதிசங்காரனும், வண்ணமுள்ள மால்தேவி கூத்துமெத்த-வாக்கடங்கா மனமடங்காச் சித்தமாமே. 149

அரிசிமுப்பூர்கன்னம்.

சித்தான அரிசிமுப்பூச் சுண்ணஞ் சொல்வேன்-சித்தமுள்ள புலத்தியனே சொல்லக்கேளு, பத்தான சவுக்காரஞ் சீனங்கூட்டிப்-பசுமையுள்ள அருசவு யிடையேசேர்த்து, சத்தான இணைக்கலுடன் கூடச்சேர்த்துத்-தயவாக வாய்நீரால் கல்வத்தாட்டு, முத்தான மெழுகதுபோல் நிற்குமப்பா-மோசமொன்றும் நினையாதே வட்டிப்பண்ணே. 150

பண்ணியதோர் வட்டதனைக் காயப்போட்டுப்-பக்குவமாய்க் காய்ந்தபின்பு மண்ணேழுஞ்செய்து, தன்மையுடன் பத்தெருவிற் புடத்தைப்போடு-தணலாறி யெடுத்துப்பார் சுண்ணமாகும், புண்ணியவா றுறுக்கால் கன்றுய்நீறும்-புலத்தியனே யந்நீற்றைப் பதனம்பண்ணு, தண்ணியில்லாத் தவைகளிலே போட்டுப்பாரு-தயவான வாருதிபோற் செலமுமாச்சே. 151

செலமான நற்சலத்தை யொன்றில்வாங்கிச்-சிவப்பான தாரமதிற் சுருக்கித்தாக்கு, அழலான ஆறலது அற்றுப்போகும்-அதின்பிறகு சுண்ணமதைக் கவசம் பண்ணு, உலகளந்த அரிபிரமர் தேவிதானும்-உண்மையுடன் கைசமா யுகந்துநிற்பாள், கலகமது செய்யாமல் ரவிமதியிற்றாக்கு-கருணையுடன் பதினாறு மாற்றுப்பொன்னும். 152



பொன்றனை பொன்படைக்கால் பொன்னேயாகும் - பொல்லாத பாவியென்றால் மண்ணாய்ப் போகும், கன்றனை செயலறிந்தா லெல்லாம் தேன்றும்-கருவான குருவறிந்தா லெல்லாங்காணும், வின்றனை பதியறிந்து அமையுங்கண்டால்-வேணவிதங் கருவாகச் செய்யலாகும், பெண்ணை தனை கொண்டவரே யிணங்காதையா - பொருளாசை கொண்டவரைக் கொண்டவரே வினைத்துதன்னே. 153

வினைத்துயிகத் தன்றவது என்னவென்றாற் - செய்வில்லாப் புனியுடனே யென்றெனாய்தன்று. உணர்ந்தவரு மீனிறைத்திக் கஞ்சாவாகா-உண்ணவழிக்கும் கஞ்சா ராயமாகா, மணக்கமழும் பூரணத்தை யடைந்திபோர்-வாய்க்கடங்கா மதயபேசி நின்றாயானால், இணங்குவது பூரணத்தன் கடினமாகும்-என் மகனே புலத்தியனே யிந்நூலே. 154

இந்நூ லாயிரத்து இருநூறுகும்-ஏகாந்த மானகரு வதிலேதோற்றும், அந்தமுட றுதியென்ற பொருளேதோற்றும் - அவையடக்க மென்றநல்லா யிதிலேதோற்றும், வித்தையுள்ள விநோதமெல்லா யிதிலேதோற்றும்-வேடிக்கைச் சிமிட்டெல்லா யிதிலே தோற்றும், தந்திரங்களென்றதெல்லா யிதிலேதோற்றும்-சாயுட்சிய பதவிகளு மிதிலேதோற்றும். 155

தோற்றாத கருக்களெல்லா மிதிலேதோற்றுந் - ஆயமுதல் பரிசமுமிதிலேதோற்றும், ஆத்துமத்தின் கருக்களெல்லா மிதிலேதோற்றும்-அருள்பெருகும் பூரணத்தி னருமைதோற்றும், பாட்டான பரிபாஷை மிதிலேதோற்றும்-பக்குவத்தின் செயல்களெல்லா மிதிலேதோற்றும், காட்டாத கருக்களெல்லா மிதிலேதோற்றுங் - கபடமிட்டு வெருளிதனில் இல்லாதையா. 156

ஐயனே புலத்தியனே யுமக்காய்நாமும் - அருள்பெருகு மாயிரத்தி ருநூறுக்குள், மெய்யான கருக்களெல்லா மிதிலேசொன்னேன்-மேட்டியாய் இரியாமற் குருவைக்காரு, வையகமெல் லாந்திரிந்து அலைந்தாலுந்தான்-வாய்க்குமோ இக்கருக்கள் வாயாதப்பா, ஐயான வைகவினை கல்விக் கனிபோல்வைந்தா-கருவாக இந்நூல் பதனம்பண்ணே. 157

பதனமப்பா வெகுபதன மிந்நூலைப் -பார்தனிலே மாந்தருக்கு கந்தாயானால், விதனமப்பா சொல்வாயே யதிகசாபம்-வேண்டினு துன்றே தீர்க்கமாட்டாய், மதனமாய் மனமுடனி ருந்துகொண்டு-மகத்தான அஷ்டமா சித்துமாடு, இதமான பூரணத்தைத் தினமும்போற்று-இன்னமுடன் இன்னமொரு முப்பூச்சொல்வேன். 158

வழலைமுப்பூர்கன்னம்.

சொல்லக்கேள் புலத்தியனே வழலைதன்னை - சுத்தகெவ்லை தன்னிலே சுத்திபண்ணி, விள்ளக்கே ளருசதாஞ் சுத்திபண்ணு- வெண்மையின்ன சொல்வனடா வுகமையில்லை, கல்லான வழலைதனை யெடுத்தாமைந்தா-கருவாக இடைசமனுப் வீரம்பூரம், வல்லமையாய்க் கல்வமதி லிட்டுமைந்தா-வரிசையுடன் வெடியுப்புத் தன்னைவாட்டே. 159

ஆட்டிகன்றாய் மில்லைசெய்து வட்டுப்பண்ணி- அருள்பெருகு மண்சிலை
யதின்மேற்செய்து, காட்டான எருவதனிற் புடத்தைப்போடு-கனலாறி
யெடுத்திடவே சுன்னமாகும், தேட்டான தேட்டாரு மிந்தச்சுன்னந்-திரு
வான பிரிதிவியுந் தாரந்தன்னில், பூட்டாத கவசமது நன்றாய்ச்செய்து-
பொருந்தவே மண்சீலை யேழுஞ்செய்யே. 160

செய்ததொரு கவசமதைக் காயப்போட்டுச்-சிவசிவா ரெண்டெருவிற்
புடத்தைப்போட்டு, துய்தமுள்ள தாரமது சட்டிகல்ல-சோதியுள்ள அரு
ணனைப்போ லிருக்குமப்பா. பையவே கட்டியதோர் தாரந்தன்னைப்-
பாய்ச்சடா வெள்ளிதனிற் பத்துக்கொன்று, அய்யனே புலத்தியனே
சொல்லக்கேளு-அன்பாகப் பன்னிரெண்டு மாற்றுமாச்சே. 161

ஆச்சப்பா குடவனிலே யெட்டுமாத்து-அரகரா செம்புதனி லாறுமா
த்து, பேச்சப்பா வெள்ளிசெம்பு தன்னில்தாரல்-பிசகாது வட்டமாதா
ன் பேணிப்பாரு, நீச்சப்பா வெகுநீச்ச தாரக்கட்டு - நேர்மைசொல்ல
என்றாலே கூடாதையா, காய்ச்சப்பா மூலமென்ற நூயில்தன்னைக்-கருமனை
யெற மேல்மூலச் சுடரில்நில்லே. 162

சவுக்காரப்போக்கு.

இல்லப்பா சவுக்காரஞ் செய்யுமார்க்கம்-நிலைபெறவே சொல்லுகிறே
ன் மைந்தாகேளு, வல்லதொரு குளக்கரைவாழ் பிண்டத்தானை - மகத்
தான சிப்பியடா கும்பிடானே, விள்ளாமல் விள்ளுகிறோம் பூயிராதம்-
விசையான அடிமுடியும் சிப்பிப்போக்கு, சொல்லாமற் சொல்லுகிறே
மாதியந்தஞ்-சொரூபமுள்ள வஸ்துவைநீ வணங்கிப்போற்றே. 163

வணங்குவது எப்படித்தா னென்றால் மைந்தா-மயானமதி லிசிவேலா
தன்னிற்சென்று, இணங்குவதால் ருத்திரனைப் பணிந்துபோற்றி- இன்
பமுடன் கைவசமே செய்துகொண்டு, குணங்களொரு மனதாக வயிரவ
னைப்போற்று - குணமான ஆல்வள்ளிக் கிழங்குதன்னை, முனைங்காமல்
கருக்கியதைப் பாண்டத்திட்டு-முன்னீர தூப்பிட்டு அவித்திடாயே. 164

அவித்ததொரு கிழங்கதனை யெடுத்துமைந்தா -அடிகனத்த வுரல்தனி
லே யிட்டுக்கொண்டு, குவித்ததோ ரிருப்புலக்கைத் தன்றாற்குத்தி-குழம்பா
வே நன்றாக யிடித்துமைந்தா, தவித்தியமாய் நினையாமல் பாண்டத்திட்டு-
தயவான ரவிபீசங் கூடப்போட்டு, பவித்திரமா யைங்கோலத் தயிலம்வி
ட்டுப்-பதனமாய்க் கிண்டியே யுண்டைசெய்யே. 165

செய்யப்பா வுண்டையது விளாங்காய்போலே-திரமாக வுருட்டை
யிலே யிறுகிப்போகும், மெய்யப்பா சொல்லுகிறேம் சவுக்காரத்துண்டை-
விருதுபெற்ற சித்தர்கள்தான் செய்வாரப்பா, பொய்யப்பா சொன்னதி
ஞல் புலையனுவாய்-புகழான பூரணத்தைத் தினமும்நோக்கு, கையப்பா
வுதவவகா போலே மக்காள்-கருவாக இன்னமொரு காரஞ்சொல்வேன்:



சவுக்காரமிருக்குமிடம்.

சொல்லக்கேள் புலத்தியனே சவுக்காரந்தான்-சுயம்பாக இருக்குத
டா அறியமாட்டார், விள்ளக்கேள் வஸ்துவாய் நின்றுகொண்டு - விளக்
கொளிபோல நின்றவினை யாடுதய்யா, வல்லதொரு மயேந்திரமலைச்
சாரற்தன்னில் - வளர்ந்துயிருக்குஞ் சவக்காரம் புற்றுப்போலே; கல்லாப்
மானதொரு சவுக்காரத்தைத்-தனதாகக் கொண்டுவந்து நொறுக்கிடாயே.

நொறுக்கியது பாண்டமதி லிட்டுமைந்தா - நுண்மையாக் காடிவி
ட்டு மூப்புவிட்டு, குறுக்கின்றாய் வற்றுமட்டு மெரிப்பாயப்பா-குழம்பா
ன பருவமதில் தயிலம்வார்த்து, கருமிகப் போகாமற் கிண்டிகிண்டு-
கருகாத பதம்பார்த்து எடுத்துக்கொண்டு, உருக்கமுடன் குட்டோடே 168
யுருட்டிப்போடு-உத்தமனே யாறியபின் னிறுகிப்போச்சே.

போச்சென்று விடுகாதே யின்னமொன்று-புதுமையுள்ள சவுக்கார
ஞ் சொல்லக்கேளு, மாச்சுலொன்று மில்லையடா ஆதியந்தம்-மைந்தனே
சமூலமுங்கை வசமேசெய்து, பேச்சொன்று சொல்லாமல் நொறுக்கித்
கொண்டு-அப்புரிதான பாண்டத்தி லிட்டுமைந்தா, காய்ச்சுதற்குச் சுத்தசல 169
ம் நிரம்பவிட்டுக்-கசகாமற் கிண்டிவரிற் கரைந்துபோமே.

கரைந்துமிகக் குறுகினன்றாய்க் கொதிக்கும்போது-கருகாத பதம்பார்
த்துக் கிண்டிகிண்டு, திரைந்துமிகக் கடுகதின்மே லெண்ணெய்நிற்குஞ் -
சிவசிவா வெண்ணெய்தனை வடித்துக்கொண்டு, குறைந்துநின்ற கடுகத
னை யெடுத்துமைந்தா-கூசாமற் சுத்தசல மதனில்வார்த்து, வரைந்துமி
கக் கையாலே கரைத்துமைந்தா-வட்டோடு தனிலூற்றி ரவியில்வையே.

வையப்பா ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு - மக்களே யின்பொருகால்
சுத்தசலம்விட்டு, நையப்பா ரவிபீசங் கூடப்போட்டு-நன்றாக அடுப்பேற்
றித் தீயைமூட்டு, மெய்யப்பா சொல்லுகிறேன் பதமாய்க்கிண்டி-வெந்து
வரும் பதந்தனிலே தயிலம்வார்த்து, செய்யப்பா திரண்டுவரும் பதத் 171
தைப்பார்த்து-சிவசிவா வுருட்டிவைத்த் திரமாய்த்தானே.

வேறு-சவுக்காரக்கட்டு.

தானென்ற சவுக்கார மின்னமொன்று-தன்மையுள்ள புலத்தியனே
சொல்லக்கேளு, வானென்ற கற்சுன்னம் படிதானொன்று- வளமையுன்
ள பூரணத்தின் சுன்னமொன்று, தேனென்ற விந்துப்பு சுன்னமொன்
று-திருவான ரவிபீசஞ் சுன்னமொன்று, மானென்ற அருநீரிற் கரைத் 172
துக்கொண்டு-மகத்தான பாண்டத்தில் வாருவாரே.

வார்த்ததொரு பாண்டத்தை அடுப்பிலேற்றி - வாகாகத் தீயெரிப்பா
ய் வற்றுமட்டும், பார்த்து மிகப் பதனமாய்க் கிண்டிகிண்டு - பாலகனே
திரண்டுவரும் பதத்தைப்பாரு, சேர்த்துமிக ஒன்றாகத் திரட்டிக்கொண்
டு-சீக்கிரத்தில் தயிலமதில் வார்த்துக்கிண்டி, போர்த்தியே யுண்டைசெ 173
ய்வாய் விளாங்காய்போல-புகழாக இறுகியது கல்லுப்பாமே.

வேறு-சவுக்காரக்கட்டு.

ஆமப்பா இன்னமொரு காரமசொல்வேன்-அரசுரா கும்பிகைற் கன்னத்தோடு, நாமப்பா காரமொடு சாரங்கூட்டி - நன்மையுள்ள வீரமொடு பூரஞ்சேர்த்து, சாமப்பால் கானற்பால் தன்னாலாட்டி-கருவான அறுவகையிற் கரைத்துக்கொண்டு, வாமப்பால் பாண்டமதி லிட்டுமைந்தா-வன்மையுள்ள அடுப்பேற்றி யெரித்திடாயே. 174

எரித்துமிக வருகையிலே குழம்புபோலே - இருக்குமே நன்றாகக் கிண்டிகிண்டு, கரித்துமிகப் போகாமற் கிண்டிப்போது-கருவான தயிலமந்த அதிலேவாரு, உருக்குமிக அதில்வார்த்துப் பதந்தைப்பாரு-உருண்டுவரும் பதங்கண்டு வுருட்டிக்கொண்டு, இருந்துவங்கள் பண்ணுறல் விளாங்காய்போலக்-கிருகபுட ஞருட்டையிலே யிறுகிப்போமே. 175

வேறு-சவுக்காரக்கட்டு.

போமென்று சொல்லாமல் லின்னமொன்று-புதுமையுள்ள சவுக்காரஞ் சொல்லக்கேளு, நாமென்ற ஆணவத்தாற் சொன்னேனையா - நல்லகல் லுப்புடனே கறியுப்போடு, கோவென்ற வெடியுப்பு இந்துப்போடு - குருவான பூநீறு விளையுப்பு, மாவென்ற வீரமொடு பூரங்கூட்டி-மகத்தான அறுவகையால் கரைத்துப்போடே. 176

கரைத்திறுத்துப் பாண்டமதி லிட்டுமைந்தா-கருத்துறவே அடுப்பேற்றித் தீயைமூட்டி, முறைத்துமிகப் பொங்கியது போகாமற்றான்-மூர்க்கமுடன் காண்டியதாற் கிண்டிகிண்டு, உரைத்துமிகக் கிண்டுகையில் திரளுமைந்தா-உத்தமனே அப்பதத்தி லுருட்டிப்போடு, கருத்துறவே சவுக்கார மதிகாரம்-காரணத்தால் பூரணத்தைக் கருத்தில்வையே. 177

கருத்துமிக வுண்டானு லெல்லாமுண்டு - கண்கெட்ட குருடரைப் போ லிருந்தாயானால், உருத்துவுடன் திட்டிறு விராதுகண்டர் ளாடும் வாசியைநீ காணமாட்டீர், மரித்துமொரு காரணங்க ளாட்டமாட்டீர்-மகத்தான சற்குருவை யறியமாட்டீர், சிரித்துமிகக் கொண்டிரானால் வருவதேது-சிவசிவா சிவயோகத் திறத்தைப்பாரே. 178

வெண்சாரைகற்பம்.

பாரப்பா மயேந்திரகிரி தன்னிற்சென்று - பக்குவமாய் நீயிருக்கும் போதுமைந்தா. நேரப்பா வெண்சாரை அதிலேவாழும் - நிச்சயமா யச்சாரை கண்டாயானால், கூறப்பா உம்மென்று கும்பித்தேதான்- கூர்மையுடன் பதினறு வருகேசெய்து, காரப்பா அச்சாரை வருகும்பாரு-கண்டவுடன் கமெமாம் பிடித்திடாயே. 179

பிடித்தவுடன் பொசிக்கையிலே பொருந்தியோமெம்-பின்போருக்காலதைப்பிடித்துக் கொள்ளுகெதுள்ளு, படித்துமிக அஞ்சுதரம் பிடித்துக்கொள்ளு - பக்குவமாய்த் தினந்தோறு மிப்படியேகொள்ளு, அடுதமிக்த் தினந்தோறுங் கொண்டால்மைந்தா - அழையாது யாக்கைதனைக் கழிவேயில்லை, நடுத்தினமாய்த் தினந்தோறுங் கொண்டால்மைந்தா - நலமாக அதுக்கடியிற் கனியொன்றுமே. 180



கருநெல்லிக் கற்பம்.

கனியான கருநெல்லி யஞ்சாறுண்டு - கருவாக அவ்வனத்தில் பிரமதேவன், தனியாகத் தவசிருப்பா னவரைப்போற்றித் - தருவான ஐந்தருகற் பகமேயென்று, பனியான பொருளறிந்து பணிந்தால்மைந்தா-பாலகனே யென்றவருங் கனிதானீவார், இனியாது கசப்பென்று இருந்தால் 181
மைந்தா - ஈடெச்ச மில்லையடா குனியாதே.

குனியான கருநெல்லி கற்பங்கொண்டால் - நடுங்காது காயமெல்லாம் வலுத்துப்போச்சு, நிகழ்யான ரிஷிமூல மிதுதானப்பா - நேர்மை வெண் சாரைகந்தி மூலமாகும், உசிதமுள்ள ரிஷிமூலம் நந்திமூலம் ரெண்டு; உண்மையுடன் தினந்தோறும் பூசித்தக்கால், பசிபான தீப னங்க ளில்லைமைந்தா-பரபரத்தின் கிருபையினல் பூரணத்தைப்பாரே.

சவுக்காரக் கற்பம்.

பூரணமா யின்னமொரு காரஞ்சொல்வேன் - புத்தியுள்ள புலத்தியனே புகழ்ந்துகேளு, காரணமாய் நீகேளு எட்டாத்திங்கள் - கன்னியடி மூலமடா கருவைவாங்க, மாரணமாய் வாங்குதற்கு வகையைக்கேளு - வாரணமா முக்கணனை வேண்ட மருவியே வெல்லமதில் ரவிநீசங்கூட்டி, 183
டிக்கொண்டு - மடக்கொடிக்கு சந்திவேரப் வரிசைபாரே.

வரிசையுடன் மூன்றுநா ளுப்பைவாங்கி - மகத்தான வெந்நீரிற் போட்டுமைந்தா, பரிசமுடன் மறுநாள்தா னுப்பைவாங்கிப்-புண்ணியனே தண்ணீரிற் கரைத்துக்கொண்டு, பரிசான பாண்டமதி லிட்டுமைந்தா - பக்குவமாய் ரவிநீசங் காரசாரம், உரிமையுடன் பாண்டமதில் 184
கரைத்துமைந்தா - உண்மையுட னடுப்பேற்றி யெரித்திடாயே.

எரித்துமெள்ளப் பதம்பார்த்துக் கிண்டுமைந்தா - இன்பமுடன் திரண்டுவரும் பருவந்தன்னில், குறித்தவொரு தயிலமதை விட்டுமைந்தா குருகவே கிண்டியதை யெடுத்துக்கொண்டு, பருத்துமிகப் போகாம லுணைடசெய்வாய் - பக்குவங்கள் தப்பிவிட்டா லுதிர்ந்துபோகும், வருத்திமிக எரிப்பதுவுங் குறைந்துதானல் - மைந்தனே யினுமது வங்கயாய்ப்பாரே. 185

பாரப்பா வெரிப்பதுவு மிஞ்சிற்றானல் - பாகதுவு முறுகியது வுதிர்ந்துபோகும், சீரப்பா வெரிப்பதுவுங் குறைந்துதானல் - சிவசிவா இளகியது போகும்போகும், கூறப்பா தானெரித்துப் பதத்தோடப்பா-குணமாக வுருட்டிவைக்க இறுகிப்போகும், ஆரப்பா அறிவார்க ளித்தக்காரம் - அதிதமுள்ள காரமடா அருளைப்போற்றே. 186

அருளான போகமெல்லா மடங்கும்வீடு - ஆயிதோ தாயிருக்குந் தடங்கும்வீடு, இருளான காமியர்தா னிருக்கும்வீடு - இச்சையுள்ள மாயமது இருந்தவீடு, மருளான பேய்க்கூத்து ஆடிநின்ற-மாயையெல்லாங் குடியிருக்கு மகத்தாம்வீடு, கருவான கருவிகளும் நிறைந்தவீடு - கருவழிந்து திகைத்துநின்ற காலன்வீடே. 187

வீடறிந்து பதவியுட னிருக்கமாண்பர்-வீட்டிருந்த பேர்களைத்தான்
விரும்பாமாண்பர், காடறிந்து நாடறிந்து கருதமாண்பர் - கருவான
பூரணத்தைக் காணுமாண்பர், கூடறிந்து குடியிருக்க மாட்டாமாண்பர்-
குருவருளைப் போற்றாத குருட்டுமாண்பர், பாடறிந்து பயனறிந்து
கொள்ளாமாண்பர் - பாவிகள்தான் மெத்தவுண்டு பார்த்திடாதே. 188

கல்லுப்புக் கட்டு.

பார்த்துமிகப் பூரணத்தைப் பணியவேணும் - பணிந்துமிக நில்லாட்
டால் பண்பாய்த்தானும், கூற்றுவனுக் கிரையாகப் போவாய்மைந்தா -
கூறுட்டீன கூற்றுவன்தா னென்றாக்கால், காற்றிசையுந் திரிந்தலைந்து
பொருள்கள்தேடும் - நன்மையில்லா துரோகாதி நன்மையப்பா, பூத்த
மலர் வாசனைதான் கல்லுப்பாகும் - பூமிவளர் பூவாதுதா னாகமாச்சே 189

ஆச்சப்பா பிரிதிவியி னாகத்தாலே-அடங்காத கல்லுப்பு கட்டிப்போ
ச்சு, மாச்சலது இல்லாமற் கட்டிச்சென்று-மதிராம லத்திடைக்குக் கார
சாரம், பாய்ச்சுவாய் சீனமுடன் துரிசுகூட்டிப்-பதறாமல் வீரமுடன் பூரஞ்
சேர்த்துத், தாக்ஷியொன்று மில்லாம லொன்றாய்ச்சேர்த்துத்-தவறாமல்
முன்னீரிற் கரைத்துக் கொள்ளே. 190

கொள்ளப்பா பாண்டமதி லிட்டுமைந்தா-குருபரனைத் தொழுதிறக்கு
கி அடுப்பிலேலற்றி, அல்லப்பா சொல்லுகிறேன் தீயைமூட்டி-அடித்தாரி
ற் பற்றாது கிண்டுகிண்டு, வல்லமையாய்க் கிண்டிவரும் போதிலேதான்-
வந்துமிகக் குழம்பான பருவந்தன்னிற், சொல்லக்கேளாரண்டத்
தெண்ணெய்விட்டுச்-சுருதியுடன் கிண்டினால் திரளும்பாரே. 191

பாரப்பா திரண்டுவரும் பருவந்தன்னிற்-பதறாமல் விளாங்காய்போ
லுண்டைசெய்து, போரப்பா சவுக்காரமென்றுசொல்லிப்-பிசகாம லுண்
டைதனைப் பதனம்பண்ணி, சீரப்பா நின்றதொரு குருவைப்போற்றி-நிச்
சயமாய் சவுக்கார வுண்டைதன்னை, வீரப்பா போவதற்கு சுத்திகேளு -
விசையான காரமுடன் சாரஞ்சேரே. 192.

சேர்த்துமிக ரவியில்வைக்கச் செயநீராகும்-சிவசிவா அந்நீரில் வீரம்
பூரம், பார்த்துமிகச் சேர்த்திடவே செயநீர்தானும்-பக்குவமாய் குருநீர்
போல் பசுமையாகும், வேற்றுமைக ளில்லாத சவுக்காரத்தை-வெகுளா
மல் செயநீரில் தேய்த்துப்போடு, மாற்றுமடா எண்ணெயெல்லாம் வழி
த்துபோகும்-மகத்தான காரமது சத்தியமாச்சே. 193

ஆச்சப்பா சுத்திசெய்த காரமொன்று-அந்நிடைக்கு வீரமொன்று பூர
மொன்று, பேச்சப்பா ஒன்றுமில்லை கல்வத்தாட்டு-பிசகாம லீராறு சாம
ம்பு மண்ணுஞ்செய்து, காய்ச்சப்பா காட்டெருவிற் புடத்தைப்போடு-கரு
வையுள்ள சுன்னமதாய் நீறிப்போமே. 194



தாரக்கட்டு.

போமப்பா தரித்திரிய மெங்கேபோச்சு - புதுமையுள்ள சுன்னமதை
வாய்நீராலே, நாமப்பா சொல்லுகிறோம் குழைத்துக் கொண்டு-நன்மை
யுள்ள தாரத்துக் கங்கிபூட்டி, தாமப்பா மண்சீலை எழுஞ்செய்து- தவற
மல் ரெண்டெருவிற் புடத்தைப்போடு, ஓமப்பா தாரமது வுருக்கிக்கட் 195
டும்-உத்தமனே அருணனைப்போ லிருக்கும்பாரே.

பாரப்பா சிவந்தசொரு தாரந்தன்னைப்-பாய்ச்சடா வெள்ளியிலே பத்
துக்கொன்று, சேரப்பா வெள்ளியது பழுக்கும்பத்தாய் - சிவசிவா தாய்
சேர்த்துத் தகடுதட்டி, காரப்பா மூன்றுதரம் புடமேபோடு - கருணை
பெறப் பதினாறு மாற்றப்பொன்னும், வீரப்பா அகற்றியதோர் செம்புத 196
ன்னில்-விசையாக பத்துக்கு ஒன்றுபோடே.

போட்டசெம்பு எடுத்திடவே ஆறுமாற்றாய்-புனிதமுட னிருக்குமடா
அப்பாகேளு, தாட்டிகமாய்த் தாய்சேர்த்துத்தகடுதட்டித்-தன்மையுடன்
மூன்றுபுடம் போட்டாயானால், நாட்டதனில் விலையாகும் பத்துமாற்றாய்-
தன்மையுட னின்னமொன்று நவிலக்கேளு, கூட்டான குடவனைத்தான்
சுத்திபண்ணி-கொடுத்திடவா யெட்டில்ரெண்டு வெள்ளிதானே. 197

தானென்ற குடவ்விலே வெள்ளிசேர்த்துத்-தன்மையுடன் பதினாறுக்
கொன்றேயீந்தால், தேனென்ற வயதுதா னெட்டுமாற்றாய்-தீர்க்கமாய்
நிற்குமடா தாயைச்சேர்த்து, மானென்ற தகடுதட்டிப் புடத்தைப்போ
டு-மைந்தனே வயதுபனி ரெண்டுமாற்றே, கோனென்ற திருவருளை 198
வணங்கிப்போற்றிக்-குருவான பதியறிந்து அமுதங்கொள்ளே

அமுதமென்ற நாதமடா வாயுவாச்சு - அப்பனே சுக்கிலமோ விந்து
வித்து, குமுதமுடன் ரெண்டல்லோ வொன்றாய்ச் சேர்ந்தால் - குரு
வான பதிகாட்டும் வாசியாச்சு, உயிருகிற வாசியது எங்கேயென்றால்-உத்
தமனே அடியான மூலமாச்சு, நிமிர்ந்துகொண்டு மூலத்தைக் கண்ணாற் 199
பாரு-நேரான சூரியன்போல் வட்டமாச்சே.

அட்டமா சித்துகளு மதிலுண்டாச்சு-அருள்பெருகும் போதமே யதி
லுண்டாச்சு, நிஷ்டையொ[illegible]திகளு மதிலுண்டாச்சு-நேரான மந்தி
ரமு மதிலுண்டாச்சு, [illegible]ர்களை நீக்குநெறி யதிலுண்டாச்சு- சொல்ல
வொண்ணா வசியமெலா[illegible]திலுண்டாச்சு, கட்டாத சரக்கெல்லா மதி 200
லேகட்டுங்-கவனமென்ற [illegible]ளிகையுமே யதிலுண்டாமே.

அகஸ்தியர்பு[illegible]தியருக்குந்தமதனுபவமுரைத்தல்.

உண்டான சேதியடா [illegible]ன்னமொன்று-உரைக்கிறேன் புலத்தியனே
யுண்மையாக, அண்டர்தொ[illegible]ஞ் செகஜோதி தன்னைக்காண - ஆராலும்
கூடுமடா வப்பாகேளு, பண்டையிலே விட்டகுறைக் காரனென்றாற்-
பரமகுரு பதம்போற்றிப் பணிகுவான்கேள், கண்டனடா குருபதத்தை 201
யென்றுசொல்வான்-காசினியில் வாய்மிலுக்காய் கருதுவானே.

வாலென்ற மதியமுந் ததியர்மட்டை-வாயூற வமுதமென்று கொள்
ளுவாரப்பா, நேமென்ற பூரணத்தைச் சிலேடானுட்செந்தமேனோர் தான
லைந்து திருவேகுவர். கோவென்ற குருவருள்ப் பக்கியவான்களப்பா-குவ
லயத்திற் குருவேட மகிமையோருப்பார், காவென்ற ஞானவங்கம் மெய்தப்
பேசி-காண்போருந் தோஷித்துப் போவாரப்பா. 202

பாரப்பா ஆதியிலே பாடினேன் சாத்திரகாண்டம்-பன்னிரண்டு ஆயிரமா
ய்ப் பாடிக்கொண்டு, வீரப்பா செய்யாமல் வைத்துவிட்டேன்-விரிவாமெல்
லேனையிலே வேதரிஷிவந்து, சேரப்பா நின்றதைத் தொழுதுநின்று-
நேசமுடன் பணிந்துமிக நின்றனைப்போ, ஆரப்பா என்றுமிகக் கேட்டே
னையா-அப்போது வேதரிஷி யென்றானன்றே. 203

வேதரிஷி வாலைனவே அழைத்துக்கொண்டு-வேதாந்த மூலமது
வுபதேசித்து, போதமுள்ள பூரணமு மவனுக்கீந்து-புகழுடைய நாதரிஷி
யென்றுசொல்லி, நீதமுள்ள புத்தகத்தை யவனுக்கீந்து-நிலைத்துமிகப்
பன்னிரண்டுங் காத்தாயானால், பேதமில்லா நாதரிஷி நீயேயாமே-பெரு
மையுள்ள இந்நூலைப் பதனம்பண்ணே. 204

பண்ணியதோ ரிந்நூலின் பயனைக்கேளு-பார்மீதி லுரைபாதே மதி
மந்திடாதே, கண்மையுடனிந்நூலைப் பதனம்பண்ணி-நாவென்ற ஆண
வத்தை அகற்றிமைந்தா, தன்மையுடன் பூரணத்தைப் பணிந்துகொண்டு-
தவறாமல் சிவயோகந் தானேசெய்து, சென்னிதனிற் றீபமவைத்துத்
தீபமேத்தி-தெளிவிட்டசத பூரணமே தினமுநோக்கே. 205

நோக்கென்ற பூரணத்தை நோக்கிக்கொண்டு-நொடியென்ற வொரு
நொடியிற் குள்ளேமைந்தா, வாக்கென்ற பூரணத்தை வாசியேறி-வந்து
னடா மூலகிரி மலையிற்றானும், பூக்கின்ற பூஞ்சோலை வனத்திற்றானும்-
போகமுள்ள ரிஷிகளிடம் வந்தேனையா, தாக்கென்ற தபோதனரைக்
கண்டுகொண்டு-தயவாக சுவேதகிரிக் கேகினேனே. 206

ஆமப்பா சுவேதகிரி தன்னில்வாழும் அமரர சித்தர்கள்தா னனந்த
ங்கோடி, காமப்பால் கானப்பா விரண்[illegible]கொண்டு-கருணையுடன் தவ
கிருப்பா ரனந்தங்கோடி, காமப்பா அவர்க[illegible]ஞ் சென்றேனய்யா-நல்
மையுடன் நாதகிரி எங்கேயென்றேன், தாமப்[illegible]கலோருங் கூடவந்து-
தன்மையுள்ள நாதகிரி அதோவென்றாரே. 207

என்றவரும் வேதகிரிக் கேகினார்கள் எங்[illegible]கனே நாதகிரிக் கேகி
னேனான், குன்றாத ரிஷிகோடி அதனில்[illegible]ழ்வார்-குறையாத வாயு
வைத்தான் பக்ஷிப்பார்கள், நன்றான தபசுநி[illegible] மிச்சமிச்சம்-நான்சென்
றேனவர்களிடம் மைந்தாகேளு, பன்பான[illegible]ன் உருவே யென்றுசொல்லி
ப்-பணிந்தார்கள் அருதகிரி யெங்கென்றேனே. 508



காங்கென்று அருதகிரி முடிவிற்சென்று-இன்பமுள்ள ரிஷிகளிடஞ்
சென்றேனையா, அங்கென்று நற்கனியின் ரசத்தையுண்டேன்-அதிலிரு
ந்து அமலகிரிச் சருவிற்சென்று, நங்கென்று அமலகிரி முடிவிற்சென்
றேன்-நாதாக்கள் லெகுகோடி யதனில்வாழ்வார், வங்கென்று அவர்களி
டஞ் சென்றேனையா-வருந்தியவர் கனியீந்தார் வாங்கினேனே. 209

வாங்கியொரு நொடிக்குள்ளே சென்றேனையா-வரிசையுள்ள சேர
கிரி முடிவிற்சென்றேன், நீங்கில்லா குருதேசி சித்தர்கோடி-நீர்க்க
முள்ள மவுனமதா யிருப்பாரையா, பாங்குபெற அவர்களிடஞ் சென்றே
னப்போ-பரமான அகத்தீசர் வாலென்றார்கள், மாங்கனியி னமுதரச
மீந்தாரையா-வரிசையுடன் போதகிரி யெய்கென்றேனே. 210

எங்கென்று கேட்டவுடன் மவுனயோகி-யெல்லோரு மடிதொழுது
வந்துசொன்னார், அங்கென்றே போதகிரி நாங்கள்காணோம்-அதனிலே
வாசமதா யதில்வளர்ந்தோம், நங்கென்று போதகிரிக் கேகவென்றால்-
நாதமென்ற கெவுனரசக் குளிகைவேணும், சிங்கென்று என்குருவே கும்ப
மூர்த்தி-சீக்கிரத்தில் நீவரவே தொழுதோமையா. 211

பாரப்பா போதகிரிக் கேகவென்றாற்-பஞ்சகன தீட்சையினாற் குளி
கைசெய்து, நேரப்பா நின்றதொரு சாரணைகள்தீர்ந்து-நியமத்திற்
கெவுனரசக் குளிகைசெய்வாய், வீரப்பா செய்யாமல் ரசத்தைவாங்கி-
விரைவான பஞ்சகன தீட்சைசெய்து, சீரப்பா நொடிக்குமுன்னே சிர
ண்டுபோர்க்க-நிலைபெருகக் கெவுனமணிக் குளிகையாச்சே. 212

குளிகைதனை யனைவோரும் வாயிற்போட்டுக்-கும்பித்துப் போதகிரி
தன்னிற்பாய்ந்தார், பலிதமுள்ள போதகிரி யென்னசொல்வேன்-
பாய்ந்தொரு சித்தரெல்லாம் போதமானார், அறியாத போதமய
மாகிநின்று-அனைவோரு மிலிங்கமய மாகிப்போனார், தெரியாத போதை
யிலே நிலையில்நின்று-சேரான பொதிகைகிரிப் போனேனே. 213

போரான போதகிரி யென்[illegible]பேரு-பெருமையுள்ள பொதிகைகிரி
என்றும்பேரு, வாரான[illegible]ரகிரி யென்றும்பேரு-வளமான சூரியகிரி
யென்றும்பேரு, கூரா[illegible]யந்திரகிரி யென்றும்பேரு-குருவான கும்ப
கிரி யென்றும்பேரு, பா[illegible]ன பரமகிரி யென்றும்பேரு-பரமகயி லாசமெ
ன்றும்பேருமாச்சே. 214

ஆச்சப்பா லிங்கமய மாகி[illegible]போன-அனைவருக்கும் பூசைநைவேத்தி
யங்கள்செய்து, மாசகலொ[illegible]ருஞ் செய்யாமல் அறிவிற்கூடி-மகத்தான
கும்பகத்தில் மருவிச்சேர்ந்து, [illegible]ச்சநுதா னடங்கிநின்ற பொதிகைத
ன்னில்-முக்கோடி காலமட்டும் வளர்ந்தேனப்பா, காட்சியில்லாக் காட்
சிகளு மதிலேகண்டேன்-கண்டதொரு காட்சியிலே முழித்தேன்பாரே.

சித்தர்கள்குலமும் - அவர்கள்பாடிய - நூல்களும்.

முழித்துமிகப் பார்த்தபோது ஞானதிருஷ்டி - முனையான சுழிமுனையி
ற் கண்டகாட்சி, அழித்துமிகப் பார்த்ததினால் வேதமுனி செய்த - அத்தி
யத்தால் கைலகிரி தன்னில்வந்து, புழித்தனமாய் நின்றவிரி தன்னைக்கண்
டேன் - புகழான புலத்தியனே கேளுகேளு, சுழித்ததொரு பன்னிரண்டசு
வித்தைதப்பார்த்துக்-கருவெடுத்து வெகுநூல்கள் கட்டினானே. 216

கட்டினது மல்லாமல் ஜாலவித்தைக்-கருவெடுத்து செகத்தோர்க்குக்
காட்டினான்பார், திட்டமுடன் கருவூரான் தனக்குச்சொல்லி-திரமாகக்
குடிமகன்தான் செய்தபோக்கு, மட்டிமைக ளில்லாத சங்கபேதம்-வாரியை
யுடன் சிலநூல்கள் பாடினான்பார், கட்டினான் கொங்கணவன் பலிங்க
சாதி-காவியமாய் வெகுநூல்கள் கருதினானே. 217

கருதினான் சட்டைமுனி யனந்தங்கோடி-கருவாக அவன்குலந்தான்
சேணியனுமாகும், உருசியுள்ள போகருமே குசவனாகும் - ஓகோகோ
அவன்பாட லிலக்கோவில்லை, பருதியுள்ள சுந்திரமே ரோட்டியாமே -
பக்குவமாய் முன்பின்னாய் பாடிப்போட்டான், அருமையுள்ள மச்சமுனி
யென்னசொல்வேன்-அவன்குலந்தான் செம்படவ னாகுந்தானே. 218

தானான மச்சமுனி யனந்தங்கோடி - தவிராத வெகுநூல்கள் பாடிப்
போட்டான், மானான கமலமுனி கன்னானும்-மாருட்ட மாகவே பாடி
ப்போட்டான், ஊனான இடைக்காட்டர் னிடையனாகும் - உண்மையில்
லாக் கல்விகளை யுரைத்தானப்பா, தேனான நந்தியுமே பிரமகுலமப்பா-
திறமாக வெகுமறைப்பாய்ப் பாடினானே. 219

நாதரிஷியை யழைத்தல்.

பாடினார் கவிசித்த ரனந்தங்கோடி - பக்குவமாய் நாதரிஷி சொன்ன
தாலே, நாடியே நாதரிஷி தன்னைக்கூவி - சான்கொடுத்த காண்டமதை
வெளியிற்போட்டு, பேடியென்ன காரியத்தைச் செய்தாயென்று -பெரு
மையுடன் நூல்வாங்கிக் குகைக்குள் வைத்து, நாடியே அவரவோர்க்குஞ்
சாபமித்தேன் - சமுசயங்கள் நீராமற் சபித்தேன்பாரே. 220

பாரப்பா கவிசித்தர் பதினெட்டாகிப் [illegible]வில் பதினெட்டுச் சித்த
ராளுர், ஆரப்பா யிவர்பெருமை யறிருவார்க[illegible]மித்துமிகத் தெரிந்தவன்
றே னியேயாகும், நேரப்பா பாடினதோர் ப[illegible]ரண்டு - நிலைத்ததொரு
ஆயிரத்தைக் குறுக்கினைமந்தா, சேரப்பா தப்பா[illegible]ல் பன்னிரண்டுநூலும் -
திறமாகப் பாடியதோ ரிந்நூலப்பாரே. 221

இந்நூல்தா னாயிரத்து இருநூறுக்குள் [illegible]சோர்ந்தமானகரு வெல்லாம்
பாடி, முன்சொன்ன பன்னிரண்டு ஆயி[illegible]தை-மூக்கமுள்ள புத்தகமா
ய்ச் சேர்த்துக்கட்டி, வன்னமுள்ள பலகையாய்ச் சேர்த்துநல்ல-வாரி
தியாம் காவேரி தன்னிலேதான், தன்மையுள்ள சங்கமென்ற பலகை
யாக-சமுத்திரம்போய்ச் சேரென்றுஞ் சபித்திட்டேனே. 222



நாதரிஷியைச் சபித்தல்.

சபித்திட்ட நாதரிஷி தன்னையழைத்து-சல்லியினிற் சாபமிது பிடியெ
ன்றேதான், குவித்திட்டு நாதரிஷி யென்னசொல்வான்-குருவான வெ
ன்குருவே தீர்வதெப்போ, சபித்திட்டு வெகுநாள்தான் சென்றபின்பு-
சங்கமென்ற பலகையிடஞ் சேர்வாய்நீயும், வகுத்திட்டுச் சாபமது சுத்தே
னப்போ-வருமையிகக் கொண்டவனு மறந்திட்டானே. 223

நாதரிஷி வரலாறு.

மறந்துமிக வெகுகோடி காலந்தானும் - மகத்தான நாதரிஷி யலைந்
தானப்பா, இறந்துமிகக் கைலகிரி வடக்குச்சென்று - நிலைத்துமிகப்
பவுத்திரகுல மானாரப்பா, கரைந்துமிக வேதரிஷி என்னசொல்வோம்-
கருத்தில்லாப் பவுத்திரனைப் பேர்கொண்டோம்நாம், உரத்ததொரு சாப
மது தீர்வதற்கு-ஓகோகோ பலகையிடஞ் சேரவென்றார். 224

சேரவென்று சொன்னமொழி தப்பாமற்றான் - சிந்தைதனில் நினை
த்துவா குதியிற்சென்றால், கூர்மமென்ற பலகையெதிர் நோக்கிவந்து -
குறிப்பறிந்து வேதரிஷி குருவைநோக்கி, மாறல்செய்த பலகைதனை
யெடுத்துக்கொண்டு-மனங்குவிந்து அதிலிருந்து வருமையூண்டு, தேர்வத
ற்கு எதுவகை செய்வோமென்று-திரமாகப் புராணமொன்று பாடினானே.

பாடினான் புராணமொரு காண்டம்-பக்குவமாய் நாலடியுஞ் சாத்
தமொன்று, நாடினான் வேதமொடு சாத்திரமு மைந்தா -நலமான பஞ்ச
லட்சணமுஞ்சொன்னார், தேடினான் காவியங்க ளனந்தங்கோடி-செகத்
தோர்க்கு ஒப்பனையாய் வெகுசாரப்பாடி, மூடினான் சருவமத மொன்று
ய்ப்போக-மூர்க்கமுடன் வெகுசங்கை பாடினானே. 226

ஆமப்பா வெகுசங்கை யெடுத்துப்பாடி - அரனேது நம்மைவிட ஆத்
தானேது, நாமப்பா என்றமத மானவத்தால் - நரரையெல்லாம் வேத
மயமாகச்சொன்னார், தாமப்பா வேதகுரு தானேயாகி - சங்கையில்லா
மந்திரத்தைத் தானுண்டாக்கி, வாமப்பால் கொண்டதொரு வெறியினா
லே-வரையான அண்டவரை யாண்டான்பாரே. 227

ஆண்டவனும் வே[illegible]நானேதானென் - றாயிரத்தெட்டண்டமெ
லா மடக்கிமைந்த[illegible]ண்டவனும் வேதமய மல்லால்வேறே-பூதலத்திற்
சிவனேது நான்தானென்று, தீண்டாத மதமோடு இருந்தான்வேதன் -
தீதிலா வேதமதை யடக்கவென்றே, காண்டவனைத் தானெரித்துச் சபா
லமேந்திக்-கருணைபுள்ள சுந்தரனே போவென்றேனே. 228

போவென்று சொன்னவுடன் சுந்தரனுஞ்சென்று -பொல்லாத பவு
த்தனென்ற சாபந்தீர்த்து, ஆவென்ற அமுதமது அவனுக்கீந்து-அருளா
ன பஞ்சகண தீட்சைவைத்து, மானென்ற மவுனாச தீட்சைவைத்து -
மகத்தான பேரொலியை யவனுக்கீந்து, கோவென்ற பொதிகைகிரி தன்
னில்வாழுங்-கும்பமுனி பாகமதில்வாவென்றேனே. 229

வாவென்று சொன்னவுடன் வேதமுனி யாறும்-மகத்தான பலனைய டைந்த் தையிலேக்கி. ஒன்றுஞ் சாத்திரத்தை போதித்தானே-குருசொ டியிற் பொதிகைகிரி தன்னில்வாத்தான், கூவென்ற வேதமுனி தன்னை ப்பார்த்துக்-குருவான பலனையதந் தாமென்றோனே, பூவென்ற சத்தி நபுட் கரணிதன்னில்-முனித்துவட சங்கமென்ற பலன்தானே. 230

சவுக்காரவழலே.

தாமென்ற பவுத்தர்மதம் அழித்துப்போச்சு-சகாதேவமே யெம்குருவிறை க் கிருக்கலாச்சு, கோவென்ற கும்பமுனி கருணையர்லே-கொள்கின்ற விருளீந்து வெளியாய்ப்போச்சு, தேவென்ற வழுமது பெருகலாச்சு-சிவசிவா அட்சரங்கள் தோணிக்கலாச்சு, தாமென்ற தத்துவங்க ளேற்றுப் போச்சு-கலமான சவுக்காரக் குருவுண்டாச்சே. 231

உண்டான சவுக்காரம் வழலையாலே-உலகமெல்லாஞ் சித்தாய்ப் பா னதாலே, பண்டான சோதிபடா பாய்சிரமமாச்சு-பரமகுரு வாளமொரு வழலையாகக், கண்டாருஞ் சொல்லார்கள் நாலேவாயிலேலே-கணவனி வழலையடா காணப்போமோ, விண்டாருஞ் சொல்லில் தலைமேதித் தாய்ப்போகும்-வேதாந்த பூமியுட னூக்கமே. 232

பூமிநாதம்.

நாதமென்றால் வெகுநாதம் பூமிநாதம்-நாதாக்கள் பூசித்த வசீகரநா தம், நேமமென்ற செகநாதம் தேசிநாதம்-திலமெபருமிப் பூரணத்தில் நின்ற நாதம், பரதமென அகமுல சமனசநாதம்-பராபராம் பரமகுரு நாத மந்நாதம், பூதமென்ற பஞ்சகணம் பொருந்து நாதம்-பூவான நாதமதைப் புகழ்ந்தாகானே. 233

புகழ்ந்தாகின்ற பூமியுட நாதம்வாங்கிப்-புரிசடையோன் சிரசில்வரும் கங்கைதன்னில், மகிழ்ந்தாகின்ற நாதமதுக் கெவ்வரசெல்லேன்-மவ்வுட டாசநிட்சை யார்தான்காண்பார், அசமிழ்த்த நநிட்டிசை வளர்ந்தப் பாருஅருளான நாதவெளி யென்னசெல்லேவ, செகமெல்முக் தசநிட் சை வைத்தாயாற்றிலெல்லிவா நாதமது விந்துவாச்சே. 234

விந்துநாதம்.

ஆச்சப்பா நாதவிந்துக் கப்பாற்சென்[illegible]ான நாநிட்சை வைத் தாயானால், போச்சப்பா நாதவிந்து என்றபெரு[illegible]ழான நிட்சையிறைவ மைந்தாகேறு, தாட்சியில்லா விந்துவுட னூகாச்சு-தன்மையுடன் விர் துவுட னுக்கானார், மாச்சல்செய்து நாதவிந்து தன்றுல்மைந்தா-மான் டார்கள் வெகுகோடி சித்தர்தானே. 235

தாமென்ற விந்துவுட னூக்கண்டால்-தவராது வாதசித்தி போகத் தானும், நாமென்ற வாசியது பிலத்துப்போச்சு-உண்மையுள்ள பூரண த்திரக் காணலாச்சு, மாமென்ற மவுனமது கலந்துபோச்சு-மகத்தான கற்பமது ஏறலாச்சு, தேமென்ற அமுதமது சொல்லலாச்சு-தேகமெ ன்ற யாக்கையது சித்தியாச்சே. 236



சித்தியுள்ள நாகமது விந்துவாக்கிச் சிவசிவா கல்லுப்புக் கூடிதான் சேர்த்து, முத்தியுள்ள வெடியுப்பு சிகந்தோத்து-முக்கூடன் கல்வ த்தி லிட்டுரைந்தா, பத்தியுடன் செயநீரை விட்டுஆட்டிப்-பருவமுடன் காயவைத்து வட்டுப்பண்ணி, புத்தியுடன் மண்செய்து புடத்தைப்போடு-புதுமையுள்ள சுண்ணமதாய் நீறிப்போமே. 237

நவசாரக் கட்டு

போமென்று விடாமல் சாரம்வாங்கிப்-புகழ்பெருகச் சுண்ணமதைச் சிற்றிலைத்து, நாமென்ற காரோட்டில் வைத்தெரித்தால்-நலமான சாரமது கட்டிப்போகும், ஆமென்று இப்படியே யந்த்ரத்தால்-அசகார சாரமது படிகம்போலே, தாமென்று சாரநீர் கட்டிநின்றால்-சகலசாத் தந்தானையுங் கட்டிப்போச்சே. 238

நாகக் கட்டு.

போச்சென்று விடாமல் நாகம்வாங்கிப்-புகையடங்கச் சத்தியது செய்துக்கொண்டு, கூச்சமறக் குகையிலிட் டுருகும்போது-குருவான சாரமதைப் பத்துக்கொண்டு, மாச்சலது செய்யாமற் கொடுத்துப்பாரு-காட்சியில்லாக் காட்சிகளுங் காண லாகும்-கருணையுள்ள புலத்தியனே யின்னங்கேளே. மகத்தான நாகமது கட்டிப்போகும் 239

கேளடா கல்லுப்பு வளையலுப்புக்-கெடியான சாரமுடன் மூன்றுங் கூட்டி, மாளடா கல்வத்தில் னறுயாட்டி-மகத்தான சாரமதுக் கவசி பூட்டி, கோளடா வாராமல் மண்சீலைசெய்து-குருபரனைத் தியானித் துப் புடத்தைப்போடு, பாளடா சாரமது கட்டிப்போகும்-பசுமையுள்ள நாகமது சாரும்பாரே. 240

பாரப்பா இன்னமொரு கட்டுச்சொல்வேன்-பச்சையுடன் தூரிஷச் சரியாய்த்தாக்கி, சாரப்பா வென்றுசொல்லிச் சாருஞ்சேர்த்துத்-தயவாகக் கல்வத்தி லாட்டும்போது, வீரப்பா அடங்கியது மெழுகாய்ப்போகும்-விளையான சாரமதுக் கவசிபூட்டி, சீரப்பா மண்சீலை யெழுஞ்செய்து-சிவசிவா காடையென்ற புடைத்தைப்போடே. 241

போடப்பா இப்படியே புடமேபஞ்ச-பொருநாமற் சாரமது கட்டிப்போகும், நாடப்பா [illegible]சாரங் கட்டிப்போனால்-நாகமென்ற வஸ்துவுக்கு வுயிர்தான்போச்சு, கூடப்பா குலையாது குலைத்தாலுந்தான்-கூட்டிவிக்குஞ் சாரமென்ற வஸ்துவஸ்து, வீடப்பா பிலத்துநடா வல்ல வாமே-வேதாந்த சாரமென்ற வித்தைதானே. 242

தாமென்ற சாரவித்தை யார்தான்காண்பார்-தன்மையுள்ள பூர ணத்தைக் கண்டோர் காண்பார், ஊமென்ற வுயிசைதனை யார்தான் காண்பார்-ஊமையென்ற பொருளறிந்தோன் காண்பானப்பா, தேமெ ன்ற மதியமுத மார்தான்காண்பார்-திரமான மவுனியவன் காண்பானையா, மாமென்ற மவுனமதை யார்தான்காண்பார்-மகத்தான யோகியவன் காண்பான்பாரே. 243

காரூந மடையர்மெத்த வுலகத்துள்ளே - கன்மவிதி தீராத கருத்துள்ளோர்கள், தேரூன மதியமுதங் கொண்டோ மென்பான் - நிரமான வாசிதனைக் கண்டோமென்பான், தாரூன தன்மைதனை யறியாமட்டை - தனையறிந்து மனைபுகுதத் தெரியாமட்டை, கோரூன குருவேட மறியாமட்டை - குணமறியான் மனமறியான் குசவன்றானே. 244

குசவனென்ற பிரமகுல மறியாவப்பன் - குறிபறியான் நெறியறியான் குருட்டுமாடு, அசைவதனை யறியாத சித்தரெல்லாம் - அருளான பூரணத்தை யறிகேனென்பான், பிசகான மாந்தரிடஞ் சொல்லவேண்டாம் - பேயின்ப மறியாத உலுத்தர்கோடி, நிசமில்லா மாந்தரிடஞ் சொல்லவேண்டாம் - நிலையான குருபதத்தைத் தொண்டுபண்ணே. 245

பாறையுப்புக் கட்டு.

பண்ணப்பா பிரமகுரு வாகின்ற - பாறையுப்புக் கொண்டுவைத்து பதனமாகி; உண்ணப்பா தண்ணீரிற் கரைத்துக்கொண்டு - உத்தமனே வடிகட்டி ரவியிற்போடு, நண்ணப்பா இப்படியே யந்தரம்போடு - நலமான உப்பதுவுங் கட்டிப்போகும், பொன்னப்பா வுண்டாகு மப்பினாலே - போக்கொன்று சொல்லுகிறேன் மைந்தாகேளே. 246

கேளப்பா கட்டியுப்பு பிடைதான் மைந்தா - கெடியான கல்லுப்புக் கூடச்சேர்த்து, ஏனப்பா பிண்டமதிச் சித்திடைக்கு மைந்தா - நலமாக மூன்றுமொன்றாய்க் கல்வத்திட்டு, கேளப்பா வாராம வறுகிராலே - குழறவே யிராது சாமமாட்டு, மானப்பா அரைத்துருட்டி ரவியிற்போடு - மனமடங்கக் காய்ந்தபின்பு சொல்லக்கேளே. 247

கேளடா காய்ந்ததொரு கட்டுதன்னிற் - சிருபையுடன் மண்சீலை வலுவாச்செய்து, வாளடா தேறியுட சுருகிற்றூளும் - வளமாகப் புடம்போட்டு மைந்தாபாரு, தேளடா கொட்டியது போலேமைந்தா - சிவசிவா மூப்பூவுஞ் சுன்னமாச்சு, கோளடா வாராமற் சுன்னந்தன்னைக் - குருவாகப் பணிந்துமிகச் சுன்னம்பண்ணே. 248

பண்ணியதோர் சுன்னமதில் வீரம்பூரம் - பக்குவமாய்க் கல்வத்தில் வாய்நீராலே, உண்ணிய தானதொரு தாரத்துக்கு - உத்தமனே கவசமது நன்றாய்ச்செய்து, நன்னயமாய் மண்சீலை யேழுஞ்செய்து - நலமாகப் புடம்போடக் கட்டும்பாரு, புண்ணியனே இப்படியே சாகங்கட்டிப் - புதுமையுடன் ரெண்டுமொன்றாய் வேதைபாரே. 249

புசுண்டருக்குச்சொன்ன தாரக்கட்டு.

பாரப்பா இன்னமொரு வகையைக்கேளு - பரமான புசுண்டருக்குப் பகர்ந்தவித்தை, நேரப்பா கின்றதொரு கல்லுவாங்கி - நினைவாக அந்திடைக்குக் காலுங்கூட்டி, சேரப்பா அந்திடைக்குச் சீனஞ்சேர்த்து - சிவசிவா மூன்றுமொன்றாய்க் கல்வத்திட்டு, வாரப்பா அறுவகையி னீராலாட்டி - மைந்தனே வட்டாக வுலர்த்திடாயே. 250



உலர்ந்ததொரு வட்டுக்கு மண்ணுஞ்செய்து - உத்தமனே நூறெருவிற் புடத்தைப்போடு, அலர்ந்துமிகத் தீயாறி யெடுத்துக்கொண்டு - அப்பனே கவசமது பிட்டுப்பாரு, மலர்ந்ததொரு பூப்போலே நீறிநிற்கும் - மகத்தான சுன்னமடா என்னசொல்வேன், கலந்ததொரு சுன்னமுடன் வீரம்பூரம் - கருவான வாய்நீரா லரைத்துக்கொள்ளே. 251

அரைத்ததொரு மருந்ததனைத் தாரத்துக்கு - அப்பனே கவசமது நன்றாய்ச்செய்து, விரைத்துமே மண்சீலை யேழுஞ்செய்து - விரைக்கவே ரவிமுன்னே காயப்போட்டு, மறைக்கமன மறிவாலே புடத்தைப்போடு - மைந்தனே புடமாறி யெடுத்துப்பாரு, நிரைக்கடங்கா ரவிபோலே மேனியாகித் - தன்மையுடன் கட்டுமடா தாரந்தானே. 252

தாரத்தின் வேதைதன்னை யார்தான்காண்பார் - தன்னிலையைத் தானறிந்தோன் காண்பானையா, பேரொத்த சித்தர்கள்தான் கண்டாராகில் - பெருமைதனைத் தானடக்கி மலைமேல்போவார், பாரொத்த பூமியுட காதங்கண்டால் - பலிக்குமடா வாதமுடன் யோகந்தானும், காரத்தின் செயலதனை யார்தான்காண்பார் கருணையுள்ள பூரணத்தோன் காண்பான் பாரே. 253

பாரறிந்து ஆரறிந்து குணத்தைக்கண்டு - பலமான வீரத்தை யறியான்மட்டை, கூரறிந்து குருவறிந்து வணங்காப்பாவி - குணமில்லாச் சண்டாளர் மெத்தவுண்டு, கோரறிந்து பேசாத உலுத்தரோடே - நீமகனே சொல்லாதே பாவம்பாவம், ஆரறிந்து வேரறிந்து கொம்பைக்கண்டு - தூண்டாத மணிவிளக்கைக் கண்டுபோற்றே. 254

போற்றுவது யாரையென்றால் பூரணத்தைமைந்தா - புதுமையுள்ள பூரணமே தெய்வந்தெய்வம், தேற்றுவதால் முனைந்தேறி நிலையில் நின்றாற் - சிவசிவா கயிலாயத் தேகத்தேகம், பூத்தமலர் வாசனையை யார்தான் காண்பார் - புதுமையுள்ள பூரணத்தைக் கண்டோன் காண்பான், காத்துநிலை தானடங்குங் குருவைக் கண்டு - கருவையறிந் துறுதிபெறக் காயசித்தே. 255

தாளகவேதை.

சித்தான தாளகத்தை [illegible] சிவசிவா மகாரசமுஞ் செந்திகட்டி, முத்தான கல்வத்தி லிட்டுக்கொண்டு - முசியாமல் சாரநீர் விட்டுஆட்டி, சத்தான தயிலமதிற் பின்புஆட்டு - சதாசிவன்போல் மெழுகாகுந் தன்மையாக, பத்தான மதிதனிலே யிந்தால்மைந்தா - பாலகனே பதினாறு வயதுமாமே. 256

ஆமப்பா குடவனிலே யிந்தாயானால் - அப்பனே ஆறரைக்கு அதிகன்காணும், நாமப்பா வெள்ளிசெம்பி லிந்தாயானால் - நன்மையுடனெட்டு வயதாகும்பாரு, தாமப்பா இவ்வேதை புசுண்டர்வேதை - தன்மையுடனவருடைய கற்பங்கேளு, காமப்பால் கானற்பால் ரெண்டுங்கொண்டு - கருவான பூரணத்தைப் பொசித்தான்பாரே. 257

புகையடிவிகற்பம்.

பூரணமென் றுமைக்கும் தெரியுமோதான் - புத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு, காரணத்தின் குருவருளாற் காணவேணும் - கருவான காரணத்தைக் கேளுமைந்தா, பிரகாசித்த சோதியென்று வதிநாவிலேசொல் - வெளியான தேகமது மாறியாதி, மாரணத்தைக் கொண்டு வந்து ஐயாகேளு - மயமான தெகதியப்பமை வைவாய்கேளே. 258

சேர்த்தபின்பு கவிமுகத்தில் வைத்துப்பாரு - சிவமெனவே ஒளிரும் போலிருக்குமப்பா, பார்த்தபின்பு கவிமுகத்தில் நகாள்காய்க்கால் - பாலகனேயுப்பாரும் பகலமையாகக், காத்தவொரு காசசாரீத்திறுப்பைக்கருவையுடன் நினைத்தேதான் கொண்டால்மைந்தா, மூர்த்திகர முன்னாகித் தேசஞ்சித்தாய்-முதலான ராஜசிவி முறைதானப்பா. 259

சூதகெந்தகம்.

ஆமப்பா இன்னமொரு விபரஞ்சொல்லேன் - அருள்பெருகுங் குருமுனிக் கருணும்வார்த்தை, காசெனற விந்தையடா ஆதியுப்பு-நவமான வுப்புடனே அருக சேர்த்து, காமப்பால் கொடியுப்பு சேரச்சேர்த்துக் கல்வத்தில் மூன்றுமொன்றாய்க் கருவாலரட்ட, வாமப்பால் விட்டாட்டிப் புடத்தைப்போடு - மகத்தான ருபடா நீறிப்போமே. 260

நீறியதோர் கன்றுப்பில் வீரம்பூரம் - சேரப்பா கேர்பாதி சேர்த்துக்கொண்டு, மறியதோர் வாய்நீரால் கல்வத்தாட்டி - உத்தமனே மன்றுக அரைத்தபின்பு, காரியமாய் கவிமுகத்தில் காயமைப்பாய் - கருவாக வுருட்டியதை வட்டுப்பண்ணி, ஆதியதோர் மண்சீலை யேழுஞ்செய்து - அப்பனே புடம்போடச் சுன்னமாச்சே. 261

ஆசகப்பா சுன்னமது வாய்நீராலே - அப்பனே பூரத்தைக் கல்லிட்டு, பேச்சப்பா வொன்றுமில்லை மண்சிலைசெய்து - பிசகாமற் புடம்போட நீறிப்போகும், காய்ச்சப்பா அக்கினியில் வீரம்பூரம் - கருவிட்டு மத்தித்துக் குருசக்கப்பி, பாய்ச்சப்பா மண்சீலை யேழுஞ்செய்து - பக்குவமாய்ப் புடம்போடச் சுன்னமாச்சே. 262

சுன்னமென்ற தாருநீறுடை சுன்னத்தினைத் - துருசான ரசத்தனக்குப் பத்துக்கொன்று, பின்னையேனி தானை மித்து வாய்நீர்விட்டுப் - புளையுடன்மத்திக்கத் திரண்டுபோகும், தன்மையுட வுருட்டியதை சுன்னத்தான்மே - தான்முழுத்திற் புடம்போட வுருகிநிற்கும், உண்மையுடன் பரியதனை யுருக்கிக்கொண்டு - உருண்டுநின்ற ரசம்கொடுக்கக் களங்கமாச்சே.

களங்கமில்லாக் களங்கதனை யெடுத்துக்கொண்டு - கருவைபெறச் செம்பதனி லூற்றுக்கொன்று, மலங்காமல் செந்தூரமடனே மாற்றுப்பத்தாய் - வரிசைபெறக் காதுமடா வெள்ளிக்கிந்தால், உளங்கனித்த பதினறுமாற்றுக்காணும் - உத்தமனே குடவனிலே மீந்தாயானால், ஜெலங்கனிந்த ஆதிலெல்லா மகற்றுமல்ல - தீர்க்கமுட னெட்டுமய தாகும்பாரே. 264



பாரப்பா ரசக்களங்கை நொறுக்கிக்கொண்டு - பழுதில்லாக் கெந்தியதனை யிடையே சேர்த்து, சாரப்பா வீரமுடன் பூரம்லிங்கம் - தயவான மனோசிலையுங் கூடச்சேர்த்து, நேரப்பா கல்வத்திற் பொடியதாக்கி - சேர்மையுள்ள குப்பிதனி லரைமட்டிட்டு, சீரப்பா மண்சீலை யேழுஞ்செய்து வெளிவா வாலுகையில் வைத்துப்போற்றே. 265

போற்றியே குருபரனைத் தொழுதுகொண்டு - புதுமையுள்ள சருகு கம்பு விரகால்மைந்தா, தேற்றியே நீயெரிப்பா வாறுஜாமம் - சிவசிவா செகஅரமென்னசொல்வேன், நாற்றிசையும் போற்றுமித்தச் செந்தூரந்தான் - நலமாகப் பணவிடைதான் கொண்டாயானால், பார்த்திபனே யாக்கைதனக் கழிவேயில்லை - பணிந்திடுவாய் குருபரனைப் பணிந்து போற்றே. 266

பிரமசித்திகற்பம்.

பணிந்துமிக இன்னமொரு கருவைக்கேளு - பார்தனிலே பிரமசித்திக் கருளும்வார்த்தை, கனிந்துமிகப் பூரணத்தைக் கனித்துக்கொண்டு - கமலமதி லேயிருந்த மூலவாங்கி, அணிந்ததொரு கமலமதில் விட்டு, தணிந்துமிக ரெண்டுமைந்தா - அருள்பெருகுங் கழுகுதனை யதனில்விட்டு வொன்றாய் ரேசித்தேதான் அலம்குரவி முகந்தனிலே காயவையே. 267

வையப்பா இந்தவிதம் முறைபத்தப்பா - வைத்ததினாற் காரமுடன், மெய்யப்பா சொல்லுகிறேன் ரெண்டுமொன்றாய் - வீரமுந்ரெண்டும், செய்யப்பா அக்கினியில் முன்போலவே திருகீறாய்ப் போகும்பாரு, பத்து-தெசதீட்சை பண்ணிவிட சேதிகேளு, அய்யனே யமுதரசமான கற்பம்-ஆருக்கும் விள்ளாதே யருமைதானே. 268

தானென்ற அமுதரச கற்பங்கொண்டு-தாரணிதனில் பிரமசித்தி கனேயென்று, ஊனென்ற வுயிர்தனைத்தான் இருத்திடப்பாலே - உண்டான திரியண்டமெல்லா மறுத்துநின்று, கோனென்ற குருவாகிக் குருவான்-குருவான பிரமகுரு யார்தான்காண்பார், காவென்ற ஆணவத்தை யொடுக்கிமைந்தா-தன்மையுட னிந்நூலில் பதனம்பண்ணே. 269

இந்நூலா மாயிரத்தி இருநூறுக்குள்-இதமான சீருக்கிடையுங் குருக்கிடையுமப்பா, சந்தேகமில்லாமல் சொன்னேன் வாக்யம் - தன்மையில்லா மானிடர்க்குச் சாற்றினாக்கால், பந்தமிலாப் பரசமது சூழ்ந்துக்கொண்டு-பாழ்நரகில் வீழாதே பதனஞ்சொன்னேன், அந்தமுள ஆதியந்த மிதிலே தோன்றும்-யாருக்கு மிந்நூ லளிக்கொணாதே. 270

ஒன்றான கற்பமடா பிரமகற்பம்-உண்மையுடன்-செய்தவனே சித்தன் பூரணசித்தன், பண்டான சோதியடா பரப்பிரமமாச்சு - பாருலகில் தன்மைதைப் பணியமாட்டார், நன்றான பிரமகுரு யார்தான் காண்பார்-நன்முறையுடன் கண்டவனே சீவன்முத்தன், உண்டான சேதியொன்று முரைக்கமாட்டார்-உரைத்தாக்கால் வருகாக மூண்டாம்பாரே. 271

பாரப்பா நரகமதில் சேராமற்றே-பராபரத்தி னருள்பெருகி யிருக்கு நன்றே, நேரப்பா நின்றபொருள் காணவேணும்-நிருமலமாம் பிரமகற் பங்கொள்ளவேணும், காரப்பா அடிமூலங் காக்கவேணுங்-காரணத்தால் சகலசித்துங் காணுந்தானே, ஆரப்பா அறிவார்கள் காரசாரம் - அடங்கி நின்ற பொருளறிந்து அருளைப்பெற்றே. 272

அருளான பூரணமே போதம்போதம்-ஆதியென்ற பிரமகுரு வான போதம், மருளான மயக்கமெல்லாந் தீர்த்தபோதம் - மலதடங்கி யொரு மையாய் மகிழ்ந்தபோதம், திருவான லட்சுமிப்பெண் வாசமான - தேசி யென்ற குருதேசி நின்றபோதம், உருவான அருவுருவா யமர்ந்தபோதம்-உண்மையென்ற போதமதி லாகந்தானில்லை. 273

நில்லென்ற நிலையறிந்து நின்றால்மைந்தா - நிலையான போதமதை நீதான்காண்பாய், கல்லென்ற கருங்காரக் கல்லைமைந்தா - காசினியோரறிவார் கருதிப்பார்க்க, அல்லென்ற கருவிகளை யகற்றிருக்கால்-அருள்பெருகும் பிரமநிலை யருளைக் காண்பான், இல்லாட ராஜருடசெயல்கண்டாக்கால்-இவனிவா பிரமரிஷி யானவ்யாரே. 274

## பாரதசிவதிருப்பம்.

பாரப்பா இன்னமொரு புதுமைகேளு - பராசமுனி தான்செய்த பகர்ந்தவித்தை, ஆரப்பா அறிவார்க ளிந்தவித்தை - அன்பான புலத்தியனோ யுனக்குச்சொல்வேன், நேரப்பா பிரமகுலந் தாதிக்கதென்று-நிச்சயமாய் மூலமதை சமூலங்கொண்டு, வீரப்பா செய்யாமல் நவியர்ருக்கி-வீறடங்கித் காய்ந்தபின்பு வித்தைகேளே. 275

கேளப்பா கல்தூரலி விட்டுமைந்தா - கிருபையுள்ள இருப்புலக்கை தன்றுற்நுந்தி, கோளப்பா வாராமல் கொழித்துக்கொண்டு - கூர்மையுடனிடித்திடலாய் கவிடதாக்கி, வானப்பா இடித்ததைச் சமூலங்கொண்டு-மைந்தனே தன்னவீரில் பிசைந்துவைத்து, நீளப்பா மிருசாமல் பிசைந்து கொண்டு-தேரான் ரவிமுகத்தில் வைத்துப்போற்றே. 276

போற்றுவது தசநீட்லை முறிந்தாளல்-புதுமையுள்ள வுப்பதுதா னென்ன சொல்லேன், நாட்டிகமா யமுதரச வுப்பைமைந்தா-காளியென்ற பீங்கானி விட்டுக்கொண்டு, பூட்டுவாய் குடமொன்று இணங்கவொன்று-பொல்லாத வீரமொன்று கருவும்பொன்று, நாட்டியே ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு-நலமான பானவாய் வெந்துப்போடே. 277

போட்டபின்பு மண்சீலை வலுவச்செய்து-புதுமையுட னிடுப்பளவில் குழியில்வைத்து, மாட்டுவா யானையுட கட்டம்போட்டு - மைந்தனே மணல்கொட்டி வைத்துக்கேளு, நாட்டிகமா யதின்மேலே இணலை போட்டுத்-தன்மையுடன் தானிருந்து தன்னைப்போற்றி, நாட்டுவாய் லட்சமுரு நீலகண்டம்-நன்மையுடன் நினைந்தொழுக நன்மையாமே. 278



நன்மையது என்னவென்றால் மைந்தாகேளு - நலமான மெழுகாகுமண்டலத்திலப்பா, உண்மையுட னம்மெழுகை யெடுத்துக்கொண்டு-ஊட்டுவாய் தினந்தோறு மெழுகுபோல, தின்மையென்ற சடலமது நன்மையாகுந் - தெளிவா ஆக்கையது பிலத்துப்பாரும், தன்மையென்ற மெழுகினுட பெருமைதன்னைச்-சதாகாலம் போற்றிப்பூரணத்தை நோக்கே. 279

பூரணமாய் நின்றதொரு மெழுகுதன்னில்-புதுமையென்று சொன்னதொரு புகலக்கேளு, காரணமாய் நின்றகவிம் பானசெம்பில்-கருத்துடனே தாற்றுக்கு வொன்றுபோடு, மாரணமாய்ப் போகுமடா செம்புதானும்-மாற்றேது என்னவென்றால் மைந்தாகேளு, காரணத்தின் பொருளதினால் நூறுமாற்று-நன்மையுடன் காணுமடா நாம்சொன்னோமே.

## ஆறுதாரம்.

சொன்னதொரு மூலத்துக் கப்பால்பாரு - துலங்குமடா ஆறுதலம் பிரமாவீடு, நன்மையமாய் நகாரமென்ற பூமிக்குள்ளே - நாடிநின்ற வாசியினால் பிறப்புமாச்சு, தன்மையுட னதின்மேலே மாலின்வீடு-தனமான பத்தெழும் பிறையுமாகும், உண்மையுடன் ஜெகத்துக்குத் தாயாய்நிற்பாள்-ஓங்கார மாய்த்துக் காதிதானே. 281

ஆதியாந் திரோதாயி யமர்ந்தவீடு-அருளான போதமிருந் தாமெம்வீடு, நீதியாய் சாயிபத்தை நிமிர்த்தும்வீடு-நினைவில்லா மாயமெல்லாம் நிறைந்தவீடு, பேதியா மனமுமொன்று பெண்ணைத்தேடிப்-பேய்க்கூத்தா யாட்டுவிக்கும் பிலத்தவீடு, சோதியென்று வரமளித்த தும்பச்சிவீடு-சுகமாகக் கண்டறிந்து மேலேயாரே. 282

பாரப்பா அதின்மேலே பனிரண்டுக்குள்-பாணுவங்கே யீராறு முகமாய்நிற்கும், நேரப்பா நேரவென்றால் கண்கொள்ளாது - நேர்த்தானும் நடுவிலேயில் திரிகோணமாகி, சீரப்பா சிகாரவென்ற எழுத்துநிற்கும்-தெளிவா ருத்திரனும் ருத்திரியுமிருப்பார், காரப்பா கமெலையில் நின்றகாட்சி காணவென்றால் கண்கொள்ளாக் காட்சியாமே. 283

காட்சியா மவருடைய கூத்தைக்கேளு - கடும்பசியும் நித்திரையும் பயம்மைதியோகம், மாச்சலசெய்யும் வினைத்தால் காமமீறி - வலுமையுடனாதிரையுமாகிநிற்கும், பாசமென்ற சடம்பிறந்து பாழாம்வீடு - பரனான யோகமெல்லாம் பறந்துபோகும், காட்சியுட னதினுடைய கூத்தைக்கண்டு-தாண்டிநின்ற அகாரமதின் தன்மைகேளே. 284

கேளப்பா பதினாறு வாயல்வீடு - கெடியான காமமுதல் குரோதம் லோபம், மானப்பா மோகமொடு மதத்திநோடு - மகத்தான பிறப்பற்றுமாவப்பண்ணும், கோளப்பா இல்லாத பரத்தின்வீடு - சூரியாக அதின் குணத்தைக் கூறக்கேளு, நாளப்பா மேல்மூலம் அகாரவீடு - காதுக்காதிலெனுமகேசன் யனியந்தானே. 285

தாமென்ற மனோன்மணியுஞ் சதாசிவனுங்கூடித்-தயவாக ரெண்டு தழி லிருக்காரப்பா, காமென்ற நால்வருந்தான் போற்றிசெய்யக்-கண்ணடங்காப் பிரபை யொளி கருதிப்பாரு, மாமென்ற சக்கரத்தி லிருந்து கொண்டு-மகத்தான வித்தையெலா மகிழ்ந்துபாரு, வீமென்ற வறுமையுமாய் மனதுமாகி-வித்தான கருவிறுள கூத்துமாச்சே. 286

ஆச்சப்பா வுலகத்தில் கர்மாதர்மம்-ஆவதொரு சரியைமுதல் கிரியையாகி, காட்சியதோர் யோகமுமாய் ஞானமாகிக்-கரைகொள்ளா நாலாங் கருவுமாகி, காட்சியிலாத் தெளிவாகி யளவுமாகிச்-சகலமெலாந் தோற்றஞ்சாங் கிரமுமாகி, பேசாகிப் பொருளாய்மேல் வழியைக்காட்டப்-பெருமையுள்ள குருபதத்தைப் பூசிப்பாயே. 287

## ரோமரிஷி வேதை.

பூசித்த கருமான மொன்றுகேளு-புத்தியுள்ள ரோமரிஷி புகழ்ந்த வித்தை, நேசித்த கருவான வுப்புசெட்டி-திருமலமாங் கல்லுப்புக் கூடச் சேர்த்து, ஆசித்த ரவிபீசம் நாலுக்கொன்று-அடைவாக மூன்றுமொன்றாய்க் கல்வத்திட்டு, பாசித்த விந்துநீர் தன்னாலாட்டிப்-பக்குவமா யுருட்டி யதை வட்டிப்பண்ணே. 288

பண்ணப்பா வட்டத்துக்கு மஞ்சிலைசெய்து-பக்குவமாய் சாடையொரு புடத்தைப் போடு, நன்னயமாய் நீறியது சுண்ணாம்பாகும்-நாடகத்தி லாடுகிற குருவிதப்பா, தன்மையென்ற சுண்ணமுடன் வீரம்பூரந்-தாக்கி நன்றாய் மத்திப்பாய் வாய்நீராலே, உண்மையென்ற துருசதற்குக் கவசம்பண்ணி-யுத்தமனே மண்சீலை யுகந்துசெய்யே. 289

செய்யப்பா கவசமதை புலரவைத்துத்-தியானத்தின் கனல்மேலே வைத்தாயானால், மெய்யப்பா சொல்லுகிறே னீறிப்போகும்-மேன்மையுள்ள சுண்ணமதை யெடுத்துக்கொண்டு, வையப்பா நாகத்துக் கங்கி பூட்டி வரிசைபெறக் [illegible] கவசமதை வலுவாய்ச்செய்து, வையப்பா ரெண்டெருவிற் புடத்தைப்போடு-பசுமையுள்ள தாரமது கட்டிப்போச்சே. 290

போச்சப்பா தாளகத்தி னூறலெல்லாம்-புகழான ரவிபோலே யிருந்திருக்கும், பேச்சப்பா வொன்றுமில்லை வெள்ளிநாற்றில்-பிலமான தாரமொன்று சந்தாயானால், காட்சியிலாப் பதினாறு மாற்றுத்தங்கத்-தடையறவே காணுமடா தவக்கமில்லை, மாச்சல்செய்யும் குடவனிலே நாற்றுக் கொன்று-மக்களே யொன்றிடவே யெட்மாற்றே. 291

எட்டுரெண்டு வெள்ளிசெம்பை யுருக்கிக்கொண்டு-இன்பமுள்ள தாரமதிற் காறேயிவாய், மட்டில்லா அஞ்சாறு மாற்றுக்காணும்-மகத்தான வேதையடா தாரத்தாரம், அட்டியில்லா தாரமதுக் காரகந்தான்-ஆராயப் போகிறூர் ஐயாஐயா, திட்டமுடனிம்முறைதான் நல்லபிரயோகந்-திட்டமான ரோமரிஷி கற்பங்கேளே. 292



## ரோமரிஷி கற்பம்.

கற்பமென்று சொல்வதெல்லாங் காயாதிகற்பங்-கருவறிந்து வுருவறிந்து கருவைப்பார்த்து, அற்பமென்று நினையாம லாதியுப்பை-அறுசுவையோ டெடுத்துவந்து அறுநீர்விட்டு, மெய்ப்பாக அப்புமுப்பு மொன்றாய்ச்சேர்த்து-விசையான ரவிமுகத்தில் வைத்துப்பாரு, உற்பனமாய்க் கயப்பேறி கற்பமாகும்-உடலிலூட வலுவறிந்து ஊட்டுவாயே. 293

ஊட்டுவது தினகுறி அளவுகொண்டு-உறுதிபெறக் கொண்டதின்மேற் கழிஞ்சிகொள்ளு, காட்டுவது பூரணத்தில் மனதைநாட்டு-நன்றான பேரொளியில் நின்றால்மைந்தா, வாட்டரவு மொன்றுமில்லை நரை திரையுமாறும்-மகத்தான காயமது வலுத்துப்போகும், தாட்டிகமாய் நின்றதொரு காயாதிகற்பந்-தனையறிந்து கொண்டவனே சித்தனாமே. 294

சித்தான காயாதி கற்பந்தன்னைச்-செகத்திலுள்ள மானிடரோ காணப்போறார், முத்தான மகிமைதனை யார்தான்காண்பார்-மூர்க்கமுள்ள சத்தரிஷி முனிவர் காண்பார், வற்றாத பூரணத்தைக் கண்டால்மைந்தா-வலுவாகக் காயசித்தி யோகங்காணும், பத்தான தசதீட்சை பருவங்கண்டால்-பலிக்குமடா சகலசித்தும் பலிக்குந்தானே. 295

தானென்ற தத்துவத்தை யறிந்துகொண்டு-தன்மையென்ற பூரணத்தைப் பணிந்துகொண்டு, கோனென்ற குருவருளைப் போற்றிக்கொண்டு-கும்பமுனி தஞ்சமென்று நின்றால்மைந்தா, மானென்ற மதியமுதங் கசிந்துகாணும்-மார்க்கமுள்ள குண்டலியின் மகிமைதோற்றும், ஊனென்ற ஞானசித்தா வெல்லாஞ்சித்தி-ஊடாடும் வாசிதனை யுற்றுப்பாரே. 296

பாரென்று சொன்னீரே கும்பமுனியய்யா-பராபரத்தின் வகையதனை யார்தான் காண்பார், நேர்நின்ற வாசிதனை யறிவாற்பற்றி-நிலையான குருபதத்தில் சேர்த்துக் கொண்டால், ஆரென்ற அடிமூலங் கணேசன் கோவில்-துலங்குமடா கற்பத்தில் சூட்சமெல்லாம், வேறென்று மயங்காதே ஐயாஐயா-விஞ்சையென்ற [illegible]லமந்திர மிதுதான்பாரே. 297

## பூமியுப்பு மகிமை.

பாருப்பு மகிமைதனை சொல்லக்கேளு-பாரின்ற பூமியுடநாதமப்பா, ஆருப்பு மகிமைதனைக் காணப்போறார்-அருளான விந்துநீர் தன்னிற்போட்டு, சேருப்பு ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு-சிக்கெனவே ரவிமுகத்தில் வைத்துப்பாரு, காருப்பு இப்படியே பத்துமுறை செய்தால்-கருவான ரெண்டுமொன்றாய்க் கட்டும்பாரே. 298

பாரப்பா கட்டியதோ ருப்புரெண்டு-பகராத கல்லுப்புரெண்டுங் கூட்டி, சேரப்பா ரவிபீசம் பெண்டிலொன்று-சேர்த்துமிகக் கலவமதில் சேர்த்துக்கொண்டு, வாரப்பா மூன்றிலொன்று துருசுசேர்த்து-வாரியா மறுவலகையின் தன்னாலாட்டி, வீரப்பா அடங்கவுமே நன்றாயாட்டி-வில்லைபோல் பிடித்ததனைக் காயப்போடே. 299

காரியக்கட்டு.

போட்டதொரு வட்டதற்குக் கவசஞ்செய்து-புதுமையுடன் புடம்போடச் சன்னமாகும், தேட்டமான சன்னமது பாகம்பண்ணிக்-கெப்பான செவுரிதனைக் கப்பிபூட்டி, மாட்டமா மணலிலே யெருக்குசெய்து-மண்மனைதனில் புடம்போட்டு வாங்கிக்கொண்டு, காட்டமா காரியந் தன்னைமைந்தா-கருவான காரியங் கட்டிற்தானே. 300

தானென்ற காரியக் கட்டைத்தானுக்-தன்மையென்ற காரபதாருக்கிக்கொண்டு; தேவென்ற பரிதனிலே யிடைக்கிடைதான் சேர்த்துக்-தெளிவான செம்புதனில் ஆற்றுக்கொண்டு, கோலென தருருவருகால் கொடுத்தால்மைந்தா-குறையாது ஒன்பதவை குணமோமெத்த, தேவென்ற பூரணத்தின் செயல்தன்றுலே-திரமாக இன்னமொரு கருவைக்கேனே. 301

சாதிலிங்கக்கட்டு.

கேளப்பா முன்குருவிற் கழிஞ்சிவாங்கிக்-கிருஷ்ணையுள்ள சாதிலிங்கடன் பூரஞ்சேர்த்து, நீளப்பா வைப்பரால் குருகைமைந்து-நிச்சயமாம் வீரமுமது நன்றாய்ச்செய்து, கோளப்பா வாராமல் லிங்கத்தாக்கு-குணமாகக் கவசவிற் புடம்போட வலியுந்தானே. வாளப்பா மண்மனை யெருக்குச்செய்து-மண்மனை 302

சாதிலிங்கக்களங்கு.

தானேதான் வலித்திருந்த லிங்கந்தன்னைத்-தன்மையுடன் மூன்றுபுட மிப்படியேசெய்து, வீணேதான் திரியாமல் மைந்தாகேளு-வீளங்கி நின்ற சாதிலிங்கந் தன்னைவாங்கி, பேணேநீ பசிதமென்ற நாகந்தன்னைப்-பிலமாகச் சுற்றிமுன்பின் குருவைப்பூசி, சேணவே மணலிலே செய்துக்கொண்டு-சுகமாகப் புடம்போடக் களங்கமாச்சே. 303

ஆச்சப்பா சாதிலிங்கக் களங்கைவாங்கி-அருள்பெறுகுஞ், சற்குருவினருளைப்போற்றி, கூச்சமில்லாச் செம்புதனில் ஆற்றுக்கொண்டு-குருவான களங்கமதை மீத்தாயானல், தாட்சியில்லா பதினாறு மாற்றுக்காணுஞ்-சடையதுபோல் வெள்ளியிலே யிய்ந்தா மைந்தா, மாச்சலில்லா முப்பத்திரண்டுமாற்று-மகத்தான குடவனுக்கு ...துபாரே. 304

பாரப்பா குடவனிலே மூன்றாற்றுக்கொண்டு-பக்குவமாய் கொடுத்திருக்க மாற்றெட்டாகும், காரப்பா வெள்ளிசெம்பு களங்காய்ச் சேர்த்துக்-கருவான களங்கமதை ஆற்றுக்கொண்டு, சேரப்பா குடவனிலே யுருக்கிப்பாரு-சிவசிவா சொருகு மாற்றேறகாணும், ஆரப்பா அறிவார்கள் வள்ளிகெற்பம்-அடக்கத்தி லாடுமென்ற அருமைதானே. 305

காரியபற்பம்.

தானென்ற வப்புடனே காரஞ்சேர்த்துச்-சம்பழத்தின் சாற்றினுலரைத்தியாட்டி, வீணென்ற காரியத்துக் கவிபூட்டி-மீறடைக்கச் சிலைமண்விசையாய்ச் செய்து, காணென்ற காட்டெருவிற் புடத்தைப்போடு-கனல்மீறி காரியம் பற்பமாகும். தேவென்ற பற்பமதைப் பதனம்பண்ணி-சிவசிவா முப்பூவுங் கூடச்சேரே. 306



சேரப்பா வீரமுடன் பூரஞ்சேர்த்து-சிவசிவா சம்பழத்தின் சாற்றுலாட்டி, வீரப்பா கொண்டுநின்ற பாஷாணத்தான்-வீறடங்கக் கவசமதை விஞ்சையாக்கி, பாரப்பா மணலிலே யெருக்குச்செய்து-பக்குவமாய் மூன்றுபுட மண்மனைதனிற்போடு, சீரப்பா மூன்றுபுடம் போட்டபின்பு-இக்கெனவே காடையொரு புடத்தைப்போடே. 307

பாஷாணபற்பம்.

போடப்பா காடையென்ற புடத்திற்றனே-புதுமையுள்ள பாஷாணம் நீறாய்ப்போகும், காடப்பா பாஷாண நீற்றில்மைந்தா-சமமொன்று சொல்லுகிறேம் நன்றாய்க்கேளு, கேடப்பா வெள்ளியம் உருக்கிக்கொண்டு-சேர்த்துவிரைய் பற்பமதை ஆற்றுக்கொண்டு, பாடப்பா வொன்றுபிலே வெள்ளியந்தான்-பதையாமல் மாண்டதுவுந் தெரிந்துபோமே.

போமப்பா தெரிந்துநின்ற வெள்ளியத்தைப்-புகழ்பெருகு மதிதனிலே யிடைதான் சேர்த்து, நாமப்பா குகைதனிலே யுருக்கிப்பாரு-நலமான சாரமொன்று மொன்றாய்ச்சேர்த்து. வாமப்பா தன்னாலேருவாய்ப்போகும் மகத்தான குருவினுட வகையைக்கேளு, தாமப்பா பூரமென்ற தாம்பிரத்தைத்-தன்மையுடன் குகைதனிலே யுருக்கிப்பாரே. 309

உருக்கியதோர் பூரமதில் ஆற்றுக்கொண்டு-உத்தமனே கொடுத்துருக்க மாற்றுப்பத்தாம், கருக்கமென்ற வெள்ளியிலே ஐயாற்றுக்கொண்டு-கருவாக்கக் கொடுத்திருக்க அதிகமாற்றும், திருக்கான பாஷாணப் போக்குதன்னை-சிவசிவா வென்னசொல்வே னின்னங்கேளு, குருக்கான வழியொன்று சொல்வேன்மைந்தா-குருவான முப்பூவின் குருவைவாங்கே.

பாஷாணக்கட்டு.

வாங்குவாய் முப்பூவிற் காரசாரய்-வரிசையால் குருசினுட சன்னஞ்சேர்த்து, பாங்குபெறக் கல்மதி விட்டுமைந்தா-பழச்சாற்று லரைத்தெடுத்துப் பருவமாக, நீங்கில்லாப் பாஷாணந் தனக்குமைந்தா-திருக்கறவே கவசமது திறமாய்ச்செய்து, காங்கையதி லேறுதற்கு மண்மனையில்மைந்தா-கருத்துடனே புடம்போட்டுக் கட்டும்பாரே. 311

பாரப்பா இப்படியே மூன்றுபுடம் போடு-பக்குவமாய்க் கருக்குடத்திலுருகும்பாரு, காரப்பா வுருகிநின்ற பாஷாணந்தன்னைக் கருத்துடனேதானெடுத்துக் கருக்கக்கேளே, சாரப்பா வெள்ளிவங்க முருகும்போது-சாற்றடா இடைக்கிடைதான் பாஷாணஞ்சேர்த்து, வீரப்பா செய்யமறுருக்கிப்பாரு-வெள்ளியக் கட்டியது வுடையும்பாரே. 312

வெள்ளியபற்பம்.

உடைந்திருந்த வெள்ளியக் கட்டிவாங்கி-உண்மையுட னிடைக்கிடைதான் வெள்ளிசேர்த்து, கடைந்ததொரு குகைதனிலே யுருக்கிப்பாருகமலமென்ற வெள்ளியது கொருக்குமப்பா, அடைந்ததொரு கல்மதிவிட்டுமைந்தா-ஆரகாரா இடைக்கிடைதான் ரசத்தைச்சேர்த்து, ஜெடம்வழுத்த செயநீர லரைத்துமைந்தா-சிவசிவா வுருட்டியதை வட்டிப்பண்ணே. 313

பண்ணியதோர் வட்டத்தை யோட்டில்வைத்துப்-பக்குவமாய் மண்
ணிலே யெழுஞ்செய்து, புண்ணியமா யெருவடக்கிப் புடத்தைப்போடு-
புதுமையுள்ள கனம் பூசைபண்ணு, தண்ணிமையாய்ப் புடமாறி எடுத்
துப்பாரு-தயவான பற்பமாய் நீறிநிற்கும், வெண்மையென்ற குருநீற்
றைப் பதனம்பண்ணு-வேகமுள்ள வன்னிகற்பம் இதுதான்பாரே. 314

வன்னிகற்பம்.

பாரடா வன்னியுட கற்பந்தன்னைப் - பாய்ச்சடா வெள்ளிசெம்பில்
மாற்றுக்கொண்டு, சேரடா கற்பமது தங்கிற்றானால் - சிவசிவா சோதி
யுடதிரமோமெத்த, ஆரடா அறிவார்கள் வன்னிகற்பம் - அறிந்தவனே
சிவயோகி அதுதான்மைந்தா, கூரடா குருபதத்தைத் தொண்டுபண்ணிக்-
குருவிருக்குஞ் சந்நிதியைக் குறித்துப்போற்றே. 315

போற்றுவது பூரணத்தைப் போற்றவேணும்-புதுமையுள்ள குருபத
த்தைப் பணியவேணும், நாட்டுவது சுழிமுனையில் மனத்தைநாட்டி - நா
லான் பூரணத்தை நாட்டிப்பாரு, தாட்டிகமாய் மனதுறுதி யாகநின்றால்-
சடாதாரக் கோவையிகந் தானேதோற்றும், ஆட்டிவிக்கும் வாசியுட கரு
வைக் கண்டால்-ஆதியந்தப் பதிதோற்று மாதிதானே. 316

ஆதியென்ற சோதிதனைக் கண்டால்மைந்தா - அரகரா மனோன்மணி
யை யற்புதமேசெய்து, நீதியென்ற ரவிதனிலே சேர்த்தால்மைந்தா-
நிச்சயமாய் சித்தியதாம் நீதான்பாரு, சோதியென்ற தொடுகுறியை
[...]ன்னைசொல்வேன்-அருமையுள்ள மேருவதில் ரவிமதிதான்சேரு, வாதி
யென்று மனமொத்து நிலையில்வைத்தால்-மகத்தான குருவருளால் மைந்
தாபாரே. 317

பாஷாணக்கட்டுருக்கு.

பாரப்பா சற்குருவைத் தொழுதுகொண்டு-பாய்ச்சடா வெள்ளைபெ
ன்ற பாஷாணத்தில், காரப்பா ப[...]சனை திட்சைபண்ணு-கருவான பா
ஷாணைக் கட்டிதானும், கோப்பா [...]ருகுரு ருட்சத்தாலே-நிச்சயமாய்க்
கட்டியது வுருகும்பாரு, ஆரப்பா [...]வார்க ளிந்தப்போக்கு ஆச்சரிய
மாச்சரிய மருளைக்கேளே. 318

கேளடா கட்டிநின்ற பாஷாணத்தைக் - கிருபையுள்ள செம்பதிலே-
மாற்றுக்கொண்டு, வாளடா குகைதனிலே யுருகும்போது - மாட்டடா
மதிபோலே யாகுஞ்செம்பு, கோளடா வாராமல் தாயைச்சேரு-குணமான
வங்கத்துக் கசையாதப்பா, ஆளடா கயிலாசத் தடுத்துமென்ன - ஆதியெ
ன்ற பராபரத்தி னடியைப்போற்றே. 319

அடியென்ற அட்சரத்தை யார்தான் காண்பார்-அப்பனே அகாரமெ
ன்ற அருளைக்காணோர், முடியென்ற மவுனமதில் முதலைக்காணோர் - முத
லறிந்து தினம்பணிய முடியைக்காணோர், படியான படியறிந்து ஏறமாட்
டார் - பாவிகள்தான் வெறும்பிதுக்காய் பகருவார்கள், வடியான ரூப
மதை யறிந்தால்மைந்தா-வஞ்சமற வுலகமதில் வாழலாமே. 320



வாழவே மதிபருகக் கண்டோமென்று - மகத்தான பூரணத்தை
யறிவோமென்று, ஆழவே அடிகாலைக் கண்டோமென்று - அப்பாலே
மடையதை யறிந்தோமென்று, வேலான வடிவேலை யறிந்தோமென்று-
வேதாந்தப் பூரணத்தைக் கண்டோமென்று, மாலவே அமுதமென்று
கபாலத்தனில்-மகத்தான சேத்திரத்தைக் கொள்வான்பாரே. 321

அமுத சஞ்சீவி.

பாரப்பா அமுதசஞ் சீவியொன்று-பகருகிறேன் புலத்தியனே பண்
பாய்க்கேளு, காரப்பா பிருதிவியாம் பூமிதாதம்-கருவான மனோன்மணி
யாங் கருவையிட்டு, ஆரப்பா அறிவார்கள் கவையின்பாகம் - அருளான
திருவுலமய வலர்த்தகாரம், வீரப்பா செய்தோரை அடக்குங்காரம்-
வேதாந்த மனோன்மணியை விளக்குந்தானே. 322

தாவென்ற தன்மையது பொருந்திநின்ற - தயவாகப் பரீன்ற கா
தம்வாங்கி, சோவென்ற குருவருளால் தண்ணீர்தன்னில் - குருவான
காதடைக்க வாரத்திறுத்து, பாவென்ற பாஷாணமதில் முகத்திலுமைக்
தாயாக்க வைத்துவர்த்திப் பதனமாக, ஊவென்ற அமுதமதில் முறை
பத்தப்பி-உற்பனமா யஞ்சபத்து முறைதான்செய்யே. 323

செய்யவே பூமியுட காதத்தானுஞ்-சிவசிவா என்சொல்வே னமுதப்
போக்கு, மெய்யான சத்திசிவ மிரண்டு மொன்றாய்-விரவிநின்ற கருவத
னை விள்ளலாமோ, ஐயனே புனக்காகச் சொன்னேன்மைந்தா-அமுதகலை
யின் பாகமதை யார்தான் காண்பார், வையமதிற் கோடியிலே யொருவ
ருண்டு-மகத்தான பூரணத்தின் வளங்காண்பாரே. 324

பாரினிற் பிருதிவியு மப்புங்கூடி-பதியான [...]ல் சமாதிகொ
ண்டு, வாரின்ற வாயுவுமா காசங்கூடி - [...]ந்துநின்ற அமுதசஞ் சீவி
தன்னை, ஆரின்ற யாரறிவா ரமுதப்போ[...]கு-அரகரா அமுதசஞ் சீவிதன்
னில், சேரின்ற குன்றியிடை கொண்டால்மைந்தா-நிச்சயமா யாக்கை
யது சித்தியாமே. 325

பொரிக்காரகற்பம்.

சித்திபெற இன்னமொரு வியரஞ்சேரு - சிவசிவா பொரிக்காரங்
கொண்டுவந்து, முத்திபெற ஆவினுட நெய்யில்மைந்தா - மூர்க்கமுடன்
தான்பொரித்துக் கொண்டால் மைந்தா, அத்திதனி லுள்ளவிஷ மீந்த
மெல்லாம்-அந்நாவின் தேகமதி லடுகுண்டாகும், வெற்றிபெறக் காய
சித்திக் கிறதாம் மூலம்-விள்ளுவே னின்னமொரு சித்துகேளே. 326

நத்தியுப்பு.

கேளப்பா சித்தியென்ற சாரந்தானுங்-கிருபையுள்ள ஜலமதொன்று
சாரத்தட்டு, வாளப்பா சதிட்டை முறைபடித்தப்பா - வளமையுறச்
செய்துகொண்டு மைந்தாசேரு, கோளப்பா வாராமற் சொல்லக்கேளு-
குருவான ரவிநேர் கூட்டிச்சேர்த்து, நீளப்பா தனிற்கரைத்து ரவியில்
வைத்தால்-நீசமான கத்தியென்ற வுப்பதாச்சே. 327

உப்பான நந்தியுப்பைப் பதனம்பண்ணி - உண்மையுள்ள மந்திரத்தைத் தியானஞ்செய்து, அப்பான தினங்கூறுநீ கொண்டாயானால் - ஆக்கைதனி லுள்ளவுப்பு அகன்றுபோகும், தப்பாமல் தினந்தோறுங் கொண்டு யேறு - சதானந்தி யப்பிலுட தன்மைமெத்த. செப்பாதே சருவிதுதான் மைந்தாமைந்தா-செகத்தோர்க்கு விள்ளாதே சித்தர்க்காமே.

ஆமப்பா நந்தியுட மூலதாரம் அழகான பிருதிவியி னருமைமெத்த, காமப்பா சொல்லுகிறேன் சுத்தகங்கை-நலமறியாச் சித்தர்களை காணப் போனார், காமப்பால் கானேற்பால் கருவைக்காணார் - கருவறிந்து நெறிபெற்றார் காயசித்தி, காமப்பா பெலந்தீல தனையறிந்து - தவறாமல் ரெண்டுமொன்றாய்த் தாக்குத்தாக்கே. 329

உப்பு வேறு.

தாக்கியதோ ருப்பிடைக்குப் பூரஞ்சேர்த்துத்-தவறாமல் திடைக்குந் தெந்திசேர்த்து, வைக்கியர்நான் தப்பாமலொன்றாய்ச் சேர்த்து-வைத்திடுவாய் ரவிமுகத்தில் மைந்தாமைந்தா, பாக்கியமா யுப்பாகி மெழுகாய் நிற்கும்-பரமகுரு மெழுகதனைப் பதனம்பண்ணி, ஆக்கையுட திடமறிந்து அளவாய்க்கொள்ளு-அரகரா வாதமென்ற புளிப்புப்போச்சே. 330

பஞ்சிதவேறு.

போச்சென்று விடுகாமற் சொல்லக்கேளு - புதுமையுள்ள அட்டிப்புநீரில்சேர்த்து, காச்சென்று வீரமொடு பூரம்லிங்கம்-கருணைபெற வொன்றாகச் சேர்த்துக்கொண்டு, மாச்சலில்லா ரவிமுகத்தில் காயவைப்பாய்-மத்தான மெழுகாகு மைந்தாமைந்தா, தாட்டியில்லா மெழுகினுட பே[illegible]ல்-ரஞ்சிதமா மெழுகெனவே சாற்றலாமே. 331

சாற்றிய[illegible]கதனை மைந்தாமைந்தா-சடத்தினுட செயலறிந்து தாயைப்போற்றி, [illegible]வாய் சழிஞ்சியிடை பூட்டிக்கொண்டு-உறுதி பெறப் பருதிமதிச் சுடரில்நி[illegible], தாட்டிகமாய் வாசியது பணிந்துமைந்தா-தன்னிலையைத் தானறிந்து[illegible] தனைதாயிற்கும், பூட்டியதோர் வாசியுட கருவைக்கண்டால்-பூரணத்தை யறுதினமும் போற்றலாமே. 332

ஆமப்பா வாசிதிரோ மணியைக்கேளு - அரகரா மகேசன்மணியை யன்பிற்கண்டு, காமப்பால் தன்னுடனே கரைத்திறுத்துக்-கருவான பூரமுடன் காரஞ்சேர்த்து, நாமப்பா சொல்லுகிறேன் கருவைக்கேளு-ஞாயிறுமுன் பத்துநாள் வைத்துப்பாரு, சோமப்பா நிலையதனைச்சொல்வேன் மெழுகதாகுங்-கருதியுள்ள மெழுகதனைப் பதனம்பண்ணே. 333

பண்ணியதோர் மெழுகெடுத்துத் தியானஞ்செய்து-பக்குவமாய்க் கழிஞ்சியிடை கொண்டாயானால், கண்ணிமையில் நின்றதொரு சோதிமெ[illegible]-காணுதே யோடிவிடுஞ் சிரோமணியைக் கண்டால், புண்ணியவானாகக்கால் கணத்தில்சித்தி-பூரணத்தைக் காணுதற்குச் சித்தியில்லை, வண்ணியன்ற சிரோமணியின் மெழுகிதுலே - மத்தான சித்தியெல்லாம் வாய்க்குந்தானே. 334



சதாசிவப்பின்வேறு

தாலவன்றாய் நின்றதொரு தன்மைகேளு - சகலபிணி போவதற்குச் சதாசிவத்தி னுப்பு, கோனருளாற் கொண்டுவந்து அறுநீர்தன்னில் - ஆறிப்பாகச் சுத்திசெய்து எடுத்துக்கொண்டு, கானற்பால் காமப்பால் தன்னிலேதான் - கனக்கமரப் பக்[illegible]சுத்திசெய்து, வீணப்பா என்னுநீ நினைத்தால்மைந்தா-வேதா[illegible]நெறிவிடு மெய்சொன்னேனே. 335

மெய்யாகச் சுத்திசெய்த வுப்பைவாங்கி-மேனியுட சாறுதனிலரைக்கமைந்தா, ஐயமிலா மெழுகாகு மென்னசொல்வேன் - அப்பனே யிம்மெழுகைத் தேனிலூட்டி, தப்பமறி யானசதா சிவனைப்போற்றித்-தொழுது கொண்டு கழிஞ்சியிடை கொண்டால்மைந்தா, கையுடிதில் தலங்குகின்ற ஐயந்தானும்-மாறிவிடுஞ் சிலேத்துமங்கள் மாண்டுபோமே. 336

போமப்பா தசையிலுள்ள தோஷமெல்லாம் - பொல்லாத அத்திசாரூலக்குடு, சாமப்பா விதனத்தால் வந்தகுடு - கருவழிக்கு மேகமொடு கபாலகுடு, தாமப்பா சருவாங்க வாயுவெல்லாந்-துட்டருந்து குஷ்டமெல்லாஞ் சாந்தமாகும். நாமப்பா சொல்லிவந்த கற்பமெல்லாம் - நாள் தோறுங் கொண்டுவரில் நமனுடானே. 337

நாடாமற் போவதுதா மெதிலுலென்றால் - நகாரமொடு மகாரத்தை நயந்ததாலே, தேடாம லோடிவிட்டா னயன்தானையா-சிவசிவா நமனென்றால் கேடேயில்லை, வாடாத நல்வினையுந் தீவினையுமப்பா - வஞ்சமுள்ள நமனைனவே மகிழ்ந்துகாணும், வாடாமு ரவிதானு மதியிற்சேர்ந்தால்-ஓகோகோ இருவினையு மோடிப்போமே. 338

ஓடிப்போம் சகலபிணி யெல்லாமைந்தா - உ[illegible]ள சாபமது நிவர்த்தியாக, நாடிப்பார் சாபமது நிவர்த்[illegible]கும்-நானென்று சொல்லுகிற னன்றாய்க்கேளு. சாடிப்பார் பூ[illegible]ணத்தைப் பூரகமேபண்ணிச்-சமயத்தில் ரேசகமாய்க் கும்பகத்தில்நின்று, பாடிப்பார் கமுனையமந்திரத்தைமைந்தா-பாவமென்ற சாபமது பறந்துபோமே. 339

நவக்கிரகசாபநிவர்த்தி.

போமென்று விடுகாதே யின்னங்கேளு-பொல்லாத நவக்கிரக சாபந்தீர, நாமொன்று சொல்லுகிறே மைந்தமைந்தா-நாலான பூரணத்தை நாட்டிப்பார்த்து, ஓமென்று பூரித்து ரேசகமேபண்ணி-ஒருமொழியால் கும்பகத்தில் நின்றால்மைந்தா, ஆமென்ற நவக்கிரக சாபமெல்லாம்-அப்போதே அகன்றுவிடு மறிந்துபாரே. 340

பிரமசாபநிவர்த்தி.

பாரப்பா பிரமனுட சாபந்தன்னைப்-பக்குவமாய்த் தீர்வதற்குப் பகருவேன்கேள். காரப்பா கருணைவைத்து அகாரந்தன்னைக்-கருவான மகாரத்தின் கூடச்சேர்த்து. சேரப்பா ரேசகத்தால் பூரகத்தைப்பற்றிச்-சீர்பெருகுங் கும்பகத்தில் நின்றால்மைந்தா, கோரப்பா நின்றதொரு பிரமன்சாபம்-நிவர்த்தி லோடிவிடும் நிலைமைதானே. 341

### விஷ்ணுசாபநிவர்த்தி.

தானவாறுதான் கின்றவிதரு வி[illegible]சாபத்-தடையறவே போவதற்குச் சாற்றுவேன்கேள், மோனமுடன் [illegible] உகாரமுடன் அகாரத்தோடு - முன்னே சுழிமுனையில் சேர்த்தப்பா, கோனறுனைம் குருபதத்தின் மேல் ருங் மைந்தா - குணமான [illegible] சாபந்தானும். வானவர்கோவ நீயாத பூரணத்தி றிலே-வ[illegible] சாபமது மாய்ந்திடுமே பாசக்கே. 342

### ருத்திர[illegible]சாபநிவர்த்தி.

போச்சென்று விடுகவே நின்றவிதரு - பழமையுள்ள ருத்திரன் மயேஸ்பரத்தின் சாபம், காக்கென்று சிவந்தபு மெய்யுறப்ப சேர்த்துக் - தனிலே புகைத்தப்பா-குருவான செகசோதி கூம்பகத்தில்நின்று, மைந்தா வில்லா மயிருன்மணியைத் தியானித்தாக்கால் - வருக்கமுள்ள பஞ்சகர்த்தான் சாபம்போச்சே. 343

### பிரமசாபநிவர்த்தி.

சாபமென்ற சடாதார சாபம்போகத்-தன்மையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு, இயமென்ற சடவிசாலியில் மனத்தையோட்டி-நீக்க மைந்தா-வலையான சடாதார சாபத்தைத், சாபமொன்ற மகிழமுதய கொண்டால் வேரடிப்போருஞ்-சடாதார வணிவைத்த தன்மைதானே. 344

### சத்துவசாபநிவர்த்தி.

நானென்ற தத்துவத்தின் சாபம்போகத் - தன்மையுடன் சொல்லுகிறேன் தாழ்த்துக்கேளு, மேலென்ற சிவசக்தி தன்னைப்போற்றிக் குறிப்பாக சேகபூரகமும்பண்ணி, மாவென்ற கும்பகத்தில் நின்றுமைந்தா [illegible] மூலத்தின் மேல்வகாரம், [illegible]என்ற தத்துவத்தின் சாபமே [illegible] தேகமது காத்தியாசசே. 345

### காந்திக்குருக்கள்சாபம்.

காந்திமென்ற கருவி[illegible] விபரங்கேளு-அமலமல ரமுதமதைக் கருவாய்வாங்கி, காந்திமென்ற மக[illegible]முகத் தன்னிற்சேர்த்து-தபனாசப் பத்துமுறை தானேசெய்து, பாத்திரமாய் பத்துமுறை செய்தபின்பு - பக்குவமாய் பூரமதித் பாவிச்சேர்த்து, சேர்த்திமென்ற தயிலமதைச் சேர்த்தால் மைந்தா விஷமெல்லாம் பொசுங்கியது கருப்பாய்ப்போச்சே. 346

கருப்பான மைமெழித்து தியானஞ்செய்து - காயாதி கற்பமெனக் கருத்திற்கொண்டு, குறிப்பான மையாலே சொன்னால்மைந்தா-குணமிலின் சத்தியது மேலேவாடி, வெறுப்பான சாபமெல்லாம் வெகுண்டேபோகும்-மெய்ஞ்ஞானம் சித்திக்கும் சேகரத்தாம், முறைப்பானதேகமது அழுத்தப்போகும்-முந்நூலு சமாதியிடை முறுக்காமே. 347

ஆமப்பா வச்சிரமே பலமோபத்து-அத்தருக்கர் மீரமது அன்பாய்ச்சேர்த்து, சாமப்பா சொல்லுகிறேன் அருகபுடம் - கன்றுன வெண்டோடு விளக்கருச்சேர்த்து, தாமப்பா சாறுடனே சாறுசேர்த்து-அவளான அருவானதயாய் கல்வத்தாட்டி, காமப்பால் தன்னிலேவாருதா தாழுட்டிக் கருவாக வருட்டியதை வட்டிப்பண்ணே. 348



பண்ணியிதோர் கட்டுத்தனைப் பதனம்பண்ணி-பக்குவமா யின்னமொன்று பகருவேன்கேள், உலவியதோர் நாகமுடன் சமபுருந்சேர்த்து-உண்மையுள்ள பூரமுதன் கூடச்சேர்த்து, அப்பமாய் சமுத்திரத் திடையிலேயாய்ச் சேர்த்து-காட்டியே கல்வமதிற் பொடித்துமைந்தா-தன்னிமையாய் முனசெய்து வட்டிச்சேர்த்து தயவாக மூக்கினிலே தன்னூலோட்டே. 349

ஆட்டிவாய் ரசிக்குகிர் தன்னுடன் நீர்-அசகாரமிராது சாமமட்டும் ஊட்டிவாய் ரவிமுகத்தில் வட்டிப்பண்ணி-சனஞருக்க காய்த்தபின்பு சொல்லக்கேளு, பூட்டிவாய் மண்மீதே கன்றாய்ச்செய்து - போட்டுவாய் சாமையென்ற படக்கிற்றாலும், மாட்டியதோர் புடத்தாறு மாறவிட்டு-மைந்தனே எடுத்துப்பார் களங்காமச்சே. 350

ஆமப்பா ஞானமென்றால் மெய்ஞ்ஞானமாகும் அப்பனே மெய்ஞ் ஞானங் காணவென்றால், காமப்பா சொல்லுகிறேன் கிளைவாய்ச்சேரு நலமான சரியையிலே நின்றுதேறி, தாமப்பா கிரியையிலே சார்ந்து கொண்டு தயவான மனதோடே யிருந்தாயாகில், காமப்பால் கானற் பால் ரெண்டுங்கண்டால் கயிலாச சற்குருவும் வருவார்பாரே. 1056

வருவார்கள் வெகுவிதமாய் மனதாகானை மைந்தனே பெரியோரைத் தெண்டம்பண்ணி, பருவமுடனவர்பதத்தைப் பணிந்துகொண்டு பக்கு வமாய் மனதுருக நடந்தாயாகில், குருவான சற்குருவர் தாங்கண்டு கொண்டு குணம்பார்க்க வுன்னிடத்தி லிருப்பாரையா, கருவாக மனம்பதிய நடந்துகொண்டால் காட்டுவா ராதியந்தக் கருவைத்தானே. 1057

## அகஸ்தியர் தன்வரலாறுரைத்தல்.

தானான நான்பெற்ற பேரைக்கேளு சத்தியமாய் மேருவுக்குத் தென் புறத்தில், தேனான ரசமொழுகி அருவியாயுந் தெவிட்டாத அருவி சுனைக் கருவிலேதான், கோனான பிர்மகுல ராஜயோகி குருவான சற் குருவா மாதியான, மானான மவுனரச மவுனமான மைந்தான பிரமகுல வேதியோனே. 1058

வேதியனைக் காக்குமுன்னே மனந்தான்தேறி விரும்பியகக் கற்ப மதை மேவிக்கொண்டு, ஆதியிலே பிறந்தசட மழியாமற்றான் அகத் தியுடசெயலறிந்து அறிவாக்கூடி, நீதியுடன் சுத்தர சமாதிசெய்து சேரான் நிலையறிந்து இருக்குமப்போ, சோதியெனுஞ் சற்குருதான் வந்தாரப்போ சொல்லறிய வேணுமென அடுத்தேன்பாரே. 1059

பாரப்பா அடுத்தயிதச் சென்றேனப்போ பரிவாக என்குருவும் வாலாவென்றார், நேர்ப்பா நின்றுகுரு வாலைநாதம் நெஞ்சாரக் கேட்ட வுடன் நேர்மையாக, மாரப்பா மனலயூர்ந்தப் பணிந்தேனப்போ மன மகிழ்ந்து அருகிலேயே யிருத்திக்கொண்டு, தேரப்பா தசதீட்சை யைப் பதற்கு திடசுத்தி செய்ததொரு திரத்தைக்கேளே. 1060

திரமாகப் பஞ்சகண தீட்சையாலே தீர்க்கமா யெக்கியங்கள் வளர்த் தாரையா, உரமாக எக்கியம்வளர் குண்டந்தன்னில் உறுதியுடன் கும்ப மொன்று வதிட்டதையா, பரமான கும்பமதி லடியேன்தன்னை பாவென் றார் சொன்னவுடன் பாய்ந்தேனப்போ, திறமான கும்பமது வாலையா சச நீதியுள்ள வாலையாடா கும்பப்பெண்ணே. 1061

பெண்ணான கும்பேஸ்ப ரிக்கும்பிள்ளை பேர்பெற்ற எக்கியலே தியர் க்கும்பிள்ளை, கண்ணான மணியாலே யெனைவளர்த்துக் கருவான கரு க்கெல்லாந் திரட்டிமைந்தா, தன்னான சேதனென்றே யிர்தயரையா தன்மையுட னென்வாங்கிக் கொண்டேனப்போ, பண்ணான சேதன் வெரு தன்மையென்று பாவித்தார் பரமான ஆதிதானே. 1062



ஆதியிலே ஆதிநாளை யறிந்தேனப்பேர் அரகரா பிர்மரிஷித் கூட்ட மாச்சு, சோதியெனு மாலயனுங் காணாதன் சுருதியுள்ள விசலனுக் ஞச சொன்னார்கூட்டம், நீதியிலே போதகிரி தன்னிற்சென்று நினை வுதவ ருமல்மன ஆறுதியாக, பாதிமதி யணியுமரன் தேவிபாதம் பதம் பிடித்து மனதறிவி லமர்த்தினேனே. 1063

அமர்ந்ததொரு கல்லானை யறியமாட்டார் அப்பனே ஆதியென்ற பிண்டங்காணார்; சுமந்ததொரு கேசரிபோல் திரிவாரையா சொல்லு திறேன் பிண்டவித்தை யண்டஞ்சாக, சுமந்தகனிச் சுன்னமடா நந்தி நந்தி நாதருரை விந்துமுறை நவில்வாரையா, சமைந்ததொரு பெண்ணி ரசற் கொல்லுயங்கொல்லும் தன்மையுள்ள விந்துவடா சாரமாச்சே. 1064

சாரமென்றுங் காரமென்றும் வழலையென்றுந் தன்மையுடன் சொல்லுவார் தன்மைகாணார், பூரமென்றும் வீரமென்றும் புரவிபேசார் புகழ்பெரிய கல்லானை மதத்தைக்காணார், காரமென்ற அண்டமதைக் காணாட்டார் கருவான சாரமென்ற மூலங்காணார், வீரமென்ற வீர மது அஞ்சாங்காய்ச்சல் விசையான கம்பியுப்பு ஆதிதானே. 1065

ஆதியென்று மந்தமென்று மடிமுடிதானப்பா அப்பனே ஆதியது அடிமுடியிற்சேர்ந்து, குதியென்ற துடியோங்குங் கும்பச் சொன் னேன் கொள்வதற்குச் சலமுண்டு முடிதான்போச்சு, பதியென்ற முடி போறு மடிதானென்று பார்மகனே அடிமுடியு மாதியந்தம், மதியென்ற பருதிமதி யறியவேண்டி மக்களே சடாதாரஞ் சித்திபண்ணே. 1066

சித்தித்தால் சிவன்வேறே யுண்டோஐயா தேகசித்தி யில்லாட்டால் சிவன்வேறுமுண்டு, முத்திகொண்ட தெதினாலே கும்பமுனியென்று முக் கியமா யெக்கியத்தில் கும்பத்திற்பாய்ந்து, பத்திகொண்டு வந்ததினால் கும்பமுனியென்றும் பதிவான பொதிகைமுனி அகத்தீசரென்றும், புத் தியுள்ள தெட்சணமூர்த்திமுனியென்றும் போதமிக வுண்டாகும் பூரண மேயாமே. 1067

பாரப்பா வல்லாரை யார்தான்காண்பார் பக்குவமாய்க் குருசொல் லக் காணவேணும், நேரப்பா குருவுரைத்துக் கண்டாலுந்தான் நினை வாக மனதாறுதி யாகவேணும், காரப்பா மனதாறுதி யானாலுந்தான் குருவில்லர் சைபாகஞ் செய்பாகங் காணவேணும், ஆரப்பா வாறுமுதல் வித்தை அசத்தியந்தா னசத்தியந்தா னறகரதென்னே. 1068

## நவநீதவெண்ணெய்.

என்னப்பா புலத்தியனே நவநீதவெண்ணெய் இன்பமுடன் சொல் லுகிறே னன்றாய்க்கேளு, சுன்னப்பா சுவக்கிரகம் நன்பதுக்குங் குரு வாய் நாடிநின்ற அனுக்கிரக மார்தான் காண்பார், விண்ணப்பா ஆகாச மார்தான் காண்பார் விதமான மவுனமடா அண்டக்கூறு, தன்னப்பா தன்னிலையைத் தானேகண்டு தயவான வீரமடா தின்னுந்தானே. 1069

தானென்ற அண்டமடா நூவிதாக் கருவான பூரணமாம் காதவிர்தூ,
நானென்ற ஆணைவத்தா லிரண்டுமொன்றாய் நன்மையுடன் கூடினதைக்
காணப்போமோ, கோவென்ற குருவருளாற் கண்டுகொண்டு குணமான
பதியறிந்து குருவைப்போற்றி, தேனென்ற பூரணமாஞ் சோதிதன்னில்
சிவசிவா வென்றுசொல்லி அண்டமாமே, 1070

அண்டமெழுது.

வாங்கப்பா அண்டமது வாங்குதற்கு மனைமையொன்று சொல்லுகி
றேன் மைந்தாகேளு, பாங்குபெற வெளித்தொரு பதிருள்ள பக
மையுடன் கொண்டுவந்து புதுமையாக்கி, நீங்கான நீர்செல்லாஞ் சுத்தி
பண்ணி இருவான முப்பூவும் மீரப்பூரம், சாங்கமாய் வகைக்குவொரு
பலமாய்வாங்கிச் சமரசமாய்க் கலவமதிற் சாத்திடாயே. 1071

சாத்தியே குருபானைத் தியானம்பண்ணித் தருவான செயநீரை விட்
டைமைந்தா, போற்றியே மெழுகுபோல அரைத்துக்கொண்டு புதுமையுள்ள
அண்டமதிற் கவசம்பண்ணி, தேற்றியே பாண்டமதை யப்பைக்கொட்டி
திருவான அண்டமதை யதின்மேல்வைத்து, மாற்றியே யுப்பைமிக
நிரம்பக்கொட்டி வரிசையுடன் மேல்மூடிச் சீலைசெய்யே. 1072

செய்யப்பா சற்குருவைப் பணிந்துபோற்றித் திடமாகக் குழிவெட்டி
சமாதிவைத்து,வையப்பா கெசபுடமெருவைக்கொட்டிப் பாங்காக மேல்
மூடி மண்ணுக்குச்செய்து, மெய்யப்பா அதின்மேலே யிருந்துயும் மௌன
மையாய்ச் செபதபங்கள் செய்துமைந்தா, ஐயப்பா தவமாய் மண்ட
லமேசென்று கருத்துறவே ஈசானம் பூசைபண்ணே. 1073

பண்ணப்பா வெகுபூசை குருவின்பூசை பண்பாகச் செய்தபின்பு பதி
மையாக, விண்ணப்பா நிறைந்ததோ ரண்டத்தன்னை விரும்பியே யெடுத்
தப்பா வென்னசொல்வேன், பொன்னப்பா மென்மெழுகு போலவாம
த்தா புதுமையுள்ள அண்டமது மெழுகாயிருக்கும், கண்ணப்பா மெழு
கெடுத்துப் பதனமாக காடியே யரணிதனில் வைத்துக்கேளே. 1074

கேளப்பா தேகமது சுத்திபண்ணிக் கிருபையுடனாத்மாவைப் பூசை
பண்ணி, மேலப்பா மவுனமதை மனதுட்கொண்டு மேன்மையுள்ள குருப
தத்தை விரும்பிமைந்தா, ஆளப்பா மூலவன்னி கனலெழுப்பிக்கொண்டு அர
கூர ரேசகபூ ரகமும்பண்ணி, தாளப்பா கும்பகத்தில் தாழ்ந்துக்கொ
ண்டு தன்மையுடன் மெருகைக் கத்தந்தச்செய்யே. 1075

செய்தவொரு சக்கரத்தைத் தன்றூய்க்கிறித் திறமாகப் பாணிதனை யத
ன்மேல்வைத்து, மெய்யான சடத்திருப வனுவைக்கண்டு மேலான
அண்டமதின் மெழுகிலப்பா, கையாரப் பணவிடைதா னெடுத்தாகல்ல
கண்ணொளியை விண்ணொளிக்குள் கருதிப்பார்த்து, நேயமொன் மெழு
குதனைப் பூசைபண்ணி அப்பனே தேகமது கட்டிப்போச்சே. 1076



போச்சென்று விடாதே யின்னங்கொள்ளு பூரணத்தைப் பற்றிம
ன தறிவில்நில்லு, ஏச்சென்ற நரைதிரைக ளென்னசொல்வேன் நிய
ல்பாக நரைகளெல்லா முதிர்ந்துபோச்சு, பேச்சென்ற திரைகளது சட்
டைபோலே பேணியே திரைகளெல்லாம் கழன்றுபோச்சு, ஆச்சென்ற
தேகமது வாலையாச்சு அரகரா கயிலாசத் தேகமாச்சே. 1077

தேகமென்ற ஆதிதனைப் பூசைபண்ணச் சிவசிவா ஆண்டொன்றில்
செவுனமாரும், பாகமுடன் ரெண்டாண்டி லஷ்டசித்தும் பலிக்குமடா
மூன்றாண்டில் பான்மைகேளு, ஆகமுட னண்டவண்ட ஒளிதாங் தோற்
றும் அப்பனே நாலாண்டில் அதிசயங்கள்காணும், தாகமுடன் னாதாலே
சேதிசொல்லத் தானிதனிற் சற்குருவாய்த் தானுவாயே. 1078

தானவனாய் நின்றநிலே தானேதோற்றுந் தன்மையுள்ள பூரணமே
சித்தியாகும், கானலா மூமூத வாருதாரம் கயிலாசத் திருநடனங்
கண்ணிற்காட்டும், பேணவே வாசியது பிசகாதையா பிசகாத வாசியது
வுறுதியாகும், தோனவே அஞ்சமூத லதிகமானால் சொல்லுகிறேன் 1079
முத்தனெனத் தேகமாச்சே.

தேகமென்ற செடமறியா மாந்தர்மெத்த செய்வினைகள் தீராத திரு
டர்மெத்த, யோகமென்ற யோகநிலை யறியார்மெத்த ஒண்டவிடத் தினை
யறிந்து வொண்டார்மெத்த, பாகமென்ற சுவையறியாப் பழுதர்மெத்தப்
பாமறியார் குருவறியார் பாரில்மெத்த, ஆகமென்ற பொருளறியா ருல 1080
த்தனே அம்பரத்தை யறியாமலலைகிறாரே.

அலைகிறார் வேதமதைக் காணுமற்றுன் அப்பனே கவியாளர் மொழி
யைப்பார்த்து, குளறிறூர் குருவறிந்து கூறுமற்றுன் குறும்பர்வெகு
வேடமதைக் குணமாய்ப்போட்டு, தன்றுவார் தயங்கியிகத் தன்னைக்கா
ணுர் சத்திசிவக் குருபதத்தின் தன்மைகாணுர், மலரறிந்து மலரிறுட 1081
வாசங்கண்டு மதியமுதம் கொள்ளாதா ருடன்சேராதே.

சேராதே துஷ்டருடன் வாதாடாதே தெவிட்டாத மதியமுதம்
பொருள்சொல்லாதே, கூறுக மந்திரத்தின் குறிசொல்லாதே குறித்த
விடங் காட்டாதே குணஞ்சொல்லாதே, நேரான மனதுறுதி நீசொல்
வாதே சோர்மையுள்ள யோகநிலைக் கால்சொல்லாதே, மாறுத வாசியுட 1082
கருச்சொல்லாதே மகிமையுள்ள புலத்தியனே யின்னங்கேளே.

கேளப்பா முப்பூவின் கருச்சொல்லாதே இருபையுள்ள பூரணத்தின்
வழிசொல்லாதே, வாளப்பா வாழ்வதோர் வலைசொல்லாதே மகத்தான
மெய்யுடனே பொய்சொல்லாதே, தாளப்பா அகங்கொண்ட சண்டாள
ர்க்குத் தாழ்ந்திருந் குற்றமில்லை தன்மையாகும், காலப்பா காலறிந்து 1083
யோகஞ்செய்யுங் கற்பமுள்ள தேகமதைக் காருகாரே.

காரப்பா அவர்கள்மனங் களியவேதான் களித்திருல் சகலசித்துங் கைக்குள்ளாகும், பாரப்பா பன்னிரண்டு நூற்றைமைந்தா பக்குவமாய்த் தானெடுத்துப் படனமாக, சேரப்பா பொருளறிந்து மனதிற்சேர்த்துக்கொண்டு மனதடங்கி அறிவில்நில்லு, ஆரப்பா வுனக்கிது சொல்லப்போறேன் அரகரா அடிமுடியி லமர்ந்துநில்லே. 1084

அமர்ந்துமிக நின்றதிரு வருள்கைகூடும் அனந்தவெளியுட னருளை வாய்க்கும், நமக்குயிகப் போகாமல் காலேக்காரு நாலான பூரணமே தெய்வந்தெய்வம், லெக்கசடங் கனாமற் சற்பங்கொன்று சிவசக்தி பெண்டையுமே தினமுங்காரு, சமைந்தகரு கற்பமதைத் தினமுங்கொண்டு சதாகாலம் பூரணத்திற் சார்ந்துநில்லே. 1085

நில்லென்ற சொல்லறிந்து நின்றுகொண்டு நேரான பூரணத்தில் மனதைவைத்தால், சொல்லொன்றுந் தப்பாது எல்லாஞ்சித்தி சொரூபமுள்ள அமுதரசஞ் செலிக்குமப்பா, கல்லென்ற கல்லறிந்து காரமேற்றிக் கடுங்கார மானதொரு ஆனைக்கல்லாக், கல்லென்ற ஆனைக்கல் மடிந்துதானால் சென்றசாரக் கத்தியையுங் கட்டிப்போகுமே. 1086

ஐங்கோலத்தயிலம்.

கட்டாக ஐங்கோலத் தயிலமொன்று கருத்தாக வுந்தனுக்குச் சொல்லக்கேளு, மட்டான அழிஞ்சியடா மதனப்பூ நுமைந்தனே பதிவான பதியைப்பார்த்து, திட்டமாய்ப் பதியறிந்து பதியிற்சேர்த்து திட்டமாக மனதுறுதி யாகநின்று, சட்டமா யஷ்டபந்த மெட்டுஞ்செய்து சமூலமாய் வடவேரு தன்னைவாங்கே. 1087

வாங்கியந்த வடவேரை மைந்தாகேளு வரிசையுடன் கண்டமதாய் நறுக்கிக்கொண்டு, பாங்குபெற நிழலுலர்த்தி பாண்டமிட்டுப் பக்குவமாய் முப்பூவுங் கூடச்சேர்த்து, இக்கிலவை நவிரசங் கூடச்சேர்த்து செம்மையுடன் வாய்மூடி சீலைசெய்து, சாங்கமா யெரிவாய் பூரசபண்ணி தன்மையுடன் குழித்தயிலந் தயவாய்வாங்கே. 1088

வாங்கியந்தத் தயிலமதை மெருக்கேற்றி வரிசையுட னெரிசாரம் நேசபண்ணி, தாக்கியந்தத் தயிலத்திற் பணவிடைதான் கொண்டு தயவாக காயகற்பம் பிறப்பிபோகும், ஆங்கியதோர் அக்கமது யேடிப்போகுந் தரம்போல் கற்பூரந் தேகமாகும், பாங்குபெற நரைதிரையா கறுத்துப்போகும் பழுப்பான சதையெல்லாம் வலுத்துப்போமே. 1089

வலுத்துப்போம் தேகமது பழுத்துக்கொண்டு வாசியது நின்றிலங்கு நீடம்போலே, அறுத்தசட்டங் கட்டமாய்த் தலங்குமையா கருக்கதக செகமதனிற் றிகழ்ந்து வளருகும் அமுதமுடன் [illegible] எட்டெட்டு அரகர தேகமது தங்கம்போலாம், பழுத்ததங்கத் தேகமது என்ன சொல்வேன் பரமகுரு வாசமென்ற தேகமாச்சே. 1090



ஆச்சப்பா தயிலமதிற் புழுகுசேர்த்து அப்பனே மந்திரித்து திலதம்போடு, பேச்சப்பா பிறருக்கு நன்றாய்க்கேட்கும் பெருமையுள்ள செட்டதையவர் காணமாட்டார், நீச்சப்பா வெகுதூலகங் கூட்டந்தோன்றும் நேராகப் பாதாளக் ஆலைதானேறும், காய்ச்சப்பா தயிலமதைக் கைவில்செய்து கருவாக சரக்கோடு கட்டிப்போமே. 1091

போமப்பா பூரமொடு புழுகுசேர்த்துப் புனிதமுள்ள தயிலமதால் கல்வத்தாட்டு, தாமப்பா திலதமிட வசியமாகும் தன்மையுடன் பார்ப்போர்க்குத் தீபம்போலாம், நாமப்பா சொல்லுகிறேன் உலகிலுள்ளோர் காதார்ந்த காதலெனை வணங்குவையா, ஆமப்பா அழிஞ்சியுட ஆண்மைமெத்த ஆரியப் போருள ரழிஞ்சிதானே. 1092

ஏரழிஞ்சித்தயிலம்.

தானென்ற ஏரழிஞ்சி யுலகத்துள்ளே தயவாக மெத்தவுண்டு அறியமாட்டார், கோனென்ற குருவருளாற் காணவேணும் குருமுறையாய்க் கைபாகஞ் செய்யவேணும், நானென்ற அகமதினால் முறைகள்தப்பி நரகான நரகமது எய்தும்பாரு, தேனென்ற சற்குருவின் கடாட்சம்பெற்றுச் செய்பாகஞ் செய்வதினால் தீர்க்கமாமே. 1093

தீர்க்கமா யைங்கோலஞ் செய்துமைந்தா செம்மையுடன் தானிருந்து திடமாய்நின்றால், மார்க்கமுட னெட்டெட்டு சித்துமாடும் மக்களே தேகம்வச்சிர காயமாகும், சேர்க்கையுடன் சிவயோகம் புதுமையாகுஞ் சகத்திலொரு பயமில்லை தீர்க்கவானாய், மூர்க்கமுள்ள முனியாவாய் ரிஷியுமாவாய் மூதண்ட ராஜரிஷி யாவாய்பாரே. 1094

அமுதரச மெழுகு.

பாரப்பா அமுதரச கற்பஞ்சொல்வேன் பரமான ஆதியடா அண்டபண்டம், நேரப்பா ஆதிதனை யம்பாய்க்கண்டு நினைவாகப் பூரணத்தைப் பதிவாய்வாங்கி, வாரப்பா மீக்காளில் வைத்துக்கொண்டு வளமான ரவிமதியுங் கூடச்சேர்த்து, காரப்பா ரவியில்நன்றாய்க் காயவைத்து கசடறவே காய்ந்தபின்பு மெழுகாய்ப்போமே. 1095

மெழுகான பூரணந்தான் பூரணமேயானால் மேன்மையதா யதின்வண்மை விள்ளக்கேளு, அழுகாத பிண்டமடா ஆதியாதி அன்பான பூரணமே தெய்வந்தெய்வம், பழுக்காத பொருள்களெல்லாம் பழுக்குமையா பரமான பூரணத்தின் பசுமையாலே, கழுக்காது வாசியது முன்பின்னாக கடிநின்ற நாடிதனை நாடிக்கேளே. 1096

கேளப்பா சிதம்பரத்தைத் தியானம்பண்ணிக் கிருபையுள்ள மெழுகிருக்கு மெருதன்னை, நாளப்பா தினம்பார்த்து சக்கரத்தின்மேலே நடுவான மெருதனை யதின்மேல்வைத்து, கோளப்பா வாராம லர்ச்சனைகள்செய்து குருவான மூலமதில் மனதைவைத்து, ஆளப்பா ரேசகபூரகமும் பண்ணி ஆதியென்ற கும்பகத்தி னருளைப்பாரே. 1097

போற்றியே பூரணத்தைப் பணிந்துகொண்டு பொருளான மெழுகுதனிற் பணவிடைதானெடுத்து, ஆற்றியே மனத்தேற்றிக் கொண்டால் மைந்தா அக்கரா தளர்ந்தசட யிறுகிப்போகும், தேற்றியே மண்டலந்தான் கொண்டாலய்யா தேகமென்ற கயிலாச தேகமாகும், சாத்தியே ஆண்டொன்றில் கெவனமாகும் வரிசையுட னிரண்டாண்டி லதிகமித்தே.

சித்தியுட னஷ்டசித்துங் கைக்குள்ளாகுந் திறமாகும் வாசியது திருடைதாபா, புத்தியுடன் மூன்றாண்டில் புருவந்தன்னில் புதுமைவெகு அதிசயங்கள் தானேதோற்றும், பத்தியுடனுண்டோ நாலாண்டால்மைந்தா பாய்ந்தண்டம் போய்வரலாம் பதனமாக, முத்திபெற ஆண்டைந்து கொண்டால் முத்தரென்ற கமலசித்திக் கொப்பாம்பாரே. 1099

மும்மண்டலம்.

பாரப்பா மூலமுத லாறுவரைதாண்டி பண்பான மேல்வரையில் மண்டலந்தான்மூன்று, நேரப்பா முதலான மண்டலந்தான்சந்திரன் நேராக அதின்மேலே சூரியமண்டலந்தான், காரப்பா அதின்மேலே அக்கினிமண்டலந்தான் கருவாக நிலைசெயறிந்து சந்திரனிர்பின்று, சேரப்பா சூரியன்றன் மண்டலத்திலேறி செம்மையுட னக்கினியின் மண்டலத்தைச்சேரே. 1100

சேரப்பா அக்கினியின் மண்டலத்தில்மைந்தா சேர்ந்துபார பரத்திறுட தெரிசனையைப்பாரு, காரப்பா கருத்துறவே தெரிசனையைக்கண்டால் கயிலாசக் கொடிமுடியைக் காணலாகும், ஆரப்பா அறிவார்கள் கொடிமுடியின்போக்கு அம்பரமாய் நின்றதொரு ஆதியாதி, பாரப்பா பத்திகொண்டு ஆதியென்ற அண்டம் பரமகுரு தன்னருளால் பிண்டமதைச்சேரே. 1101

அண்டமென்று லாரறிவார் சூதண்டப்போக்கு அப்பனே பக்குவமாயன்பாய்ப்போற்றி பிண்டமதின் தோடகற்றிக் கருவைவாங்கிப் பிசகாமல் சட்டியிற்குள் விட்டுமைந்தா, கண்டதொரு அமுரியிலூற் கரைத்துக்கொண்டு கருத்துறவே ரவிமுகத்தில் வைத்துப்பாரு, பிண்டிடவே ரவிமுகத்தில் கன்றுய்க்காய்ந்தால் விரும்பியே முன்போலே கரைத்துக்காய்ச்சே.

காய்ச்சப்பா திட்சைமுப் பத்திரண்டு கைமுறையாய்ச் செய்தபின்பு கழுதக்கேளு, ஆச்சப்பா அமுதமென்ற முப்பால்விட்டு அன்பாகக் கரைத்தூரவி முகத்தில்வைப்பாய், பேச்சப்பா முலைப்பாலில் மூன்றுதிட்சைபிலமாகச் செய்தபின்பு திருநீறுச்சு, பாய்ச்சப்பா திருநீற்றைக் குப்பிக்குள்ளே பக்குவமாய்த் தானடைத்துப் பதனம்பண்ணே. 1103

பண்ணப்பா நாற்பத்து மூன்றுகோணம் பக்குவமாய்த் தானெழுதிநடுக்கோணத்தில், எண்ணப்பா திருநீற்றின் குப்பிவைத்து நலமாமலரானர்ச் சனைகள்செய்து, கண்ணப்பா விண்ணேறிக் கமலதீபம் கருத்துறவே கண்டெரி சனந்தனைப்போற்று, உண்ணப்பா திருநீற்றில் பணவிடைதானப்பா உண்டபின்பு குருபாத முணிப்பாரே. 1104



வாணிமிகப் பார்க்கையிலே சகமேபண்ணு - உத்தமனே ரேசகத்தாற் கும்பகமேசெய்து, பேணியே கும்பகத்தில் மனதுறுதியானால்-பிறழாது வாசிசுழி முனையில்நிற்கும். காணியாய் நின்றதலங் கைவசமேயானால்-காயாதி யுறுதியடா நரைதிரைகளில்லை, ஆணியா யெந்நாளும் யோகஞ்செய்தால்-ஆண்டுவொரு நாழிகையா யமருந்தானே. 1105

தானென்ற திருநீற்றில் தயிலஞ்சேர்த்து - தன்மையுடன் பிசைந்துருட்டிப் பணவிடைதான்கொள்ள லூனென்ற தேகம்சை யாதுதல்லாம்-உத்தமனே யெந்நாளும் பசியுந்தோணு, தேனென்ற கற்பங்கா யாதியாகுஞ்-சிந்தைமன தொன்றாகித் தினமுங்கொண்டால், கோனென்ற தேகமது தங்கநிறமாகும்-குருவான அமுதரசக் கற்பம்பாரே. 1106

ஆதிபிண்டத்தயிலம்.

பாரப்பா ஆதியென்ற பிண்டம்வாங்கிப் - பக்குவமா யதிலிருக்குங் கோவைநீக்கி, சேரப்பா கல்லுரலி லிட்டுமைந்தா - சேர்த்துமிகத் தானிடித்துப் பாண்டத்திட்டு, வாரப்பா சுத்தசலம் பானையளவைமட்டும்-வாகாகக் கிண்டியதை அடுப்பிலேற்றி, காரப்பா தீமூட்டி பக்குவமாய்க் காய்ச்சு-கருகாமற் பாகுபத மாகக்காய்ச்சே 1107

பாகுபோல் காய்ச்சிகன்றாய் பதமாம்போதில்-பண்பாகக் கடுகுபோல் தயிலம்நிற்கும், வாகுடனே தயிலமதை வடித்துமைந்தா-மகத்தான குப்பிதனில் வைத்துப்போற்றி, தாசமுடன் கடுகளவும் பதனம்பண்ணி-நன்மையுட னிதின்விபரஞ் சாற்றக்கேளு, ஆகமுட னீசானம் பூசைசெய்து-அன்பாகச் சற்குருவைப் பணிந்துநில்லே. 1108

நில்லப்பா குருபதத்தில் சேர்ந்துகொண்டு - நேசமுடன் பூசைபண்ணி உதயந்தன்னில், கொள்ளப்பா கடுகதிலே கழிந்துகொள்ளு-கொண்டபின்பு மாலையிலேகூறக்கேளு, மெள்ளப்பா தயிலங்கா சிடைதான்கொள்ளு - மேன்மையுள பூரணத்தி லறிவாய்நில்லு, தள்ளப்பா அறுசுவையைத் தள்ளிமைந்தா-தவயோர் பொழுதுபா லன்னங்கொள்ளே.

சொல்லப்பா நாம்சொன்ன முறைதப்பாமல்-கொண்டிருவல் மேனிவச்சிர காயமாகும், மெள்ளப்பா மண்டலமே கொண்டுதீர்ந்தால் மேனியதுவாடாது வாலவயதாகும். செல்லப்பா கெவனம்தா யண்டவரைசுற்றுஞ்-செம்மையுட னிமைக்குமுன்னே யிருந்திடமுங்காணும், நில்லப்பா சுழிமுனையில் நின்றுவங்கென்று - நிச்சயமாய் நின்றதினால் சித்துவகைகேளே. 1110

கேளப்பா சுழிமுனையில் தீபந்தோற்றுங்-கிருபையுடன் தீபவொளி கண்டால்மைந்தா, வாளப்பா விளக்கதிலே நெய்யையூற்றி - மைந்தனே திரிபோட்டு மனதைநூணி, ஆளப்பா மனக்கண்ணால் திரியைப்பார்க்க-அப்பனே திரிதானும் பற்றும்பாரு, கோளப்பா ஒன்றுமில்லை பூரணத்தி னேர்மைகொண்டதினால் நினைத்தபடி கூடும்பாரே. 1111

பாரப்பா நினைத்தபடி யாடலாங்கேள்-பக்குவமா யாதியத்தப் பதிவிளுலே, நேரப்பா நின்றபொருள் கண்டதாலே-நினைவாக மனதுறுதிக் கொண்டதாலே, வீரப்பா கொண்டதொரு லகிரியாலே-விள்ளாத பூரணத்தின் செயல்தன்னாலே, சாரப்பா மதியமுதம் கொண்டதாலே-சகல சித்தும் கைவசமாய்ச் சார்ந்துபோச்சே. 1112

அஷ்டகர்மசிலை.

சார்ந்தபார் எட்டுவகை யோகத்துக்குஞ்-சமரசமாய் வகையொன்று சொல்லக்கேளு, கூர்ந்தபா குலமதில் மதனப்பூண்டு - கோடானகோடியுண்டு ஒருவர்காணார், நேர்ந்துகொண்டு சற்குருவி னருளைப் போற்றி - திறமாக மதனப்பூண் டதனைவாங்கி, சேர்ந்துகொண்டு காய மதின்மேற்பூசி-நினைவாக சகிமுகத்திற் காயப்போடே. 1113

*போட்டவுடனன்றாகக் காய்ந்துதானுந் - புகமுடனே பத்துமுறை பூசிவாட்டு, காட்டமுடனதிற்கசிவு கழன்றுபோகும் நன்மையுள்ள புடத்துவுந் தரும்புபோலாம், காட்டாதே யிப்பூவை யுலகத்தோர்க்குங்-காட்டினால் குற்றம்வரும் கருவாய்ப்பாரு, நாட்டிகமா யிதற்குப்பே ரென்னவென்றால் - நயவான அஷ்டகன்மச் சிலையுமாச்சே. 1114

ஆமப்பா அஷ்டகன்மச் சிலையைநாட்டி - அதிலிருந்து அஷ்டகர்ம முறையைக்கேளு, நாமப்பா வகைதுறையாய்ச் சொல்வேன்கேளு - கலமான எட்டுவகை கன்மத்துக்கும், தாமப்பா நன்றாக விரித்துச்சொல்வேன் - தவமான புலத்தியனே நயவாய்க்கேளு, காமப்பா மதியகற்றி சலிப்பிற்சேரு - கருவான ரவியுதித்தா லெல்லாஞ்சித்தே. 1115

ஸ்தம்பனம்.

சித்திக்குத் தம்பனமாம் வகையைக்கேளு - சிவசிவா தேகசுத்தி பண்ணிக்கொண்டு, முத்திபெற இந்திரன்தன் திசையைநோக்கி-முர்க்கமுள்ள ஆசனமாம் புலித்தோற்போட்டு, பத்தியுடனதிலிருந்து நீறுபூசிப் - பதிவான பூரணத்தை மனதிலேறச்சி, வெற்றிபெற ரேசகபூ ரகமும்பண்ணி-வேதாந்த கும்பகத்தில் மேவிச்சேரே. 1116

சேரப்பா மூலமதில் சேர்ந்துக்கொண்டு - சிங்கென்று கமலமதின் மணியைவாங்கி, காரப்பா நமசிவாய வென்றுசொல்லி - கருத்துடனே நூற்றெட்டு செபித்தால்மைந்தா, கூரப்பா கண்டதெல்லாந் தம்பனமே யாகும் - கொடிதான மிருகமுடன் அஷ்டநாகம், நேரப்பா சொன்னபடி கேட்கும்கல்ல - சேர்மையுள்ள தம்பனத்தின் சேர்மைதானே. 1117

தானென்ற தாம்பூரத் தகடுதன்னில் - தயவாக நமசிவய வென்றெமைந்தா, தேனென்ற கருப்பூசித் தகடுதன்னை - செம்மையுடன் மாணிடர்க்குக் கட்டினக்கால், ஊனென்ற தேகமதில் நோய்களெல்லாம் -ஓடிநீங்கியே தப்பித்து ஓடிப்போகும், மானென்ற லோகத்தி லவர்க்கண்டால் - மனதடங்கி தம்பித்து வசமாவாரே. 1118



மோகனம்.

வாரப்பா தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா-வரிசையுள்ள மோகனத்தின் வளமைகேளு, தேரப்பா மனதடங்கி தேகசுத்தி - செம்மையுடன் செய்துகொண்டு நீறுபூசி, காரப்பா கலைத்தேரலா சனத்தில்மைந்தா - கம்மெனவே அக்கினியின் திசைநோக்க, பாரப்பா மனம்பதிய இருந்துக்கொண்டு - பக்குவமாய் மிளகுமணிக் கையில்வாங்கே. 1119

வாங்கியே மூலமதில் மனதைவைத்து - வரிசையுடன் ரேசகபூ ரகமும்பண்ணி, தாங்கிய கும்பகத்தில் நின்றுகொண்டு - தயவாகச் சிவாயநம வென்றுகோது, பாங்குபெற நூற்றெட்டு வோதினக்கால் - பாரிலுள்ள மாணிடர்க ளதிமோகமாவார், பூங்கமலத் திருமாது அகலாதப்பண்ணியனே சகலசித்து மோகமாமே. 1120

ஆமப்பா அரியதனுல் தகடுசெய்து - அப்பனே சிவாயநம வென்றுதாக்கு, நாமப்பா கருப்பூசி உலகத்தோர்க்கு - நன்மையுடன் கட்டினால் காட்டினோர்கள், தாமப்பா மோகனமாய் தன்மையாகுஞ் - சதாசத்தி யகலாது சாந்தமாவார், காமப்பா மோககன், னியர்கள்வந்தால் - கைபிடித்து மாதாவே யென்றுபோற்றே. 1121

வசியம்.

போற்றியே மோகனத்தைச் சொன்னேன்மைந்தா - புதுமையுள்ள வசியமது புகலக்கேளு, தேற்றியே மனதறிவால் தேகசுத்தி - செம்மையுடன் செய்துநீ ருத்தனமைய்ப்பூசி, வாற்றியே பங்கயா சனத்தைப்போட்டு - வடகிழக்கு முகமாக இருந்துக்கொண்டு, சாற்றுவாய் பூரணத்தில் மனதைநன்றாய் - சாற்றியே ரேசகபூ ரகமும்பண்ணே. 1122

பண்ணப்பா கும்பகத்தில் நின்றுகொண்டு - பக்குவமாய் ருத்திராட்சமதை யிடதுவாங்கி, விண்ணப்பா நாரேக்கி நமசிவயவென்று - விருப்பமுடனே நூற்றெட்டு செபித்தால்மைந்தா, கண்ணப்பா வுன்னையவர் கண்டாலுடனே - நாடியே வசியமதாய் வணங்கிநிற்பார், எண்ணப்பா வுகமதில் சிவசெந்து - உண்டான வஸ்துவெல்லாம் வசியமாமே. 1123

வசியமாய்க் கரீயத் தகடுசெய்து - வளமாக நமசிவ யென்றுமாறி, உசிதமதாய்க் கருப்பொட்டுத் தடவிநன்றாய் - உண்மையுள்ள மாக்களுக்குக் கட்டினக்கால், பசிதாக மானதுபோ யுனைக்கண்டோர்கள் - பணிவார்கள் வசியமதாய்ப் பண்பாய்மைந்தா, நிசிதமுள்ள மிருகதா பாசங்களெல்லாம் நேர்மையுடனே வசியமதாய் வணங்கும்பாரே. 1124

மாரணம்.

பாரப்பா வசியமொன்று நன்றாய்ச்சொன்னேன் - பக்குவமாய் மாரணத்தைப் பகரக்கேளு, சேரப்பா தேகசுத்தி நன்றாய்ச்செய்து - தீனவாக வுத்தனமாய் நீறுபூசி, காரப்பா அத்திரா சனத்தைப்போட்டு - கருத்துறவே தென்முகமா யிருந்துமைந்தா, சேரப்பா கும்பகத்தில் மனதைநாட்டிச் - செம்மையுடன் ரேச்கபூ ரகமும்பண்ணே. 1125

பண்ணியே கும்பகத்தால் பனிந்துகொண்டு-பக்குவமாய் துளசிமணி
க்கையில்வாங்கி, எண்ணியே அழிமுனையில் நாட்டமுற்று-நமசிவய நூற்
றெட்டு உருத்தாரேத, உன்னியே யுனக்குவினை செய்தோரெல்லாம்
உத்தமனே மாரணித்து ஒழிந்துபோவார், தன்னிமையாய் மாரணத்தா
னதிகமாகும் - தானித்து இனக்குவினை செய்தால்பாரே. 1126

பாரப்பா வெள்ளியினால் தகடுதட்டிப் - பக்குவமாய் நசிமயவ என்று
மாறி, சேரப்பா கருத்தொட்டு தகட்டிற்பூசி- கொடிதான நோயோர்க்குக்
கட்டிருக்கால், மாரப்பா நோய்களெல்லா மாரணித்துப்போகும் - வஞ்
சகருஞ் சத்துருவும் வகையுள்ளோரும், வேரப்பா அற்றமரம் போலே
போவார் - மெய்யான மாரணத்தை விரும்பிச்செய்யே. 1127

உச்சாடனம்.

செய்யப்பா மாரணத்தின் விபரஞ்சொன்னேன்-திறமாக வுச்சாட
னஞ் செப்பக்கேளு, மெய்யப்பா தேகசுத்தி நன்றாய்ச்செய்து-விரும்பிநீ
றுத்தனமாய் மெய்யிற்பூசி, கையப்பா மான்றோலி லாசனத்தைக் - கருத
றவே நிருதிமுகங் காத்தமைந்தா, பையப்பா மூலமுதல் மனதை
நீட்டி-பாங்காக ரேசகபூ ரகமும்பண்ணே. 1128

பண்ணப்பா கும்பகத்திற் பதியநின்று - பக்தியுடன் துளசிமணிக்
கையில்வாங்கி, விண்ணப்பா நாரேருக்கி மசிவயநவென்று - விரும்பியே
நூற்றெட்டு செபித்தால்மைந்தா, சண்ணப்பா நினைத்தவொரு பொருள்
சாடிக்கும்-நலமில்லா மாந்தரையு மாரணமேசெய்யும், உண்ணப்பா நீறு
தொட்டுத் தெறித்தாயாகில்-உறுதியுள்ள வியாதியெல்லா மாரணித்துப்
போமே. 1129

போமப்பா வெள்ளியத் தகடுசெய்து - புத்தியுடன் மசிவயந வென்று
மாறி, ஆமப்பா கருத்தொட்டு அழித்துப்பூசி-ஆறாத நோய்களுக்கு அவி
ழ்த்தாயானால், தாமப்பா நோய்களெல்லாம் உச்சாடிக்குந்-தன்மையுடன்
கண்டதெல்லாம் உச்சாடிக்கும், காமப்பா கருவித்தை அதிதவித்தை-காட்
டிறோம் பன்னிரண்டு நூற்றிலே. 1130

ஆகருஷணம்.

தானப்பா வுச்சாட னத்தைச் சொன்றோம் - தயவாக ஆகருஷ
ணத்தைக்கேளு, பேணப்பா தேகசுத்தி செய்துக்கொண்டு-பிலத்தபுத்தி
யறிவதினால் நீறுபூசி, தானப்பா மேற்குமுக மிருந்துக்கொண்டு - தய
வாக தெர்ப்பையா சனத்திலமைந்தா, வானப்பா நாரேருக்கி நமசிவா
போற்றி-மனதாக ரேசகபூ ரகமுஞ்செய்யே. 1131

செய்யப்பா கும்பகத்தி லறிவால்நின்று-செயமான சங்குமணி கையி
ல்வாங்கி, பையப்பா நசிமயவென் றுசொல்லி-பதறும னூற்றெட்டு செபி
த்தால்மைந்தா, மெய்யப்பா நினைத்தவண்ணை மாகருஷணமாகும்-மேலான
வித்தையிலே யதிகவித்தை, தைய்யப்பா வுதவுவது போல்மைந்தா-சாட்
டிறோ மாகருஷணத்தைக் கருத்தாய்ப்பாரே. 1132



பாரப்பா குடவணியே தகடுதட்டிப்-பத்தியுடன் நசிமயவ வென்று
மாறி, சேரப்பா கருத்தொட்டு நன்றாய்ப்பூசி சேர்மையுடன் மாணிடர்க்
குக் கட்டிருக்கால், ஆரப்பா அறிவார்ஆ கருஷணத்தின்போக்கு-அம்பரத்
தை யறிந்தவர்க ளறிவாரையா, தேரப்பா மனதைநன்றாய்த் தேர்ந்து
கொண்டு-தேறினபின் அஷ்டகன்மச் செயலைப்பாரே. 1133

வித்வேஷணம்.

பாரப்பா ஆகருஷ ணத்தைச்சொன்னேன் - பத்தியுடன் வித்வே
ஷணத்தைப் பகரக்கேளு, காரப்பா நால்முகங்கள் சுத்திபண்ணிக் - கம்
மெனவே திருநீறுந் தனமாய்ப்பூசி, ஆரப்பா அறிவார்கள் ஆசனத்தின்
பலகை-அப்பனே வடமேற்கு வாய்மைப்பற்றி, தேரப்பா மேல்மூலப்
பதியில்நின்று, செம்மையுட னெட்டியணிக் கையில்வாங்கே. 1134

வாங்கிநன்றாய் ரேசகபூ ரகமும்பண்ணி - வரிசையுடன் கும்பகத்தில்
மனத்தைவைத்து, பாங்குபெற மயவசி யென்றுமாறிப்-பத்தியுட னூற்
றெட்டு செபித்தால்மைந்தா, தாங்கியே வித்தெடுத்து பூமியிலுளனி-
தன்மையுட னீர்வார்க்க ஷணத்திலமைந்தா, வீங்கதிகொண் டேவளர்
ந்து காய்க்குமப்பா-வித்வேஷ ணத்திறுட ஆண்மைதானே. 1135

தானென்ற [illegible]ந்தோலை நறுக்கிமைந்தா-தயவாக மயவசி யென்று
மாறி, ஊனென்ற கருத்தொட்டுத் தடவிமைந்தா - உறுதியுடன் மாணி
டர்க்குக் கட்டிருக்கால், வீனென்ற பிரமையெல்லாந் தீருந்தீரும்-வித
மான பில்லிவஞ் சனைகள்தீரும், தேனென்ற தேகமது செம்மை
யாகும் - சிவசிவா வித்வேஷணத்தின் திறத்தான்பாரே. 1136

பேதனம்.

பாரப்பா வித்வேஷ ணத்தைச்சொன்னேன் - பண்பான பேதன
த்தைப் பகரக்கேளு, தேரப்பா மனதைநன்றாய்ச் சுத்திபண்ணி-சிவசிவா
வென்றுதிரு நீறுபூசி, சேரப்பா ஆசனந்தான் தேவதாருஞ் - செம்மை
யுடன் குபேரனுட திசையைநோக்கி, காரப்பா கருங்காலியின்மேல் கருத் 1137
தைவைத்துக்-கருவான முத்துமணிக் கையில்வாங்கே.

வாங்கிமன தொன்றாகி மயவசியென்று - வரிசையுட னூற்றெட்டு
வளமாயோதச், சாங்கமாய்க் கண்டதெல்லாம் பேதனமேயாகுஞ்-சமரச
மா யெடுத்ததெல்லாம் பேதனமேயாகும், பாங்குபெறப் பேதனத்தின்
வகைசெய்தாக்கால்-பாரினுள்ளோ ருன்னுப்பதம் பணிவாரப்பா, ஆங்க
தனை ஆங்கதுகொண் டேட்டெச்சித்தும் - அரகரா மனதடங்கி அறிவாய்ச் 1138
செய்யே.

செய்யப்பா இரும்பினால் தகடுசெய்து-தீர்க்கமுடன் நயவசிம வென்று
மாறி, மெய்யப்பா கருத்தொட்டுத் தடவிமைந்தா - மேதினியில் மாணி
டர்க்குக் கட்டிருக்கால், பையப்பா நோய்களப்பே தனமாய்ப்போகும்-
பார்தனிலே ஒருவருக்கும் பகர்வேண்டாம், மையப்பா பூரணத்தின் கரு 1139
விதிலே-மார்க்கமுட னெட்டுவகை சித்தும்பாரே.

பாரப்பா அஷ்டகர்ம மெட்டுஞ்சொன்னேன் - பதிவான தசதீட்சை பெற்றோர்க்காமே, சேரப்பா தசதீட்சை சும்மாவாமோ - சேர்மையுடன் மன்றாரிமை யாறுலிமைந்தா, காரப்பா மனதுநிமை வுறுமைக்கண்டு - கருணையுடன் கொட்டிப்பார் தசமாந்தீட்சை ஆரப்பா யாருமுந் தசதீட்சை பெற்றோர் - அவரிடமா யஷ்டசித்து மாகுந்தானே. 1140

தானென்ற அகம்போக்கித் தான்தானாகித் - தன்மையுடன் குருபதந் தீற் சார்ந்துகொண்டு, வானென்ற காயாதி கற்பங்கொண்டு - வுறுமையுடன் பூரணத்தி லொடுங்கிமைந்தா, தேனென்ற மதியமுதங் கொண்டால்மைந்தா - செம்மையுடன் சடலமது வழுத்துப்போச்சு, நானென்ற ஆணவங்க ளற்றுகல்ல - நலமான காலதுவு மசந்துபோச்சே. 1141

போச்சப்பா பூரணத்தை மறந்தாலித்து - பொய்யாகு மென்றன்மேல் குற்றமில்லை, பாச்சப்பா பூரணந்தான் மதியமுதமாகும் - பரமான சுழிமோட்ச மதுவேயாகும், ஆச்சப்பா வாசிதனக் குயிருமாகும் - அருளாகும் பொருளாகு மாதாவும், பேச்சப்பா தொனிக்குமொரு சத்தமாகும் - பேசாத சத்தமடா சத்தசிவமாச்சே. 1142

ஆச்சப்பா சத்தசிவஞ் சத்திசிவமாச்சு - அப்பனே சத்திசிவ மறிந்துக்கொண்டு, பாச்சப்பா காலசிவம் மாலைசத்தி - பக்குவமாய் சேர்மையுடன் பூசைபண்ண, மூச்சப்பா வோடாது ரூன்பின்றக - மூலைகண்டால் கைலாச முடிவுங்காணும், காச்சப்பா மவுனத்தி லமுதமுண்டு - கற்பூர தீபனைக் கண்டுற்பாரே. 1143

கண்டுனை கண்ணறிந்து கனலைத்தாண்டிக் - காலறிந்து யோகமதாய்க் கருத்தாயின்றால், விண்டுனை அருதமது அருவிபாயும் - விள்ளாதே மதியமுத மவுனமாகும், சொன்றுனுந் தெரியாது மவுனப்போக்கு - தொட்டுமிகக் காட்டினதால் தோணுந்தோறும், பொன்றுனை கமலமடா பிர்மமாச்சு - பொற்கமல மானதொரு அண்டமாமே. 1144

அண்டமுடன் பிண்டமதை யார்தான்காண்பார் - அரகரா அண்டபிண்ட மாதியந்தம், விண்டாது மாதியந்த மறியப்போமோ - விள்ளுகிறேன் புலத்தியனே நன்றாய்க்கேளு, கண்டாலுங் காணாது நாதவிந்து - கருவாகச் சொல்லுகிறேன் காலதலையுமாச்சு, உண்டான காலதலையில் மனம் விண்டுச்சு - உறுதியுள்ள மனவிண்ணுஞ் சத்திசிவமாச்சே. 1145

சத்திசிவம்.

சத்தியென்ற சத்திதனை யார்தான்காண்பார் - தவமான சிவமதனை யறியமாட்டார், புத்தியுடன் ரெண்டையுந்தான் சொல்லக்கேளு - புதுமையுள்ள சத்திசிவம் ரவிமதியுமாச்சு, பத்தியுள்ள ரவிமதிதான் காரசாரம் - பாங்கான காரமடா ரவியுமாச்சு, வெற்றியுள்ள மதியதுவுஞ் சாரமாச்சு - வேதாந்த தத்துவமு மிதுவேயாச்சே. 1146



ஆச்சப்பா ரவிமதியி லாண்மைகேளு - அப்பனே குருவின்றுச் செய்யுமார்க்கம், நீச்சப்பா மதிதனிலே ரவியாய்நின்று - நினைவுதமே மாறியவர் ரவியைக்காணார், பேச்சப்பா ரவிசாரு மாக்கர்தானும் - பிறந்திறந்து மாள்வார்கள் பேயைப்போலே, பாச்சப்பா இடைகலையை ரவியிற்சேரும் - பக்குவமாய்ச் சேர்ந்திறந் பாலனுமே. 1147

பாலறிந்து பால்பொசித்துப் பதியில்நின்றால் - பக்குவமாய்த் தமர்வாசற் பூட்டுந்தோணும், காலறிந்து கால்பிடித்து வாசிபூட்டிக் - கலங்காமல் நின்றதினால் கால்தான்சென்று, மேலான தமர்வாசற் பூட்டிடைந்தா - விசையாக நிற்குமடா வாசிசென்று, சேலான தமர்வாசல் திறந்தால்மைந்தா - செம்மையுடன் பூரணம்கால் காணலாமே. 1148

காணலாம் பரப்பிர்மக் கபாலந்தன்னைக் - கருவான கபாலமடா கயிலாசமாச்சு, பேணலாம் கயிலாச மேறிச்சென்று - பிலத்தபுத்தி யறிவினு லமுதங்கொண்டு, பூணலாம் பூரணத்தி லமுதங்கொண்டால் - போதையென்ன சதாபோதை புகழ்ந்துகாணும், தோணலா மப்போதை தன்னில்நின்று - துலங்கலா மத்வைத நிஷ்டைகேளே. 1149

கேளப்பா ஆதியிலே மேருபூசை - கெணிதமுடன் செய்ததினால் பொதிகைமுனியானேன், நாளப்பா ஆண்டொன்றி லகத்தியனுமானேன் - நலமான மேரினுட அமுதங்கொண்டேன், காலப்பா விசையறிந்து கயிலைசென்றேன் - கலங்காமல் காயாதி கற்பங்கொண்டேன், ஆளப்பா அதினாலே கும்பமுனியானேன் - அரகரா மேரினுட வுண்மைதானே. 1150

மேருபூசை.

பாரப்பா மேரினுட பூசைசொல்வேன் - பத்தியுடன் புலத்தியனே நன்றாய்க்கேளு, காரப்பா சாணமெலுஞ் சந்தனாவினாய் - கருவாகச் சந்தனத்தின் கட்டைவாங்கி, சேரப்ப பலகைதன்றாய் சேர்த்துக்கொண்டு - நேரப்பா பலகைதி மெதுவா திறமாகக் கால்நாலுங் கடைச்சல்போட்டு, ய்ப்பண்ணி - நேர்மையுள்ள பூசைவகை முறையைக்கேளே. 1151

கேளப்பா தேகசுத்தி பண்ணிக்கொண்டு - கிருபையுட னுத்தனமாய் நீறுபூசி, வாளப்பா பலகையின்மேல் நீறுசாத்தி - வங்கென்று தான்பரித்து வணமேசெய்து, கேளப்பா கரயோசுஞ் செய்துகொண்டு - செம்மையுடன் வடமாலை சிறப்பாய்ச்சாத்தி, கோளப்பா மந்திரத்தை உச்சரித்துக் - கூர்மையுட னருச்சனைக்கு மலர்தான்கொய்யே. 1152

கொய்தமெல்ல அருச்சனைகள் செய்துமேயுங் - கூர்மையுடன் மனம்பதிய அறிவில்நின்று, உய்தமுடன் தாம்பூலம் பால்பழங்கள்வைத்து - உண்மையுடன் தேங்காய்தா னுடைத்துப்பரப்பி, சைதன்னிய மாகவே தீயுடைத்துவைத்துத் - தன்மையுடன் தேசகந் நசுமும்பண்ணி, தய்தமுள்ள கும்பகத்தில் பராபரத்தைநோக்கி - சத்திசிவ யோகபிராண யாமம்பண்ணவே. 1153

### பிரமநிஷ்டை.

பண்ணியபின் பிர்மநிஷ்டை தன்னைக்கேளு - பதிவாகச் செம்மை
யுட னிருந்துகொண்டு, புண்ணியனே விந்துமுத் திரையேசெய்து - பூர
ணமாய் ரேசகபூ ரகமும்பண்ணி, சன்னிதமாய் கும்பகத்திற் சார்ந்து
கொண்டு -சமரசமாய் மாதாவைப் பூசைபண்ணி, கண்ணியே பிராணயம்
பண்ணிக்கொண்டு - கலமான திருநீற்றைப் பூசுவாரே. 1154

பூசியே திருநீற்றிற் பணவிடைதான்கொள்ளப்- புதுமையுள்ள மாத்
அக லாதுமைந்தா, நேசமுடன் ஆண்டொன்றிற் பூசைபண்ணி - நேர்
மையுடன் கொண்டதினல் தேகஞ்சித்தி, வாசமுள்ள மலரொளியில்
மனதைவைத்து - மனதாகப் பூரணத்தை மைந்தாமைந்தா, பாசமுடன்
பதிந்துபூ ரணத்தைநோக்கப் -பரப்பிர்ம மானதொரு தேகமாச்சே. 1155

### விஷ்ணுநிஷ்டை.

ஆச்சப்பா பிர்மநிஷ்டை சொன்னேன்மைந்தா -அன்பான விஷ்ணு
வுட நிஷ்டைகேளு, பேச்சப்பா சுகாசனமா யிருந்துகொண்டு-பேணியே
யிடதுகால் வலதுகால்மேல், பாச்சப்பா விந்துமுத் திரையைச்செய்து-
பதிவாக வும்மெனவே தியானம்பண்ணி, மூச்சப்பா முனையடக்கப் பிரா
ணயஞ்செய்து - முழுநீறத் தனமாக மெய்யிற்பூசே. 1156

மெய்நிறைய விபூதியுத் தனமாய்ப்பூசி - மேருவ சக்கரத்தை நிதா
னம்பண்ணி, கைநிறைய மலரெடுத்துக் கருணை க - கருத்துறவே
சிவயவசி யென்றுசாற்றி, தொய்தமுடன் வடமா ' பால்பழங்க
வைத்து-சுகமாகத் தேங்காய்த்தாம் பூலம்வைத்து, செய்பாகந் தவரா
மல் தூபமொடு தீபம்-செம்மையுடன் தான்படைத்து நிர்க்கங்கேளே.

நிர்க்கமே சுழிமுனையில் ஒங்கென்றேட்டித்-திறமாக கிரியையை மூலத்
தானி, மார்க்கமுடன் ரேசகபூ ரகமும்பண்ணி -மருவியே கும்பகத்தில்
மனதாய்நின்று, சேர்க்கையுடன் பிராணயஞ் செம்மையாகத்-திறமாகச்
செய்தபின்பு சிவசிவாவென்று, ஏர்க்கையுடன் சக்கர விபூதிபூசி-இன்பமு
டன் பணவிடையுட் கொண்டுகேளே. 1158

கேளப்பா இப்படியே பூசைபண்ணிக்-கிருபையுடன் குருமொழியைக்
கடந்திடில்லூ, ஆளப்பா பூரணந்தான் சொன்னபடிகேட்கும் - அப்பாத்
தின் தரிசனமு மதுகாய்க்காணும், நீளப்பா மனதுகந்து அறிவிற்சேர்ந்
தான்-நினைத்தபடி யேயுனக்கு நினைவாய்க்காணும், சேலப்பா வாசியை
நீ வாசிவாவென்று-சிந்தைமனதொன்றாக அறிவிற்கூடே. 1159

கூடிநின்று வாசியைநீ குறித்துப்பார்த்து - கும்மெனவே அம்பரத்
தின் குறிகண்டோட்டி, நாடியே நின்றதினல் சிவயோகமாச்சு-நலமான
தசநாதங் கேட்கலாச்சு, தேடிநின்ற வாசிபடா பூரணமேயாகும் - சிவ
சிவா பூரணமே தெய்வந்தெய்வம், ஆடிநின்று அவேந்தாலும் பூரணத்
தைக்காணும்-அகாரமுடன் உகாரம்ரெண்டு மழுத்திப்பாரே. 1160



### ருத்திரநிஷ்டை.

யாரப்பா மாலினுட நிஷ்டைசொன்னேன் - பரிவாக ருத்திரநிஷ்
டை பகரக்கேளு, காரப்பா கால்முகங்கள் சுத்திபண்ணிக்-கருணையுடன்
விபூதியுத் தனமாய்ப்பூசி, கோரப்பா நேர்மையுட னிருந்துகொண்டு கீழே
வாக வலக்காலை யிடக்கால்மேலும், தோப்பா இடக்காலை வலக்கால்
மேலுஞ்-செம்மையுட னிதானித்துப் பிராணயம்பண்ணே. 1161

பண்ணப்பா பிராணயம் பண்ணிக்கொண்டு-பலகையின்மேல் மேரு
வைநீ பதிவாய்ச்செய்து, உன்னியே மலரெடுத்து வைத்துக்கொண்டு-
ஓங்கார சத்திசிவ மென்றுசாத்தி, புண்ணியனே வடமாலைப் பால்பழங்
கள்வைத்துப் - புனிதமுடன் தேங்காய்தாம்பூலஞ்சாத்தி, தன்னிமை
யாய்த் தூபதீபங்கள்காட்டிச்-சமரசமாய் ரேசகபூ ரகமும்பண்ணே. 1162

பண்ணுவது கும்பகத்திற் பதிவாய்நின்று - பரமகுரு மாதாவைப்
பணிந்துகொண்டு, உன்னுவாய் ஓம்கிலீம் சிவாயவென்று-உத்தமனே
தோத்திரத்தை நன்றாய்ச்செய்து, கண்ணுமேற் புருவமதிற் கனலேத்
தாண்டிக்-கர்ப்பூர தீபமதைக் கருத்தாய்ச்சேவி, மனதுவதில் தன்னில்
வெகு நேர்த்தியாகி-வளருடா அஷ்டசவு பாக்கியந்தானே. 1163

தாவென்ற சக்க னேர்பூசித் தயவாகப் பணவிடைதா னுட்கொ
ண்டாக்கால், வாவென்ற ருத்திரியாள் கேட்டவரமெல்லாம் - உரிமை
யுடன்-தாவீவாள் மைந்தா, தேவென்ற தேகமது எடுத்தால்
ந்தா-சிவசத்தி பூசையைநீ செய்யவேணும், ஐயென்ற தேகத்துக்
குருவென்ன உத்தமனே சத்திசிவ பூசைதானே. 1164

சத்திசிவ பூசையென்று ஆர்தான்காண்பார் தயவான மேருவல்
லோ சத்திசிவமாச்சு, முத்திகொண்ட சத்திசிவ மென்னவென்றால்
மூர்க்கமுள்ள நாற்பத்து முக்கோணமொன்று, பத்திகொண்ட நிதம்பர
சக் கரந்தானென்று பார்மகனே விதியுடைய பரிசுகேளு, புத்தியுட
னேற்பத்து மூன்றுக்குந்தான் பூரணமாய் நின்றநிதம் பரமதாச்சே. 1165

ஆச்சப்பா சத்திக்கு நிவன்தான்கண்டு அன்பான சிவத்துக்கா நே
சங்கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை சத்தியுடனேசம் மெய்யான தேக
மென்ன வென்றுசொல்லமைந்தா, மூச்சப்பா வொடுக்கநின்ற சகாரதம்
மூர்க்கமுள்ள காலமுக் கோணமப்பா, பாச்சப்பா முக்கோணந் தன்னி
லேதான் பதமான நிதம்பரமாம் விந்தையாச்சே. 1166

பாச்சப்பா விந்துவுட னுகஞ்சேரப் பதிவான பரத்துக்கு வயிறு
மாச்சு, நீச்சப்பா வுயிரதிந்து வுயிரிற்சேர்ந்தால் நிசமான வாலையுநி
திர்த்தஞ் செய்வாள், ஆச்சப்பா வாலையவள் நிர்த்தஞ்செய்தால் அப்ப
னே வாசியது அகலாதையா, பேச்சப்பா தொனித்ததொரு வாசியின்
குல் பிசகாது காயசித்தி அனைவோர்க்குமமே. 1167

## மகேசுரநிஷ்டை.

ஆமப்பா ருத்திரநிஷ்டை சொன்னேன்மைந்தா அரகரா மயேசுர
த்தி நிஷ்டைகேளு, தாமப்பா இல்லறத்தைச் சுத்திபண்ணி தம்பனத்
தால் நிருநீறுத் தனமாய்ப்பூசி, நாமப்பா சொல்லுகிறேரும் பிராணாயத்
தை வழுவாமல் மனதாரிமை யாகச்செய்து, சேமப்பா செம்பென்ற
பலகைதன்னில் செம்மையுடன் இருநிறைப் பாத்திற்கேனே. 1168

கேளப்பா மேருகத் தாத்தைநன்றாய் செனிதமுட னிதானித்துக்
கிருபைகூர்ந்து, ஆளப்பா மலராலர்ச் சனைகள்செய்து அன்பாக வட
மாலை அன்னம்படைத்து, வாளப்பா பலபழந்தாம் பூலம்வைத்து வரி
சையாய் தேங்காயை யுடைத்துவைத்து, நிளப்பா தாபமுடன் தீபங்
காட்டி நிச்சயமாய் தோத்திரத்தை நினைவாய்ச்செய்யே. 1169

செய்யப்பா செம்மையுட னிருந்துக்கொண்டு திறமாக வலதுகா லு
பரத்தாக்கி, பையப்பா இடதுமுழங் காலில்வைத்து பண்பாக ரேசக
பூரககும்பண்ணி, மெய்யப்பா கும்பகத்தில் அங்கென்றேட்டி மேலா
ன தியமதை நோக்கிமைந்தா, வையப்பா வாசியைதீ தியத்தன்னில்
வைத்ததிறு லதிலுடைய மகிமைகேளே. 1170

மகிமையென்ன மயேஸ்வரியாள் தீர்த்த[illegible]ய்வாள் மனதுகந்து
கேட்டதெல்லாம் வளமாயீவாள், சுகமையில் [illegible] பூரணத்தை யூட்டு
வைப்பாள் உண்மையுடன் தன்மையா யுதவிசெய் வாள், அகம்வளரும்
பொருள்வளரு மாயிபூசை அன்புடனே செய்த[illegible] யாகேளு, சகம்
வளரும் சக்கரத்தின் விபூதிதன்னைச் சுத்தமுடன் தானெடுத்து வை
த்துப்போற்றே. 1171

போற்றிநன்றாய் மெய்க்கனிந்து வட்டோண்டாக்கால் பூலோக மன்
னரெல்லாம் வசியமாவார், பார்த்திபனே சகலசித்துங் கைக்குள்ளாகும்
பரமான கயிலாச தேகமாகும், சாற்றியதோர் சகலகலைக் ஞானந்தோற்
றும் தயவாக மதியமுதங் கசிந்துகாணும், ஆத்தியே மனந்தேற்றி அரு
ட்பாலீவாள் அரகரா மேரிறுட ஆண்மைதானே. 1172

## சதாசிவநிஷ்டை.

நாமென்ற மயேசுரத்தி னிஷ்டைசொன்னேன் சதாசிவத்தி னிஷ்
டைதனை சாற்றக்கேளு, வடமென்ற தேகமதைச் சுத்திபண்ணி உத்தம
மாய் நீறணிந்து உண்மையோற்றி, நாமென்ற் அகம்போக்கி நீதமெ
ன்று நன்மையுடன் ஒட்டியாணம் பந்தம்பண்ணி, கோமென்ற குரு
பதத்தில் மனதைவைத்து கூர்மையுடன் பிராணாயம் குணமாய்ச்செய்யே.

குணமாகச் செய்துபின்பு பலகைமீதில் கும்மெனவே நிறுத்துக்
குவித்துமைந்தா, மனதாக மேருவை தொனித்தப்பா வரிசையுட னுச
னத்தின் மேலேவைத்து, தனதாக மலரெடுத்தர்ச் சனையேசெய்து தன்
மையுடன் கும்பமொன்று தயவாய்வைத்து, கனமான கும்பகத்துக்
காடைசாத்திக் கருத்துறவே தேங்காய்வைத் தர்ச்சனைசெய்யே. 1174



செய்யப்பா அர்ச்சனைகள் செய்தபின்பு சிறப்பாக வடமாலை நன்றாய்
ச்சாத்தி, வையப்பா சகலர்க்கும் கனிவர்க்கங்கள் வளமான பரமானந்
தாய்வுலங்கள், மெய்யப்பா தேங்காய்க ளுடைத்துவைத்து விரும்பியே
தீபமொடு தூபங்காட்டி, வையப்பா தான்கூப்பித் தோத்திரமேசெய்து
கண்ணூக்கு நெற்றியிலே சதாசிவத்தைநோக்கே. 1175

நோக்கியே வாசிதனை அம்மென்றேத்தி நன்மையுடன் ரேசகபூ ரக
மும்பண்ணி, தாக்கியே கும்பகத்தில் சதாகம்மென்று தன்மையுடன்
தானிருத்திப் பூரணத்தைநோக்கி, வாக்குமன மொன்றாக வாசமவர்து வி
மகத்தான தீபவொளி யதனைக்கண்டால், நாக்குதனி சிறுக்கு நாசி
தனில்நின்றால் கலமான மனோன்மணியி னாட்டமதைக்காணே. 1176

காட்டமதைக் கண்டவுடன் தாயேயென்று நன்மையுட னெருமனை
தாய் யோக்தயோகில், கேட்டவரந் தானீவாள் இலேசமில்லை கேசரத்தின்
கேசரியாள் கிருபையாகும், வாட்டமிலா மனோன்மணிதா னருட்பாலீ
வாள் வரிசையுடன் கொண்டிடவே சித்தியாகும், தெட்டமுடன் சக்கர
த்தி வீதுதன்னைச் செம்மையுடன் தானினைத்து உட்கொள்வாயே. 1177

வாயார மந்திரத்தை [illegible]ழுத்தவேணும் மனந்தேர்ந்து பூசையிலே
நினைக்கவேணும், தேய[illegible]ன் செபதபங்கள் செய்யவேணும் நிலைமை
யுள்ள தலமதனைக் காணவேணும், தாயகமாய்ப் பூரணத்தைச் சாதித்தே
தான் சதாசிவம் கந்திமேற்கு சாரவேணும், சாயுச்சக் கலிபொசித்து
நிலைத்திடவேணும் தற்பமதை புண்டரீகத்தைக் காணுகானே. 1178

க[illegible]ணுகிற கண்ணனைந்து காணுகாணு கருவான கண்ணதுதான் மன
க்கண்ணு[illegible], வடறுகிற கண்ணனைந்து ஒளிதுறு உறுதியுள்ள வாசியிலு
ணவப்பாரு, தோணுகிற பொருளேது சுடரொளிதான்மைந்தா சுட
ராகி வெளியதுதான் பரமவெளியாகும், பேணுகிற வொளியது ஐய
ஐயா பின்மான கற்பூர வொளியைப்பாரே. 1179

ஒளியான பேரொளிதா னதியந்தம் உத்தமனே அறிவுடைய வுன்
மைகேளு, அழியாத மோட்சமடா அந்தவீடு அதுகட்கால் மேலே
வொரு அருபவீடு, தெளியாத அருபவீ டதனிலேதான் நின்றுமெய் தற்பு
ரத் தீபங்தோணும், மொழியாத நியமதி னருகிலேதான் மோனமுள்ள
அமுதாக மிருக்கும்பாரே. 1180

## மூலாதாரம்.

பாரப்பா பதியிலிருந்து அமுதங்கொண்டால் பசியாது காயமது சுற்று
ணரும், கோரப்பா வாசியது நிற்கச்செய்யும் நிச்சயமாய்ப் பூரணத்தை
க்கொண்டால், ஆரப்பா வணக்கிடு ஐயாஐயா அப்பனே ஆதா
மூலமிடம், காரப்பா மூலமதில் கணேசன்பாதம் கருணையுடன் நமோ
ன்று சுகித்துபோற்றே. 1181

போற்றியே மூலமதில் வாசிபூட்டிப் புகழ்மையுடன் ஓமென்று செபித்தாயாகில், பெற்றிய கேட்டதெல்லாந் தனைப்புரிவலமையுஞ் சிறப்பாக ஞானமீடத்தில் அகலாதின்று, வாழ்த்தியே கேட்டதெல்லா மீவார் பாரு வாசையுடனவர்கள்பதம் போற்றிடுக்காண், பார்த்திபனே சகலசவு பாக்கியமுண்டாம் பார்தனிலே பிரமரிஷி யாவாய்பாரே. 1182

சுவாதிஷ்டானம்.

பார்க்கல்ல ஆதார மூலஞ்சொன்னேன் பாலகனே சுவாதிஷ்டானைப் பரிசுசொல்வேன், எர்க்கையுடனம்மென்று வாசிகொண்டு இருத்திவிக ஆதியிலே பிர்மதேவர், மார்க்கமுடன் ஞானமிடத்தில் நிர்த்தஞ்செய்யார் மைந்தனே அவர்பதந்தனைப் பூசைபண்ண, சேர்க்கையுடன் கேட்டவரமீவாரையா செம்மையுடன் மனம்பதிந்து பூசைபண்ணே. 1183

மணிபூரகம்.

மன்னப்பா பூரகத்தின் வளமைசொல்வேன், பதிவாக யங்கென்று வாசிபூட்டு, விண்ணப்பா தானேசக்தி யிருந்தால்மைந்தா விஷ்ணுவுடன் லட்சுமியும விரும்பியேதான், நண்ணப்பா வுனதுவச மாவார்பாரு நயந்தாங்கேட்டதெல்லா மீவாரீவார், பொன்னப்பா வுலகமதில் சம்பத்தோடு புகழாக வாழ்ந்திடுவாய் மைந்தகேளே. 1184

அநாகதம்.

கேளப்பா அநாகதத்தின் திருவடிதன்னைக் கிருபையுடன் சிங்கென்று வாசிபூட்டி, ஆளப்பா சுழிமுனையை யழுத்திருக்க அகார ருத்திரருமருட்பாலிவார், வாளப்பா கேட்டதெல்லாம் வரிசையாக வரிசையுடன் தாம்கொடுப்பார் மைந்தாமைந்தா, காளப்பா நாளுக்கு நாளேமைந்தா நயந்தாங்க வருமடா பாக்கியந்தானே. 1185

விசுத்தி.

தானென்ற விசுத்தியுட சேர்மைகேளு நயவாக வங்கென்று வாசிபூட்டி, தேனென்ற குருபதத்தில் நிறமாயநின்றால் சிவசிவா மகேசுவரருங்கூடக் கூர்ந்து, ஊனென்ற மதியமுத மீவார்பாரு உகந்து கேட்டதெல்லாம் ஒருமையாக, கோனென்ற குருவருள் பெற்றுமைந்தா குவலயத்தில் ராஜரிஷி யாவாய்பாரே. 1186

ஆக்ஞை.

பாரப்பா சதாசிவத்தின் பெருமைகேளு பண்பாக யங்கென்று வாசிபூட்டி, சேரப்பா பூரணத்தை நோக்கிநின்றால் சேர்மையுள்ள சதாசிவனும் நிர்த்தஞ்செய்வார், காரப்பா அவர்பதத்தைப் பூசைபண்ணக் கருணையிலே மதியமுதம் கடாட்சிப்பார்கள், ஆரப்பா வுனக்கிதுபோல் சொல்லப்போறேன் அப்பனே கெவுனசித்திமாமே. 1187

மதிநேர்மை.

சித்தான மதியினுட சேர்மைகேளு திறமாக அம்மென்று வாசிபூட்டி, முத்தான பதநோக்கி நின்றால்மைந்தா முதன்மையான கோடிமதி காந்திகாணும், வற்றாத மதியமுத மருவிபாயும் மகத்தான அமுதமதை யருந்திக்கொண்டால், சித்தான தேகமதுக் கழிவேயில்லை தீர்க்க குருவெனவே விளங்குவாயே. 1188



ரவிநேர்மை.

விளங்கவே ரவியினுட காந்திசொல்வேன் வேகமுடன் உம்மெனவே விரும்பிச்சொல்லு. கலங்காமல் ரவிகோடி காந்திகாணுங் கண்மூக்கு மத்தியிலே காந்திகாணும். உளங்கனிய பூரணத்தைத் தொழுது போற்றி உறுதியுடன் நின்றிருந்தால் மைந்தாகேளு, துலங்குமடா வுன் தேக மதிபோல்மைந்தா அண்டாத மணிவிளக்கின் சேர்தியாரே. 1189

அக்கினிநேர்மை.

சோதியென்ற அக்கினியா மவுனவீடு சொல்லரிது சொல்லுகிறேன் ஞானக்காய்மைந்தா, ஆதியென்ற ஆதியடா அங்அம்மென்று அப்பனே ரேசகபூரகமும்பண்ணே. நீதியுடன் கும்பகத்தில் வாசிபூட்டி நின்றதிறு லக்கினியின் பிரமைசொல்ல, பாதிமதி யணிந்தசிவன் தன்னுற்கூடாப் பரமவொளி யொளியெனவே பகரலாமே. 1190

ஆமப்பா பகாறியா மோட்சவீடு அருளான அருள்பெருகு மாதிவீடு, காமப்பால் கானற்பால் சொலிக்கும்வீடு கற்பூர தீபமது காணும்வீடு, காமப்பா மதியகத்தின் மாலின்வீடு நல்வினையுந் தீவினையும் நாடும்வீடு, சோமப்பால் சொலிக்கும்பூரணத்தின்வீடு சொல்லாத சூட்சமடா மவுனவீடே. 1191

மவுனமென்ற வீடதிது மதிக்கயத்தள்ளி மகத்தான ரவிபெருகி ஒளியில்நின்றால், கெவுனமென்ற கெவுனமது கைக்குள்ளாகும் கேள்மகனே பூரணமும் உன்வசமேயாகும், நவிலவொண்ணாப் பூரணத்தை நாடிநின்றால் நரசென்மமில்லையடா காயன்காயன், பவமூலமானகுரு பாதம்போற்றிப் பத்தியுடனாயிரத்தெட் டிதழைப்போற்றே. 1192

போற்றுவது என்னவென்றால் மைந்தாகேளு பூரணமா மவுனமதை போற்றிக்கொண்டு, தேற்றுவது மனந்தேற்றி பூரணத்தைக் கொண்டு செம்மையுடன் மனந்தேற்றிச் செம்மையாகி, காத்துமனக் கருணையிலே கருத்தாய்ப்பூட்டிக் கருத்தாகப் பனிரெண்டு நூறைமைந்தா, பார்த்துமனம் பதியவொளி மவுனமாகப் பத்தியுடன் பார்த்திருந்தால் பலிக்குஞ்சித்தே. 1193

*நூலடக்கம்.

சித்தான சித்தெல்லா மிதிலேசொன்னேன் திறமான கருவெல்லா மிதிலேசொன்னேன், முத்தான இந்திரம யேந்திரசாலம் மூர்க்கமுள்ள ஜாலமெல்லா மிதிலேசொன்னேன், பத்தான முப்பூவி லனந்தஞ்சொன்னேன் பாலகனே சவுக்காரம் வெகுவாய்ச்சொன்னேன், விஸ்தாரமானமைப் போக்குஞ்சொன்னேன் வினயமதாய் மோடியையான் விளம்பினேனே. 1194

விளம்பினேன் செந்தூரம் நன்றாய்ச்சொன்னேன் விள்ளாத பர்பமெல்லாம் விளங்கச்சொன்னேன், தளம்பெறவே மேருவுடைய விபரஞ்சொன்னேன் தப்பாமல் செயநீரில் தன்மைசொன்னேன், உளங்கனிய கற்பமது விரித்துச்சொன்னேன் உண்மையுடன் விளையாட மோடிசொன்னேன், கலங்கமற அஞ்சனமு மாற்றஞ்சொன்னேன் காயாதிக் கற்பமதைக் கருதிச்சொன்னேனே. 1195

சொல்லேனே விந்தைமுதல் சமாதிகற்பஞ் சுருக்கான மந்திரமு மஞ்சுடகர்மம், என்னவிலான்று விதேகமுடைய கன்ருப்பசொன்னேன் இயல்பாக நாம்சொன்ன முறைகட்கெல்லாம், முன்னமே சொன்னதொரு குருக்கிரந்தான் மூக்கானும் நாற்றிருபதையும்பாரு, நன்மையாய்ப் பொருள்களெல்லாம் வெளியாய்த்தோனும் நலமான சூத்திரத்தை வெளிவிடாதே. 1196

வெளியாகச் சூத்திரத்தை வெளிவிடாதே வேதாந்த புத்தியினால் ஞானக்காரு, மொழியாக முன்சொன்ன அறுபதிலேதான் முக்கியமுன்ன கருக்களெல்லா மொழிந்துவைத்தேன், வழியாக சூத்திரமு மறைவையு ம்பார்த்தால் வகைதோறு மாயிரந் திருநூற்றும். தெளிவாக சொன்னேட்டியுங் கடைக்கப்பண்ணாவது சுத்தோர் கேட்டாக்கால், சொல்லொண்ணாதே. 1197

சொல்லவொண்ணாக் கருக்களெல்லாஞ் சொன்னதாலே ஞானமுடன் மனதறிவாற் பாருபாரு, நல்லமன ஞானமுள்ளோர்க்கு ஞானகற்புதல்வா புலத்தியனே ஐயாகேளு, வல்லமையா யனந்தடியை வணங்கிக் கொண்டு மனதான வேதநூலுக்கு யிந்தநூலில், உள்ளபொருளிதுவென்று பாதியோவாய் உத்தமனே மற்றோர்க்கு யில்லையென்னே. 1198

இல்லையென்று ஆணையிட்டுச் சொல்லிப்போடு என்மகனே யென்மேலே ஆணையாணை; புல்லரென்ற புலையரிடம் நூல்காட்டாதே புத்தியைப் பற்றியனை அறிவில்லென்று, கல்லென்ற குகைதனிலே யிருந்துகொண்டு கருவான கருக்களெல்லா மெடுத்தாலும், தொல்லைவரும் வெளியாக்கம் பண்ணினோர்க்காற் சுகமாக மனதடங்கி யறிவித்தேனே. 1199

ஆதிவாக மனதடங்கி மவுனமாக அப்பனே நூலெடுத்துப் பார்பாரு, குறியான குருபதத்தில் குணமாய்வில்லு குணமில்லா தங்களிடங் கூடவேண்டாம், பரியான தங்கமடா பரப்பிரமமாச்சு பாலகனே தங்கமென்றால் பூரணமேதங்கம், நெறியான பூரணத்தைத் தினமும்சோதி சேரான பராபரத்தின் சார்வாய்முத்தே. 1200

அகஸ்தியர் சகலகலைக்ஞானமென்ற வழங்குகிற,

அமுதகலைக்ஞானம் 1200

முற்றிற்று.



உ

குமரன் துணை.

## புத்தகவிளம்பரம்.

இதனால் சகலகனவான்களுக்குந் தெரிவிப்பதாவது என்னிடம் அச்சிட்டுக்கொண்ட புஸ்தகங்களெல்லாம் சுத்தபிரதியாய் அச்சிட்டுத் தயாராயிருக்கிறது. அச்சிட்டுக்கொண்ட விலாசதாரிடம் எழுதி வி. பி. யிலாவது நேரிலாவது கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1. | அகஸ்தியர் பரிபூரணம் உரையும் அதன் சூத்திரம் உரை | 0—6—0 |
| 2. | ஷை பூரணச் சூத்திரம் உரையுடன் ... ... ... | 0—6—0 |
| 3. | ஷை வைத்திய ரத்தின சுருக்கம் உரையுடன் ... | 0—8—0 |
| 4. | ஷை பரிபாஷை கா வெளிவராதது ... ... | 0–10—0 |
| 5. | ஷை செந்தூரம் கா ... ... ... ... | 0—8—0 |
| 6. | ஷை அமுத கலைஞானம் கா ... ... ... | 1—0—0 |
| 7. | ஷை வைத்திய காவியம் கா ... ... | 0–12—0 |
| 8. | சட்டைமுனிவர் ஞானம் பின்ஞானம் உரை | 0—6—0 |
| 9. | பிரமமுனிவர் வைத்தியம் கா ... ... | 0—8—0 |
| 10. | புலிப்பாணி வைத்தியம் உரையுடன் ... | 0–10—0 |
| 11. | இராமதேவர் கிளிசோசகம் உரை ... ... ... | 0—6—0 |
| 12. | சுப்பிரமணியர் ஞானம் உரை ... ... ... | 0—6—0 |
| 13. | ஷை ஞானம் ... ... ... ... | 0–12—0 |
| 14. | உரோமரிஷி பரிபாஷை கா வெளிவராதது ... | 0–12—0 |
| 15. | கர்ப்பக்குகை கா ... ... ... ... | 0—8—0 |
| 16. | புலிப்பாணி வைத்தியம் ... ... ... | 0–12—0 |
| 17. | திருமூர்த்தி திருமந்திரம் 1500 ... ... | 1—8—0 |
| 18. | பாம்பாட்டி கன்னம் 300 வெளிவராதது ... | 0–12—0 |
| 19. | ஷை வைத்தியம் 150-ம் சுருக்கம் 50-ம் ஆக 200 ... | 0—8—0 |
| 20. | ஷை செந்தூரம் 300 வெளிவராதது ... ... | 0–12—0 |
| 21. | ஷை வைத்தியம் 300 வெளிவராதது ... ... | 0–12—0 |
| 22. | ஷை வைத்திய சிந்தாமணி 700 ... ... | 1—8—0 |
| 23. | சொரூபாரூடம், சொரூப பஞ்சாட்சர ஆரூடம், சத்தியாரூடம், மந்திரசக்கரங்களுடன் ... | 0—8—0 |
| 24. | சிவாரூடம், தேவியாரூடம், நாகாரூடம் மந்திர சக்கரங்களுடன். ... ... ... | 0—8—0 |
| 25. | சித்தாரூடம், சர்ப்பாரூடம், மந்திராரூடம் மந்திர சக்கரங்களுடன். ... ... ... | 0—8—0 |
| 26. | மேற்கூறிய 9 ஆரூடங்கள் மந்திர சக்கரங்களுடன் ஒரே கட்டடம் கலிக்கோ பயிண்டு ... ... | 1—8—0 |

இ. ராம. குருசாமிக் கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

## வைத்திய வாத யோக ஞானக்கோர்வை

ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் பார்க்கவேண்டியது.

| | | | |
|---|---|---|---|
| 1வது | பாகம் | திருமூலர், சுப்பிரமணியர் ஞானத்திரட்டு | 1—0—0 |
| 2வது | ” | போகர் காலாங்கி தந்திரங்கள் ... | 1—0—0 |
| 3வது | ” | கடைப்பிள்ளை புசுண்டர் சாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 4வது | ” | மச்சமுனிவர் வைத்திய வாதஞானத்திரட்டு | 1—0—0 |
| 5வது | ” | சுந்தரானந்தர் வாதயோக ஞானத்திரட்டு | 1—0—0 |
| 6வது | ” | இராமதேவர் தன்வந்திரி ஞானத்திரட்டு | 1—0—0 |
| 7வது | ” | சட்டைநாதர் வாதயோகஞானத்திரட்டு | 1—0—0 |
| 8வது | ” | உரோமரிஷி யோக ஞானசாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 9வது | ” | கருவூரார் வைத்திய வாத ஞானத்திரட்டு | 1—0—0 |
| 10வது | ” | அகஸ்தியர் யோகஞான சாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 11வது | ” | புலஸ்தியர் வாதயோக சாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 12வது | ” | நந்தீசர் வைத்திய ஞான சாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 13வது | ” | தன்வந்திரி வைத்திய சாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 14வது | ” | காலாங்கிநாதர் ஞான சாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 15வது | ” | கொங்கணர் வாதயோக ஞானத்திரட்டு | 1—0—0 |
| 16வது | ” | கோரக்கர் ஞான சாஸ்திரத்திரட்டு ... | 1—0—0 |
| 17வது | ” | தேரையர் வைத்திய ஞானசாஸ்திரத்திரட்டு | 1—0—0 |
| 18வது | ” | பிரமமுனிவர் யோகஞானசாஸ்திரத்திரட்டு | 1—0—0 |

மேற்கூறிய பதினெட்டுபாகங்களில் 9 பாகம் வரை இப்பொழுது அச்சிட்டு தயாரிலிருக்கிறது மற்றும் 9 பாகங்கள் அச்சிட்டு வருகிறது கூடியசீக்கிரம் வெளியிடலாகும்.

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக ஞான சாஸ்திரங்களின்

## பரிபாஷை வெளிப்படை அகராதி

இப்புத்தகம் ஒவ்வொரு மகான்களிடமும், வைத்தியர்களிடமும், மற்றுமுள்ளோர்களிடமும், கைவசமிருக்கவேண்டியது அவசியம் ஏனெனில்:— பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கும் சாஸ்திரங்களனைத்தும் அவைகளில் அனேகம் மறைபொருளாகவேயிருப்பதால் அவைகளைத் தெளிவாய்த் தெரிந்து கொள்வதற்கு இப்பரிபாஷை வெளிப்படை அகராதியே தகுதியானது எந்தப் பரிபாஷைப் [illegible] இந்த அகராதியில் பொருள் பார்த்துக்கொள் [illegible] பதிப்பாய் அச்சிட்டிருக்கி [illegible] வேண்டியவர் [illegible] காரிடம் கேரிலும், வி. பி. [illegible] மூலமாகவும் [illegible] பெற்றுக் கொள்ளலாம். புத்தகம் 1-க்கு விலை ரூ. 2.

இ. ராம. குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.